Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 18.00


ஒக். 27- நவ. 02, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 637



## மஹிந்த - ரணில் விஞ்ஞாபனமும் மக்களின் எதிர் பார்ப்பும்






## அரசின் மனிதாபிமானமும் புலிகளின் தந்திரோபாயமும்

## 'டிசம்பர் 26' சுனாமி திரைக் காவியமாகிறது!


## ஆசிய - அராபிய திரைப்படங்களில் அதிகரிக்கும் ஆபாசங்கள்

## பசித்தோரை பராமரிப்போம்

“இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு” என்ற அறக்கருத்தை இன்று இந்துக்களாகிய எம்மில் ஒரு சிலரே கடைப்பிடித்து வாழ்கிறார்கள். விருந்தோம்பும் பண்பானது ஆதியிலிருந்தே இந்துக்களால் மிகவும் போற்றிப் பேணப்பட்ட அறச்செயலாகும். ஆனால் இன்று வளர்ந்துவரும் நாகரீக உலகிலே ஆடம்பரத்திற்காகவும் தமது தனிப்பட்ட புகழை உயர்த்திக்கொள்ளும் நோக்கிலும் செயற்படுவோர், ஏழைகளுக்கு அல்லது வீடு தேடிவரும் பசித்தோருக்கு உணவளித்து அவர்களின் பசியைத் தீர்க்க வேண்டுமென்று எண்ணுவதில்லை. இறைவனைத் தியானிப்பதற்காகவும், உடல்நலனுக்காகவும் மட்டுமின்றி பசியின் தன்மையை சகலரும் அறிந்து பசித்தோருக்கு உதவ வேண்டும் என்பதற்காகவே இந்து மதத்திலே பல விரதங்கள் அனுஷ்டிக்கப் படுகின்றன. மேலும் விரத காலத்தில் இலைகளில் உணவு பரிமாறப்படுவது தூய்மைக்கும், உடல் நலத்திற்கும், மட்டுமன்றி சாப்பிட்ட பின் அந்த இலையை ஆடு, மாடுகள் உண்டு மகிழும் என்ற தூரநோக்கிலுமாகும். இந்து மதத்திலே பல நாயன்மார்கள் இறைவனிடம் படிக்காசு பெற்று வறியவர்களின் பசி தீர்த்ததாக அறிய முடிகிறது. மேலும் விருந்தினராகவோ, சிவனடியாராகவோ வந்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு எஞ்சியதையே தாம் உண்ணும் உன்னத மரபு கொண்டவர்கள் இந்துக்கள். அத்துடன் ஆடம்பரத்திற்காகச் செய்யப்படும் பெரிய யாகங்களைவிட பசித்த ஒருவனுக்கு உணவளிப்பது மேலானது. எனவே ஏழைகளின் வயிற்றுக்கு இடப்படும் உணவே நாம் சேர்த்து வைக்கக் கூடிய நிலையான சேமநிதி என்பதை அனைவரும் உணர்ந்து விருந்தோம்பல் பண்பிற்கு முன்னுரிமை கொடுப்போமாக....

சிவா, வவுனியா.

# ஆன்மீகம்



## எல்லோரிடமும் அன்பாயிருங்கள்

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தமது பிள்ளைகளாகிய எமக்கு அன்பான வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார். அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். இவ்வுலகில் வாழும் அனைவரும் ஒன்று என்ற மனப்பக்குவத்துடன் எம் அயலவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு அவர்களுக்குப் பெரும் துணையாக இருந்து அவர்களை ஆறுதல்படுத்துவோம். அன்பு செய்வோம். அப்போது நாம் ஆண்டவரின் அன்புப் பிள்ளைகளாகி விடுவோம். விண்ணரசில் நாம் தங்குவதற்கு ஓர் வாசஸ்தலத்தினை ஆண்டவர் நமக்கு ஏற்படுத்துவார். முடிவில்லா நித்திய வாழ்வில் ஆண்டவரோடு ஒன்றித்து வாழும் பேறுபெற்றவர்களாவோம். ஆகவே என்றும் அயலவர்களுடன் அன்புடன் வாழப் பழகிக்கொள்வோம்.

“உன்னைப்போல் உன் அயலானை நேசி”.
என்றென்றும் ஆண்டவர் உன்னுடன் இருப்பார்.

-மேரி ஸ்ரீபன், மன்னார்.

## ரமழானின் நான்கு விஷயங்கள்

புனித ரமழானில் நாம் நான்கு விஷயங்களை அதிகமாகச் செய்து வர வேண்டும். அவற்றில் இரண்டு விஷயங்கள் உங்களுடைய இரட்சகனாகிய அல்லாஹ்வை நீங்கள் திருப்திப்படுத்துவதற்காக. இன்னும் இரண்டு விஷயங்களை விட்டும் நீங்கள் தேவையற்றவர்களாக இருக்க முடியாது.

நீங்கள் உங்கள் இரட்சகனை திருப்திப்படுத்தக் கூடிய முந்திய இரண்டு விஷயங்கள் ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ என்ற திருக்கலிமாவை அதிகமாகக் கூறுவதும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவதுமாகும்.

நீங்கள் தேவையற்றிருக்க முடியாத மற்றும் இரண்டு விஷயங்கள் நீங்கள் அல்லாஹ்விடம் சொர்க்கத்தைக் கேட்பதும் நரகத்தை விட்டுப் பாதுகாப்புத் தேடுவதுமாகும்.

இறை தூதர் அவர்கள் கூறுகின்றார்கள் : “இப் புனித ரமழான் மாதத்தின் ஒரு வினாடி நேரத்தைக் கூட வீணாகக் கழித்துவிடக் கூடாது” என்று.

ஆதாரம் : தர்கீப்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.634



### நாமறியோம்

இது
களையால் வந்த
அசதி நித்திரையா
அல்லது
கொலையால் வந்த
மீளா நித்திரையா?
நாயறியும்
நாமறியோம்.

-அ.சந்தியாகோ, கண்டி.

### பழக்காதே!

உறங்கும்
இலங்கையனே!
நாளை இதே இடத்தில்
நீ இறந்து கிடக்கலாம்...
அதனால்
உன்னருகில் படுக்க
நாயைப் பழக்காதே...
உன்னைச் சுடுபவனை
விட
நாய்க்கு
நன்றியுணர்வும்
பகுத்தறிவும்
அதிகம்.

-ஏ.என்.அப்துல் றஹ்மான், பட்டியடிப்பிட்டி.

பரிசுக்குரிய கவிதை

### நடுத்தெருவில்

இவர்கள் நினைத்தால்
ஏ-நைன் பாதைத் தடை;
அவர்கள் நினைத்தால்
ஐரோப்பிய பயணத்தடை
நாங்கள் மட்டும் எப்பவும் போல
நாயுடன் நடுத்தெருவில்.

-சீனிராசா எடிசன், கொழும்பு -13.

### கட்டளை!!

ஒளிந்திருந்து
உத்தரவிட்டான்
(மகா) தலைவன்!!
பதுங்கியிருந்து
ஏவலை முடித்தான்
ஏக தொண்டன்!!
மறுநாள்.....
பத்திரிகை முகப்பிலோ
படுகொலைப் படலாம்!!!

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

### கூட்டு

தன் இனத்தை
வெறுக்கும் பிராணி
இரண்டு
கூட்டமைத்து
குட்டித் தூக்கம்
போடுது!

-வை.குகராஜ், அக்கரைப்பற்று.

### தேர்தல் தொண்டர்

நன்றியுள்ள நாய் இது
தேர்தலில் தொண்டர்போல்
சாராயத்துக்கும்
சாப்பாட்டுக்கும்
சலுகைக்கும் சேவை
செய்வதில்லை.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.637



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.11.2005.

கவிதைப் போட்டி இல.637
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



### காவலுக்கு....

வீட்டுக்காவலுக்கு
வாசலில் நாய்
இன்று
நாய்க்கு துணையாக
நசுக்கப்பட்ட
மனிதங்கள்....!

-நஸீஹா சம்சபாத், புத்தளம்.

### அவலங்கள்

ஒரு வீர யுகத்தின்
நிழலில் அமர்ந்திருக்க
முடியாததாகிப் போனதால்
ஓர் இருட்டு யுகத்தில்
குருட்டு நிலவாய்
வீதியோர தெரு நாயோடு
படுத்திருக்கிறேன்....!

- சல்மா ஷாஜஹான், வாழைச்சேனை

### தலை நகரம்

தலைமுறை
தடயங்களை
தவறவிட்ட தருணம்
தலைவியிடம்
கிடைத்தால்
தலை நிமிரும்
தலை நகரம்!

-எஸ்.நாகராஜ், கொழும்பு - 15.

### துணை

தாய் இல்லை,
தந்தை இல்லை,
தங்கிட ஓர்
இடம் இல்லை.
நோயுள்ள அகதிக்கு,
வாயில்லா
ஜீவனொன்று
வந்தது துணையாக!

-நா.ஜெயபாலன், பிபிலை.

### விடை தேடு

நுண்ணறிவு
நன்றியுணர்வு
புரிந்துணர்வு
கொண்ட ஐந்தறிவு
மாறி விடும் மனசு
தீர்வு காணா அறிவு
அன்பு நன்றியில்லா
இதயம்
கொண்ட ஆறறிவு
உயர்ந்ததெது?
தாழ்ந்ததெது?

-மதிராஜ், சித்தன்கேணி.

# உங்கள் பக்கம்

## கிழக்கு மருத்துவத்துறை மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள்!

கிழக்கு மாகாணத்தின் மருத்துவபீட மாணவர்களுக்காகப் பல ஆண்டு காலமாக மருத்துவ பீடம், மருத்துவ ஆய்வுகூடம் அமைக்கப்படுவதாகக் கூறினாலும் இதுவரை காலமாக எத்தரப்பினராலும் அமுலுக்கு வராமையினால் இம் மாணவர்கள் பெரிதும் சிரமப்படுகிறன்றனர். அத்தோடு தாதியருக்கான பல்கலைக்கழகம் பற்றியும் புதிய தாதியர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றியும் வெளிவாரி பற்றியும் பூரணப்படுத்தப்படாமையினால் பல ஆண்டு காலமாக தாதியர் பற்றாக்குறையும் காணப்படுவது பெரும் குறைபாடாக உள்ளது.

இதே போன்று மருந்தாளர்கள், மருத்துவ ஆய்வுகூடவியலாளர்கள், இயன் மருத்துவர்கள், கதிர் இயக்க தொழில்நுட்பவியலாளர்கள் போன்றவர்களுக்கான நான்கு ஆண்டுகால பட்டப் படிப்பிற்கு இலங்கையில் உள்ள கொழும்பு ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், கிழக்கு மாகாணத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் என்பன 1979ஆம் ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தற்போது கிழக்குப் பல்கலைக்கழகம் புறக்கணிக்கப்பட்டு, கொழும்பு ஜயவர்த்தனபுர, பேராதனை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மருத்துவ பீட மாணவர்களுக்காக பல்கலைக் கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இருந்த போதிலும் தமிழ் பேசும் மக்களுக்காக யாழ். பல்கலைக்கழகம் இயங்கி வந்தாலும் முஸ்லிம் மாணவர்கள் மருத்துவ பீடத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டால், அங்கு சென்று பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் கல்வி பயில வேண்டியுள்ளது.

எனவே, மூவினத்தவரும் கல்வி கற்கக் கூடிய ஒரு பொதுவான பல்கலைக்கழகமாக கிழக்கு மாகாணத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் காணப்படுவதனால் மருத்துவ பீட மாணவர்களுக்கான கற்கை நெறியைத் தொடர்வதற்கு ஆவண செய்ய வேண்டியது உரிய அதிகாரிகளின் கடமையாகும்.

-செல்வி இப்றாகீம், காத்தான்குடி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

### ஓயாத அலை நீ....!

அன்புடன் முரசுக்கு,
மக்கள் மத்தியில்
மறைந்துள்ள
திறமைகளை
வெளிக்காட்டுவதற்கு
அடித்தளமாக விளங்கும்
வியத்தகு முரசே,
உண்மைச் சம்பவங்களை
உடனுக்குடன் தரும்
உறுதியான முரசே,
ஓயாத அலை போல்
உன் சேவை இருந்திட
என் வாழ்த்துக்கள்.

-விந்தன், மொரட்டுவை.

### தேவை உன் சேவை!

வீரமிகு முரசே!
ஒவ்வொரு பக்கத்திலும் இனிமையும் புதுமையும் படைத்து எம்மை மகிழ்ச்சிப்படுத்தும் தினமுரசே, உன் ஆக்கங்கள் அனைத்தும் பிரமிக்க வைக்கின்றன. எவ்வித அச்சுறுத்தலுக்கும் தளராமல் நீ தொடரும் சேவை எமக்குத் தேவை.

-சகாப்தீன், காத்தான்குடி.

### உன் பணி வாழ்க!

எனதன்பின் தினமுரசுக்கு!
உனது ஆசிரியர் தலையங்கம் பார்த்தேன். உன்னைப் போல வேறு தமிழ் ஊடகவியலாளர் இல்லை என்பதை ஒத்துக்கொண்டேன். வாழ்க உன் பணி.

-தேவன், குருமன்காடு.

### சிகரத்தில் ஏறு!

அன்புடன் முரசே!
பிரியமுடன் உனது வாசகன் எழுதுவது. வண்ண வண்ணமாய் பக்கங்கள் போட்டு அசத்துகின்றாய். உனது ஆக்கங்கள் விருப்பத்திற்குரியவை. உனது பக்கங்கள் அனைத்தும் மேலோங்க வேண்டும் என்பதே என் அவா.

-சித்தீக், காத்தான்குடி.

### வீறு நடை போடு!

தமிழ் முரசே!
அழகிய முகப்புடன் இனிதான அம்சங்களை அள்ளி வழங்கும் இனிய தமிழ் முரசே! உன் முகப்பிலேயே குண்டு வெடிப்பா? சிகரத்தை எட்டி விட்டாய். இனி வானை நோக்கி வீறு நடை போட வாசகர்களாகிய நாம் பக்க பலமாயுள்ளோம். தொடர்க உன் பணி.

-சம்சுதீன், அட்டாளைச்சேனை - 02.

# வடக்கு, கிழக்கு மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு

## ஒரு வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படுமென்கிறார் பிரதமர்

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாகச் செயலற்றிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண சபையை 2006ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் தேர்தல் மூலம் செயல்திறன்மிக்க சபையாக மாற்றி, அப்பகுதி மக்களின் அன்றாட மற்றும் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேனென்று ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவேனென்று உறுதி தெரிவிக்கும் மஹிந்த ராஜபக்ஷ, இந்த உறுதிமொழியைத் தெரிவித்துள்ளார். கடந்த 21 வருட கால யுத்தத்திலும் மூன்றரை வருட கால யுத்த நிறுத்த காலத்திலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் அந்த மாகாண மக்களே. வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து உள்நாட்டிலேயே இலட்சக் கணக்கான மக்கள் நிர்க்கதியான நிலையிலுள்ளனர். விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் போன்ற தொழில் முயற்சிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. வருமானம் இல்லாததால் அன்றாடம் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கும் இந்த மக்கள் கஷ்டப்படுகின்றனர். வடக்கிலும், கிழக்கிலும் நூற்றுக்கு மேற்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயங்களை மக்களுக்குத் தொந்தரவளிப்பதற்காக ஏற்படுத்தவில்லை. இந்த வலயங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு யுத்தமே காரணம். தற்போது யுத்தச் சூழல் இல்லாவிட்டாலும் யுத்த அபாயம் நீங்கிவிடவில்லை. எனவே யுத்த அபாயத்தை இல்லாமல் செய்வதற்கான முன்முயற்சிகள் முக்கியமாக எடுக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காகவே வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அதன் மூலம் அரசியல் தலைமையொன்றை உருவாக்கி உடனடிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி, தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நீண்ட காலமெடுக்கும். அதுவரைக்கும் வறுமைக்குள்ளும் யுத்தக் கொடூரங்களுக்குள்ளும் வடக்கு, கிழக்கு மக்களை வாழ அனுமதிக்க முடியாது. சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களும் இந்த மக்கள்தான். கடற்பேரழிவு தாக்கி பத்து மாதங்கள் முடிவடைகின்ற நிலையிலும் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. நலன்களை இழந்து நலன்புரி நிலையங்களிலேயே அவர்கள் வாழ்கிறார்கள். எனவே மாகாண சபை அமைக்கப்பட்டால் இந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம் என்றும் அவர் கூறினார்.

## இலங்கைக் கலைஞர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி

இலங்கைக் கலைஞர்களை தென்னிந்தியாவுக்கு அனுப்பி தென்னிந்தியக் கலைகளை அவர்களுக்குப் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய



அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கூறினார். நவராத்திரி விழாவை முன்னிட்டு மேற்படி அமைச்சின் அழைப்பின் பேரில் இலங்கை வந்திருந்த தஞ்சாவூர், தென் பிராந்திய கலாசார நிலையத்தின் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் வைபவம் கடந்த 10ஆம் திகதி அமைச்சில் இடம்பெற்றபோது அமைச் சர் இவ்வாறு கூறினார்.

தஞ்சாவூர், தென்பிராந்திய கலாசார நிலையத்தின் மூலம் 'சலங்கை நாதம்' எனும் மகுடத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் கலைஞர் களுக்கான பயிற்சிகளில் இலங்கைக் கலைஞர்களையும் இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் கிட்டியிருப்பதால், எமது பாரம்பரிய கலை, கலாசாரத்தை ஏனைய இன மக்கள் மத்தியிலும் பரப்பும் உன்னத நோக்கு தமக்கு இருப்பதாகவும், இலங்கைத் தமிழ் கலைஞர்களுடன் எமது சகோதர இனமாகிய சிங்களக் கலைஞர்களை யும் இதில் ஈடுபடுத்திக் கொள்வது மிகவும் பயன்மிக்கதாக அமையும் என்றும் கலாசார அமைச்சுடன் பேச்சு வார்த்தை நடத்தி இதற்கான நடவடிக் கைகளை எடுக்கப் போவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

மேற்படி வைபவத்தின் போது அமைச்சின் செயலாளர் திரு.கே. மகாநந்தன், இந்து சமய விவகாரங்களுக்கான ஆலோசகர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் உட்பட அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## பிரசல்ஸ் பேரணியில் முறுகல் நிலை! கஜேந்திரன் எம்.பி.யுடன் சிலர் வாக்குவாதம்

புலிகள் மீது ஐரோப்பிய யூனியன் விதித்திருக்கும் பயணத் தடையை நீக்கக் கோரி பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியில் ஆயிரக்கணக்கானவர்களே கலந்துகொண்டனரென்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறின. யாழ்.மாவட்ட எம்.பி., கஜேந்திரன் அங்கு சில வாலிபர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டாரென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா.சபையில் விரைவில் தமிழீழக் கொடி பறக்குமென்று கஜேந்திரன் எம்.பி. அங்கு உரையாற்றியது பற்றி சில தமிழ் வாலிபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கேள்வியெழுப்பினர். லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையால் ஐரோப்பிய யூனியன், புலிகள் மீது பயணத் தடை விதித்தது. அமெரிக்கா, பிரிட்டன், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளும் உங்களுக்குத் தடை விதித்திருக்கின்றன. இலங்கையின் வடக்கு, கிழக்கிலேயே புலிக்கொடியை ஏற்ற முடியாத உங்களால் எப்படி ஐ.நா.சபையில் ஏற்ற முடியும் என்று கேட்டபோது, பதற்றமடைந்த கஜேந்திரன் எம்.பி., "அது உங்களுக்குத் தேவையில்லாத வேலை. நீங்கள் இலங்கை அரசாங்கத்தின் கையாட்களா?" என்று பதில் கேள்வி எழுப்பியபோது முறுகல் நிலையேற்பட்டது. அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பெல்ஜியம் பொலிஸார் உடனடியாகத் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தமிழ் இளைஞர்கள் சிலர் கஜேந்திரன் எம்.பி.யைச் சூழ்ந்து கொண்டு பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

## யார் இந்த சூத்திரதாரி

தமிழ் நாட்டிலிருந்து மன்னாருக்கு கடந்த சில வாரங்களாகக் கடத்தி வரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான போதைவஸ்து குறித்து விசாரணை நடத்திவரும் போதைவஸ்து தடுப்புப் பிரிவினர் தமிழக பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர். அடிக்கடி மன்னாரில் போதைவஸ்துகள் சிக்குவதால் இக் கடத்தல் கும்பலுக்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையில் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த உதவி கோரப்பட்டுள்ளது. தமிழகத்தில் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கும் வட பகுதியைச் சேர்ந்த முக்கிய புள்ளி ஒருவர் இந்தக் கடத்தல் சூத்திரதாரியாக இருக்கலாமென்று போதைவஸ்து தடுப்புப் பிரிவு பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

## ஹக்கீமின் எதிர்பார்ப்பு வெறும் கானல்நீர்

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் கலந்து கொள்வார்களென்று ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின், 'மக்கள் நிகழ்ச்சித் திட்டத்தில்' அளிக்கப்பட்டிருக்கும் வாக்குறுதி வெறும் புஷ்வாணம் ஆகிவிடுமென்று முஸ்லிம் காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இரு தரப்புமே சம பங்காளர்களாக இருப்பதால் எந்தத் தரப்பும் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க முடியாதென்று புலிகளின் சமாதானச் செயலகத் தலைவர் புலித்தேவன் கூறியிருப்பது பற்றி கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். தனித்தரப்புக்குப் புலிகள் சம்மதமளிக்காத பட்சத்தில் எவ்வாறு நிலத்தொடர்பற்ற முஸ்லிம் மாகாணமொன்றினை அமைக்கப் போகிறீர்கள் என்று கேட்டபோது, எமது முயற்சிகள் தொடரும் என்று மட்டும் அவர் பதிலளித்தார். கிண்ணியாவில் நடைபெற்ற ஐ.தே.க. தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ரவூப் ஹக்கீம், தனித்தரப்புக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதால், நிலத்தொடர்பற்ற முஸ்லிம் மாகாணம் விரைவில் கிடைத்து விடுமென்று சூளுரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேனீர்க் கோப்பைக்கு கூட்டமைப்பு ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேநீர்க் கோப்பைச் சின்னத்தில் போட்டியிடும் விக்டர் ஹெட்டிகொடவுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனரென்று ரவிராஜ் எம்.பி. தெரிவித்தார். தான் வெற்றி பெற்றால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தனது அமைச்சரவையில் புலிகளுக்கும் இடமளிப்பேனென்று துணிந்து தனது கருத்தை வெளியிட்டமைக்காகவே அவருக்கு ஆதரவு தர விரும்புகிறோமென்றும் அவர் சொன்னார். இதனால் ஹெட்டிகொடவுக்கு தெற்கில் கணிசமான ஆதரவு கிட்டுமென்றும் அவர் சொன்னார்.

## அதிபர்களின் படுகொலைகளுக்கு புலிகள் உரிமை கோரல்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சத்தையும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் இராஜதுரையையும் கொன்றவர்கள் தாங்களே என்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை முதற்தடவையாக உரிமை கோரியுள்ளது. மேற்படி மாணவர் பேரவையின் முக்கியஸ்தர்களில் ஒருவரான புலேந்திரன் என்பவர் யாழ்.கன்னாதிட்டியிலுள்ள 'சயன்ஸ் அகடமி' என்ற கல்வி நிறுவனத்தில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு கூறினார். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை புலிகளின் முகவரமைப்புகளில் ஒன்று என்பதும் இதன் முன்னாள் தலைவரான கஜேந்திரன் இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பில் எம்.பி.யாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. கஜேந்திரனின் நெருங்கிய சகாவே புலேந்திரன் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## மேலும் ஐந்து கடற்புலிகள் தப்பியோட்டம்!

கடற்புலிகள் ஐந்து பேர் சம்பூர் - பால்சேனை புலிகளின் முகாமிலிருந்து தப்பியோடி வந்து படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

பால்சேனை முகாமில் காவல் கடமையில் இருந்தபோது ஆயுதங்களைத் தூக்கியெறிந்து விட்டு நள்ளிரவு 1.30 மணிக்குத் தப்பியோடி கஜுவத்தை இராணுவ முகாமைக் காலை 8.30 மணிக்குச் சென்றடைந்துள்ளனர்.

சரணடைந்தவர்களில் மூவர் திருகோணமலையையும், ஒருவர் வவுனியாவையும் மற்றவர் மலையகத்தையும் சேர்ந்தவர்கள். இவர்களில் திருகோணமலை வாசிகள் மூவரும் தாங்கள் திருகோணமலை சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது கடத்தப்பட்டதாகவும், மலையக வாசி, தான் கிளிநொச்சியிலுள்ள தனது சித்தப்பாவின் வீட்டுக்குச் சென்றிருந்த போது கடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் வழிகாட்டலுடனேயே இவர்கள் இராணுவ முகாமுக்குத் தப்பியோடியுள்ளனர். இயக்கத்திற்குள் நெருக்கடிகள் நிலவுவதாலும் தமது பெற்றோரைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாலுமே தாம் இயக்கத்தை விட்டுத் தப்பியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். அண்மைய நாட்களில் மேலும் சிலர் தப்பியோடியது குறிப்பிடத்தக்கது.

## அப்பலோவிலும் அதியுயர் பாதுகாப்பு வலயம்

மட்டக்களப்பு, வவுணதீவில் பிரபா புலிகள் மீது கருணா புலி தரப்பினர் நடத்திய தாக்குதலினால் காயமுற்ற இரு இளைஞர்கள் இன்னமும் கொழும்பு, அப்பலோ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உமைநேசன் என்று அழைக்கப்படும் வரதராஜா, இசைஞானன் என்றழைக்கப்படும். கோபிதாஸ் ஆகிய இருவருமே இவர்களாவர். இவர்களுக்குப் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

## மனித உரிமை மீறல் மனு

வடக்கு, கிழக்கிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டாமென்று தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான நெல்சன் பெரேரா மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிக்கும் சுதந்திரமோ, கருத்துச் சுதந்திரமோ கிடையாதென்றும் அங்கு வாக்காளர்கள் மிரட்டப்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இந்த மனுவில் முதல் பிரதிவாதியாகத் தேர்தல் ஆணையாளர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

## கலாசாரக்குழு தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் முக்கிய சந்திகளில் இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக நின்று கதைத்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள் பலர் மோட்டார் சைக்கிள் களில் கும்பலாக வரும் கோஷ்டியொன்றினால் பலமாகத் தாக்கப்பட்டு வருகின்றனர். மானிப்பாய், சுதுமலை, கொக்குவில், பிரம்படி, கோப்பாய், வடமராட்சி ஆகிய பகுதிகளில் இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. முகத்தைக் கறுப்புத் துணிகளால் மூடி மறைத்தபடி வரும் இக் கும்பல், கலாசாரத்தைப் பேணும் குழுவினராக இனங் காணப்பட்டுள்ளனர். மானிப்பாயில் தாக்குதலுக்கு இலக்கான சசிகரன், கமலதாஸ் ஆகிய இரு இளைஞர்கள் காயங்களுடன் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மன்னார் பஸ் நிலைய மலசலகூடம் மக்கள் பாவனைக்கு!

மன்னார் தனியார் பஸ் நிலையத்திலுள்ள மலசலகூடத்தை பொது மக்களின் பாவனைக்கும் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த மலசல கூடத்திற்குத் தண்ணீர் மற்றும் மின்வசதிகள் வழங்கவும் மலசலக் கூடத்திற்குச் செல்லும் கிறவல் பாதைக்கு தார் ஊற்றிச் செப்பனிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. மேற்படி மலசலகூடம், சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் ஒரு சில பஸ் ஊழியர்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் விதத்தில் பூட்டப்பட்டிருப்பதாகவும், அதன் திறப்பு பஸ் நிலையப் பணியாளர்களிடமே இருப்பதாகவும் 'தினமுரசு' கடந்த வாரம் சுட்டிக் காட்டியிருந்தது. தனியார் பஸ் போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் சார்பில் தலைவர் ரமேஷ், செயலாளர் அன்டன், மன்னார் அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் உதவி அரசாங்க அதிபர் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இம்முடிவுகள் எடுக்கப்பட்டன. மலசல கூடம் இரு நாட்கள் பூட்டப்பட்டிருந்தது உண்மைதான் என்றும் தண்ணீர் வசதி யில்லாத காரணத்தினாலேயே துர்நாற்றம் வீசுவதைத் தடுப்பதற்காக அது பூட்டப்பட்டிருந்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணத்தில் தொழிற்பயிற்சி

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி வாழ்க்கை தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைய யாழ்ப்பாணத்தில் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயிற்சியாளர்கள் அவ்வப்பகுதிகளில் இருந்த தேர்ந்தெடுக்கப்பட்டு, நீர்க்குழாய் பொருத்துதல், வீட்டு மின்னிணைப்பு மற்றும் மேசன் பயிற்சி போன்ற நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் பயிற்சி நிலையத்துக்கென 57 பயிற்சியாளர்களும், சண்டிலிப்பாய் பயிற்சி நிலையத்துக்கென 25 பயிற்சியார்களும், தெல்லிப்பளை பயிற்சி நிலையத்துக்கென 28 பயிற்சியாளர்களும், சாவகச்சேரி பயிற்சி நிலையத்துக்கென 31 பயிற்சியாளர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அமைச்சரின் இணைப்பதிகாரியும், முன்னாள் யாழ். மாவட்ட எம்.பி.யுமான நடராஜா மதனராஜா நேர்முகப் பரீட்சை நடத்தி பயிற்சியாளர்களை தேர்ந்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## அத்துமீறல்களை அனுமதிக்கும் குறைபாடுடைய ஒப்பந்தம்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

**முரசு** வாசகர்களுக்கு இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.

நரகாசுரனை அழித்து மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழிவகுத்த நன்னாளே இந்துக்களால் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. இலங்கை மக்களுக்கு போர் எனும் அரக்கனை அழித்து அப்படி ஒரு திருநாளைப் பெற்றுத்தருவார் எவருமில்லை.

போர் அரக்கன் அழிக்கப்பட்டு இலங்கை தேசம் விடுதலை பெறுகின்ற அந்த வரலாற்றுச் சிறப்பு மிகுந்த நாள் விரைவில் மலரட்டும் என்பதே எல்லோரதும் பிரார்த்தனைகளாக இந்நாளில் இருக்கட்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களும் நாடும் புத்துயிர் பெறாத சூழலில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக இடம்பெற்று வரும் இயற்கை அனர்த்தம் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகியுள்ளதுடன், இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் வாழ்கின்றனர். இதில் அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பெரும் அழிவை எதிர்நோக்கியுள்ளன. பரம விரோதிகளாகக் கருதப்பட்ட இஸ்ரேல், பாகிஸ்தானுக்கு உதவ முன்வருமளவிற்கு சர்வதேச ராஜ்ய உறவுகளில் நெருக்கம் ஏற்பட்டு எதிரெதிர் சக்திகள் கைகுலுக்கிக்கொள்வது எவ்வாறு என்பது குறித்து பகிரங்கமாகப் பேச்சு நடத்திவருகின்றன.

இலங்கையில் மட்டும் ஒற்றுமையிலிருந்து பிரிவினைக்கும் இணக்கப்பாடுகளிலிருந்து முரண்பாடுகளுக்குமான செயற்பாடுகள் மேலும் மேலும் அதிகரித்து வருகின்றன. அதிகரித்து வருகின்ற பொதுமக்கள் மீதான படுகொலைகளும், வன்முறைகளும் முன்னெப்போதுமில்லாதளவு நடைபெற்று வருகையில் வெறும் பார்வையாளர்களாக மட்டும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் நோர்வேயும், கண்காணிப்புக் குழுவினரும் இயந்திரத்தனமாகவே கடமையாற்றி வருகின்றனர். எந்தவொரு நிகழ்ச்சி குறித்தும் ஆக்கபூர்வமான முடிவுகளையோ, இருதரப்பு இணக்கப்பாடுகளையோ பெற்றுக்கொள்ள முடியாத நோர்வே அரசு, பிரதிநிதிகளை அனுப்புவதும், சர்வதேச நாடுகளிடம் தமது தலையீட்டில் நியாயம் காட்டிவருவதுமாகவுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்களைச் செய்வதற்கோ, மனித உரிமை தொடர்பில் புதிய வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கோ, புலிகளின் தீர்க்கமான முடிவைப் பெற முடியாத நோர்வே எவ்வாறு சிறந்த சமாதான ஏற்பாட்டாளராக இருக்க முடியும். நோர்வேயினதும், அதற்குப் பின்னாலுள்ள சர்வதேச சக்திகளினதும் கையாலாகாத்தனமும், பின்னடைவை ஏற்றுக்கொள்ளாத வரட்டுப் போக்கும்தான் இலங்கை விவகாரம் மேலும் சிக்கலடைந்து வருவதற்குக் காரணமாகும். மிரட்டலில் ஆரம்பித்து, ஆட்கடத்தலில் வந்து கொலையில் ஒருபக்கம் நிற்கின்றது. மறுபக்கமோ அடிதடியில் ஆரம்பித்து கைக்குண்டு வீச்சில் வந்து காவலரண்களையும், வாகனத்தையும், வேவு விமானத்தையும் தாக்குகின்ற அளவில் வந்து நிற்கின்றது.

'சிறு துளி பெரு வெள்ளம்' என்பது போல் சிறிய சிறிய யுத்த நிறுத்த மீறல்கள் அனுமதிக்கப்பட்டதால் அல்லது கண்டுகொள்ளப்படாததால் சிறு சிறு அத்துமீறல்கள் இப்போது பாரிய தாக்குதலுக்குக்கூட போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அங்கீகாரம் அளிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கருணா அணி மீதான தாக்குதல் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முயற்சி, கௌசல்யன் மீதான கொலை கருணாவின் சகாக்கள் மீதான படுகொலைகள், லக்ஷமன் கதிர்காமர் மீதான படுகொலை 'முரசு' காரியாலயத்தில் குண்டு வெடிப்பு - பானுவின் வாகனத் தொடரணி மீதான தாக்குதல், வேவு விமானம் மீதான தாக்குதல், மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் கல்விமான்கள், சமயத்தலைவர்கள் ஆகியோர் மீதான படுகொலைகள் அத்தனையையும் இந்தப் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அனுமதித்துக் கொண்டிருந்துள்ளது. இத்தனையும் ஒரே நாளில் நடந்திருந்தால் கறுப்பு ஜூலையை விட மோசமாக இருந்திருக்கும் தனித்தனியே நடந்ததால் எல்லோரும் ஜீரணித்துக்கொண்டனர். இவற்றைத் தடுக்கவோ, எதிர்க்கவோ இல்லாமல் ஒவ்வொருவரும் ஜீரணித்துக் கொண்டதால்தான் இன்று சமாதான முயற்சிகளை எங்கிருந்து ஆரம்பிப்பது என்று கூடத் தெரியாமல் திக்குமுக்காடிப் போயுள்ளனர். இப்போது சிறுகச் சிறுகத்தானே என்று அசட்டுத்தனமாக எவராவது இருந்து விட்டால் இந்தத் தீபாவளியை அல்ல, எந்தத் தீபாவளியையும் வேதனையோடு தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதனூடாக சில திருப்பங்களை ஏற்படுத்த முடியும். தவறான ஒப்பந்தம் போல இன்னொரு தவறு ஏற்பட மக்கள் அனுமதிக்கக் கூடாது.

■■


மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை


என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# மஹிந்த ரணில் விஞ்ஞாபனமும் மக்களின் எதிர்பார்ப்பும்





இலங்கையின் ஐந்தாவது செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு இன்னமும் விரல் விட்டெண்ணக்கூடிய நாட்களே இருக்கின்றன. பதின்மூன்று வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலேயே போட்டி நிலவுகிறது. ஏனைய பதினொரு வேட்பாளர்களும் தமது கட்டுப் பணங்களையாவது காப்பாற்றுவார்களாவென்பது சந்தேகமே. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் 'மஹிந்தவின் சிந்தனை' என்ற தலைப்பிலும் எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் விஞ்ஞாபனம், 'மக்கள் நிகழ்ச்சித் திட்டம்' என்ற தலைப்பிலும் வெளியிடப்பட்டுள்ளன. "வானத்தைக் கயிறாகத் திரிப்போம், மண்ணைப் பொன்னாக்குவோம்" என்ற தோரணையில் இரு பிரதான வேட்பாளர்களுமே வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளனர். தேர்தலொன்று வந்தால், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமோ, இல்லையோ என்ற பீதியின்றி அள்ளி வீசுவது வேட்பாளர்களின் வழமையான பாணி வேலைதான். தேர்தல் காலங்களில் வழங்கப்படும் வாக்குறுதிகள் அனைத்துமே நிறைவேற்றப்பட்டதாக வரலாறே கிடையாது. ஏதோ சிலவற்றை நிறைவேற்றுவார்கள்; ஏனையவை எல்லாம் அம்போதான்.

இனப்பிரச்சினைத் தீர்வு, தேசத்தின் பொருளாதார வளர்ச்சி, தேசிய உற்பத்தி, வேலைவாய்ப்பு, பண வீக்கத்தைக் குறைத்தல், கல்வி வளர்ச்சி போன்ற இன்னோரன்ன முக்கிய விடயங்கள் குறித்து இரு வேட்பாளர்களுமே உறுதி மொழிகளை வழங்கியுள்ளனர். இரு தரப்பினருக்குமே இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி மற்றும் முஸ்லிம் கட்சிகளனைத்தும் சிறுபான்மையினக் கட்சிகளும் தமது யோசனைகளைத் தெரிவித்திருந்தன. இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி போன்றவை தமது யோசனைகளை இரு தரப்புகளுமே ஏற்றுக் கொண்டதாகக் கூறினாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளன. இதனால் இரு கட்சிகளுக்குள்ளும் மஹிந்தவை ஆதரிக்கும் பிரிவுகள் வழமைபோல் ஐ.தே.க.வை ஆதரிக்க முன்வந்துள்ளது. இதைப் போன்றே முஸ்லிம் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்ற சில உதிரிக் கட்சிகளும் மீண்டும் முஸ்லிம் காங்கிரசின் பாதையில் இணைந்துள்ளன. பேரியல் அஷ்ரப், அதாவுல்ல அணிகள் மஹிந்தவை ஆதரிக்கின்றன. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் புலிகளும் மதில்மேலேறிக் குந்திக் கொண்டாலும் ஏதோ புதுத் தந்திரோபாயமொன்றினைக் கையாளப்போவதாகக் கூறிக் கொள்கின்றன. கள்ளவோட்டுகளை அல்லது வேட்டுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ கையாண்டு தமது தந்திரோபாயங்களை வெளிப்படுத்துவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். "மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற மூலாதாரக் கொள்கையோடு மாற்றுக் கருத்தினை முன்வைத்துச் செயற்பட்டுவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கிறது. 'ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைத் தீர்வு' என்ற விடயம் இந்தத் தேர்தலில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருப்பது உண்மைதான். இரு பெரும் பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வின் மூலம்தான் இனப்பிரச்சினைக்கு நீடித்த, நிரந்தரத் தீர்வு காண முடியுமென்று வலியுறுத்துகின்றன உண்மைதான். அதிகாரப் பகிர்வின் மூலம்தான் நிரந்தரத் தீர்வு காண முடியும். ஆனால் 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. ஒற்றையாட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கம் இது.

இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வை அதாவது நிரந்தரத் தீர்வை ஒரேயடியாகப் பெற்றுவிட முடியாதென்பது உண்மைதான். சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பெரும்பான்மை இணக்கப்பாட்டுடன் யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் நீதிமன்றத் தீர்ப்பு, சர்வஜன வாக்கெடுப்பில் அங்கீகாரமென்று ஒரு நீண்ட பயணம் அது. எனவே இந்த நிலையில் இறுதித் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளை, வடக்கு - கிழக்கு மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். அதற்காக ஒற்றையாட்சி முறையிலிருந்து அதிகாரப் பகிர்வின் மூலமான இறுதித் தீர்வுவரை மூன்று கட்டப் படிமுறைப் பரிணாமப் போக்கொன்றினை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முன்வைத்திருக்கிறது. கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாகச் செயலற்றுப் போயிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண சபையை இயங்கச் செய்து அந்த மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலிருந்து இத் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டுமென்று அக் கட்சி வலியுறுத்தியுள்ளது. இதன் மூலம் வடக்கு - கிழக்கு மக்களின் ஐம்பது சதவீதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளக்கியுள்ளார். ஒரு வருடத்துக்குள் இதனை மேற்கொள்ளப் பிரதமர் மஹிந்த இணங்கியுள்ளார்.

"வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நீடித்த தீர்வொன்றினைக் காண்பதற்கு புதிய பரிணாமத்திலிருந்து சிந்தித்துப் புதிய அணுகுமுறையொன்றினை ஏற்படுத்த வேண்டும். இது காலவரை சமாதான முன்னெடுப்புகளில் கையாளப்பட்ட நல்ல விடயங்களையும் கூடாத விடயங்களையும் கணக்கிலெடுத்து புதிய அணுகுமுறையொன்று ஏற்படுத்தப்படும்" என்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"இரண்டாயிரமாம் ஆண்டு பாராளுமன்றத்தில் சந்திரிகா அரசு சமர்ப்பித்த தீர்வுப் பொதியை ஐ.தே.க. கிழித்தெறிந்ததும் தீ மூட்டியதும், ஓர் இணக்கப்பாடு ஏற்கனவே காணப்படாததால் ஏற்பட்டவையென்று கூறப்படுவதையும் நாம் மறுக்க முடியாது. இதேபோன்று தென்னிலங்கைக் கட்சிகளுக்கிடையில் ஓர் இணக்கப்பாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி சந்திரிகா கூட்டிய ஆலோசனைக் கூட்டம் தோல்வியில் முடிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சிந்தனைகளில் மூன்றாவது பெரிய கட்சியான ஜே.வி.பி.யினதும் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினதும் யோசனைகளும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம், இறைமை, இனங்களுக்கிடையிலான சமாதான - சகஜீவனம், இனங்களின் தனித்துவ அடையாளங்கள் பாதுகாக்கப்படுமென்று மஹிந்தவின் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்கத்திலும் இவை கூறப்பட்டுள்ளன. யுத்தத்தின் மூலமல்ல பேச்சுவார்த்தை மூலம் இறுதித் தீர்வு காணப்படுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு இணக்கப்பாட்டுக்கு வந்து இறுதித் தீர்வை முன்னெடுப்பேனென்று ரணில் விக்கிரமசிங்கா கூறுகிறார். ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்களின் அடிப்படையில் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம், இறைமை பாதுகாக்கப்படுமென்று ரணில் கூறினாலும் உள்ளக சுயாட்சி என்று கூறிக்கொண்டே மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடும் புலிகளை ரணில் எப்படி வழிக்குக் கொண்டு வருவாரென்பது பெரும் சந்தேகத்துக்குரிய விடயமே.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுச் செயற்பாடுகளும் மீளாய்வு செய்யப்படுமென்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இவை இரண்டுமே உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பி விட்டிருப்பதால் அவற்றை மீளாய்வு செய்ய வேண்டியது அவசியம்தான். இதுகுறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவும் வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்களின் அடிப்படையில் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம், இறைமை ஆகியவை பேணப்படுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினாலும் அது கட்டங் கட்டமாக எவ்விதம் நடைமுறைப்படுத்தப்படுமென்று அவர் விளங்கப்படுத்தவில்லை. புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மட்டுமல்ல, சுதந்திரக் கட்சியோடு இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கும் மக்களின் ஆணையை விக்கிரமசிங்கா கோரியுள்ளார்.

> **இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வை அதாவது நிரந்தரத் தீர்வை ஒரேயடியாகப் பெற்றுவிட முடியாதென்பது உண்மைதான். சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பெரும்பான்மை இணக்கப்பாட்டுடன் யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் நீதிமன்றத் தீர்ப்பு, சர்வஜன வாக்கெடுப்பில் அங்கீகாரமென்று ஒரு நீண்ட பயணம் அது. எனவே இந்த நிலையில் இறுதித் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளை, வடக்கு - கிழக்கு மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.**

நீண்ட காலமாக முஸ்லிம் தரப்புகள் கோரிவந்த தனித்தரப்பு யோசனையைத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரணில் சேர்த்திருக்கிறார். இது முஸ்லிம்களுக்கு மகத்தான வெற்றியென்றும் வடக்கு, கிழக்கில் நிலத் தொடர்பற்ற முஸ்லிம் மாகாணம் ஒன்று அமைக்கப்படுமென்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தம்பட்டமடித்து வருகிறார். ஆனால் இது சாத்தியமான விடயமல்ல. ரணில் விக்கிரமசிங்கா செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசும் புலிகளுமே சமபங்குதாரர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாம் தரப்பு அல்லது முஸ்லிம் தரப்பு பேச்சுவார்த்தைகளில் அங்கம் வகிக்க வேண்டுமென்றால், அதற்கு அரசுமட்டுமல்ல மற்றத் தரப்பான புலிகளின் அங்கீகாரமும் கிடைக்க வேண்டும். ஏற்கனவே முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்து பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து தோற்றுப் போனவர் ஹக்கீம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஹக்கீமுடன் பிரபாகரன் செய்து கொண்ட ஒப்பந்தம் காலாவதியாகி விட்டதென்று கூறி ஹக்கீமின் முகத்தில் தமிழ்ச்செல்வன் காறி உமிழ்ந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஹக்கீம் தனது வீரப் பிரதாபங்கள் பற்றி ஐ.தே.க. மேடைகளில் கதையளந்து கொண்டிருந்தபோது புலிகளின் சமாதானச் செயலகத் தலைவர் புலித்தேவன் ரணில் மீதும் ஹக்கீம் மீதும் புலிப் பாய்ச்சல் நடத்தியிருக்கிறார். "புலி இயக்கத்தின் அங்கீகாரமின்றி மூன்றாம் தரப்பொன்று கலந்துகொள்ள முடியாது. அது ரணில் அரசும் புலிகள் இயக்கமும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது." என்று கூறியுள்ளார் புலித்தேவன். இதைப்போன்றே ஆளும் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஒரு சூடு போட்டிருக்கிறார் புலித்தேவன். ரணிலின் அரசாங்கமும் புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் பற்றி கண்காணிப்புக் குழு செயற்பாடுகள் பற்றி மீளாய்வு செய்யப்படுமென்று மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். புலிகளின் அங்கீகாரமின்றி இவற்றை மீளாய்வு செய்ய முடியாதென்று அடித்துக் கூறுகிறார் புலித்தேவன். ஒப்பந்த விதிகள் மீறப்பட்டால் மீண்டும் யுத்தம் வெடிக்குமென்றும் புலித்தேவன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். ஆக, என்னதான் முயற்சிகளை இந்த இரு வேட்பாளர்களும் எடுத்தாலும் புலிகளைக் கட்டுப்படுத்தி கூட்டுக்குள் கொண்டு வருவது என்பது சந்தேகத்திற்குரிய காரியம்தான். தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வு குறித்து புலிகள் என்றுமே கவலை கொள்வதில்லை. எனவே வடக்கு, கிழக்கு மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வடக்கு, கிழக்கு மாகாண சபையை ஒரு வருடத்திற்குள் மீண்டும் செயற்படுத்துவேன் என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பது நடைமுறை சாத்தியமானதுதான்.

மலையகக் கட்சிகள் 19அம்சக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தன. மலையகத்திற்கொரு பல்கலைக் கழகம், கல்வி வாய்ப்பு அதிகரிப்பு, கிராம சேவகர்கள் நியமனம் போன்ற இன்னோரன்ன விடயங்களையே இக் கட்சிகள், பிரதான இரு வேட்பாளர்களுக்கும் முன்வைத்திருந்தன. இரு வேட்பாளர்களுமே இவற்றை ஏற்றுக் கொண்டாலும் ஜே.வி.பி.யின் ஒற்றையாட்சியைக் காரணம் காட்டி ஒரு வழிப்பாதையூடாக இ.தொ.கா. சென்றதற்கு 15 கோடி ரூபாய்தான் காரணமா? என்று சிலர் எழுப்பும் கேள்விகள் நியாயமானதுதான்.

இதேவேளை இரு வேட்பாளர்களுமே ஆறு வருடங்களுக்குள் 20 இலட்சத்துக்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகள் வழங்கப்படுமென்று குறிப்பிட்டுள்ளனர். அதாவது வருடமொன்றுக்கு சுமார் மூன்றரை இலட்சம் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுமென்று வாக்குறுதி அளித்துள்ளனர். அதாவது நாளாந்தம் கிட்டத்தட்ட700 வேலை வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். நாட்டின் தேசிய உற்பத்தியைக் பெருக்காமலும் அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தாமலும் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமென்பது வெறும் வெற்று வேட்டுக்களே. இருந்தாலும் கர்ப்பிணித் தாய்மார், சிசுக்கள், பாடசாலைப் பிள்ளைகள், முதியோர்கள், அனாதைகள், சமுர்த்தி உதவி பெறுவோர், அரச ஊழியர்கள் ஆகியோர் தொடர்பான நடைமுறைச் சாத்தியமான யோசனைகளை ஆளும் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்.

இந்த நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு மூல காரணமாகவிருப்பது இனப் பிரச்சினையும் அதனால் எழுந்த யுத்தமும்தான். புலிகள் வழிக்கு வராவிட்டால் மாற்றுவழியைத் தேடவேண்டியதுதான். யுத்தத்தின் மூலம் என்றுமே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. எனவே பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆரம்ப முயற்சிகளை ஒரு வருடத்திற்குள் மேற்கொள்வேனென்று உறுதியளித்திருக்கும் மஹிந்தவுக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் இருப்பதாகப் பரவலாகக் கருதப்படுகிறது. ■

---

## ஊரிலிருந்து....



அவசர அவசரமாய் எல்லாளன் படை, சங்கிலியன் படை, வன்னியன் படை புத்துயிர் பெற்றதும் 'சுடச்சுட' நடவடிக்கைகளை எடுத்து இருட்டடி, கடத்தல், மிரட்டல், கலாசாரம் பேண வெளிக்கிட்டதும் ஏனெண்டு தெரியுமா? மூண்டரை வருட காலம் ஆயுதச் சண்டை இல்லை. ஓடிக் கொண்டிருந்தால் தான் அது ஆறு. தேங்கி நிண்டால் பாசி பிடிச்சு குட்டை ஆகிவிடும். ஏற்கனவே நிறைய பெடியள் குளிர் விட்டுப்போய் இயக்கத்தை விட்டு ஓடிட்டாங்கள். மிச்ச ஆக்கள் எந்த நேரம் எண்டு பாத்துக் கொண்டிருக்கிறாங்கள். காரணமில்லாமல் யுத்தத்தைத் தொடங்கினால் அரசாங்கத்தோட சேர்ந்து சர்வதேசமும் புலிகளை துடைச்செறிஞ்சுவிடும். ஓடவிடாமல் பெடியளையும் வைச்சிருக்க வேணும். பாத்தார் ஏக தலைவர். துணைப் படைகளை ஆரம்பிச்சு பூந்து விளையாடப் பெடியளை விட்டிட்டார்.

"துணைப் படைக்கு விளையாட்டு தமிழ்ச் சனத்திற்கு சீவன் போகுது"

ந ர ன்

# அரசின் மனிதாபிமானமும் புலிகளின் தந்திரோபாயமும்

அலசுவது

**- மதியூகி -**

போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பாரிய குறைபாடுகளைக் கொண்டது என்று ஆரம்ப காலத்தில் எழுந்த கருத்துக்களை அப்போது எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மறுபுறம், குறை இருப்பதாகச் சுட்டிக்காட்டியவர்களை சமாதானத்தின் எதிரிகளாகக் காட்டுவதில் புலிகள் தரப்பும் அப்போதைய அரசாங்கத் தரப்பாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் முனைப்பாக இருந்தன. அப்போது நிராகரிக்கப்பட்ட அந்த நியாயமான கருத்துக்களின் சபிப்பால் விளைந்ததே இப்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தமும், சமாதானமும், அதில் சம்பந்தப்பட்ட இருதரப்பும் இன்று எதிர்கொள்ளும் நெருக்கடிகளுமாகும். ஒப்பந்தம் செய்துகொண்ட சில வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தது. புதிய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறுவதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்




சந்திரிகா

இருக்கக்கூடிய குறைபாடுகளை நிவர்த்திக்கும், வன்முறைகளுக்கு வழிவிடாது என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், புதிய அரசாங்கத்தினால் எதையும் சாதித்துவிட முடியவில்லை. ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்டால் எவராக இருந்தாலும், வரையறுக்கப்பட்ட வட்டத்துக்குள்ளேயே தங்கள் அரசியலை நடத்த வேண்டியதாகி விடுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியை குறைகூறி ஆட்சிக்கு வந்த சுதந்திரக் கூட்டமைப்பும், அதே தவறையே செய்தது அல்லது அது தவறுகளை அனுமதித்தது எனலாம். இதற்குப் பிரதான காரணம் மாற்றங்களை செய்யப்போனால் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிச் சென்றுவிடுவார்கள். அப்படி சென்றுவிட்டால் சமாதான முயற்சிகள் முறிவடைந்துவிடும். சமாதான முயற்சிகள் முறிவடைந்தால் சர்வதேசத்தின் உதவியோ, நிதியோ இலங்கைக்கு கிடைக்காது என்று ஆளும் அரசியலில் உள்ளவர்களின் தவறான கணிப்பீடுதான். இதன் பயனாக சமாதான காலமானது அதிகரித்த வன்முறைகளையும், அதிகரித்த அரசியல் படுகொலைகளையும் தாராளமாக அனுமதித்தது. தற்போது சமாதான முயற்சிகளும் முறிவடைந்து, சர்வதேச உதவியும் குதிரைக்கு முன்னால் கட்டிய கரட் கிழங்கைப் போல் தொங்கிக் கொண்டிருக்க, புலிகளை வழிக்குக் கொண்டுவரலாம் என்று தப்புக் கணக்குப் போட்ட அரசியல் சக்திகளும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன. மறுபுறத்தில் புலிகள், தொடர்ந்தால் கட்டம்கட்டமான பேச்சுவார்த்தை. தொடர முடியாவிட்டால் இடைக்கால நிர்வாகம் அல்லது தற்போதைய அரசியல் அமைப்புக்குள் வழங்க முடியாத ஏதோவொன்று என்றளவில், தற்போது இருப்பதாகக் கூறப்படும் சமாதானக் காலத்தை நகர்த்தத் தொடங்கினர். இன்னும் அது நீடிக்கிறது. மறுபுறத்தில் தொடரும் யுத்தமற்ற காலப்பகுதியானது புலிகளின் இறுக்கமான கட்டமைப்புகளை ஆட்டம் காணச் செய்ததன் விளைவு, புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்ட பிளவு, உறுப்பினர்களின் வெளியேற்றம், சாதாரண மக்களின் சுதந்திரமான சிந்தனைப் போக்கு என்பன அதிகரித்ததால் மீண்டும் ஒரு பரபரப்புச் சூழலை அல்லது யுத்த வாடையை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

**அரசாங்கத்தின் மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப் பாளர்களையும், நோர்வே தரப்பினரையும் மிகச் சாதுரியமாகவும், தந்திரோபாயமாகவும் கையாண்டு தமது காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றனர். ஆனால், அரசாங்கம் இவர்கள் மீது காட்டும் மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கு புலிகள் தரப்பிலிருந்து பதிலாக மனிதாபிமானத்தையோ, சாதாரண மனித நேயத்தையோ இதுவரை காணக்கூடியதாக இல்லை.**

தற்போதைக்கு நேரடியாக ஒரு யுத்தத்தை புலிகளால் ஆரம்பிக்க முடியாமல் விட்டாலும் தமது இருப்பை அல்லது தேவையை தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலோடு நெருக்கிக் கொள்ள வேண்டிய தேவையின் நிமித்தமே அவ்வப்போது அரசுக்கு எதிராக ஏற்படுத்தப்படும் எதிர்ப்புப் போராட்டங்களும், எழுச்சி மாநாடுகளும் ஆகும். இவை இரண்டுக்குமிடையே துப்பாக்கிகளுக்கு தூக்கம் வந்துவிடக் கூடாது என்பதற்காக துப்பாக்கிகளையும் அதைத் தூக்கிக்கொண்டிருப்பவர்களையும் விழிப்போடும், வெறியோடும் வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தின் காரணமாகவே படுகொலைகள் அரங்கேற்றப்படுகின்றன. இதேவேளை, படுகொலைகள் என்று பார்க்கின்ற போது புலிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக, புலிகளுக்கெதிராகவும் படுகொலைகள் புரியப்படுகின்றன. சமாதானத்தை நேசிப்பவர்கள் என்ற வகையில் எவர் எவர்மீது புரிந்தாலும் படுகொலைகள் கண்டனத்துக்குரியவைகளே. ஆனாலும், புலிகள் படுகொலைகளை நிறுத்துவதற்கான எந்த சமிக்ஞையையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை. இதற்குச் சிறந்த உதாரணங்களாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கண்டனத்தையும், ஐக்கிய நாடுகள் சபையின் கண்டனத்தையும் மனித உரிமை அமைப்புகளின் அதிருப்தியையும் சுட்டிக்காட்ட முடியும். இந்த நிலைமைகளில் விடுபட்டுப் போய்விட முடியாத மற்றொரு சம்பவமாக இலங்கையின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான படுகொலையை அடுத்து ஒரு உண்மை வெளியானது. அதாவது, புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தில் தூரத்தில் ஏதோ ஒரு நபர் மீது புரியப்பட்ட ஒவ்வொரு படுகொலையையும் வெறும் கண்டனங்களோடு பார்த்தவர்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் குறைபாடுகள் அப்பட்டமாக தெரியத் தொடங்கின. எவ்வாறு அக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது என்பது குறித்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய அழுத்தம் மேலெழத் தொடங்கியது. அதன் விளைவே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டுமென புலிகளுக்குப் பகிரங்கமாக அழைப்பு விடுத்தார். இவ்வழைப்பை புலிகள் நிராகரித்தால் சர்வதேச சமூகத்தின் கழுகுப் பார்வைக்கு அது தீனியாகி விடும் என்பதற்காக புலிகளும் நேரடிப் பேச்சுக்குச் சம்மதித்தனர். ஆனாலும் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டிய இடம் குறித்த சர்ச்சை சந்திரிகா குமாரதுங்கவின் முயற்சிக்கு மற்றுமொரு பின்னடைவை ஏற்படுத்தியது. ஆகவே, அந்தளவில் ஒப்பந்தத்தில் திருத்தங்களை ஏற்படுத்துவதான பேச்சுக்கான பேச்சும் மூச்சிழந்து நிற்கிறது.

ஆனால் கொலைகளோ, அத்துமீறல்களோ எவ்விதத் தடைகளுமின்றி அவற்றின் போக்கிலேயே மிகக் கொடூரமான முகம் தாங்கி இலங்கை தேசமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை ஒருபுறமிருக்க, திருகோணமலையில் எழிலன் சுகவீனமுற்ற போது மட்டக்களப்பில் பானு பயணம் செய்த வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது, காயப்பட்ட தமது உறுப்பினர்களை வன்னிக்கு அழைத்துச் செல்லவும், அல்லது கொழும்புக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டுவரவும் புலிகள் அரசாங்கத்தின் உதவியை நாடினர். அரசாங்கமும் மனிதாபிமான அடிப்படையில் உதவுவதாகக் கூறிக்கொண்டு தரை வழியாக வன்னிக்குச் சென்ற எழிலனை, பாரிய பாதுகாப்புக் கவசங்களோடு பெரும் படையெடுப்புடன் வன்னிக்கு அழைத்துச் சென்றது. அதேபோல மட்டக்களப்பில் காயமுற்ற 4 புலி உறுப்பினர்களையும் உலங்கு வானூர்தி மூலமாக வன்னிக்கு அழைத்துச்



பிரபாகரன்

செல்வதில் நடைமுறைப் பிரச்சினை இருப்பதால் கொழும்புக்கு அழைத்து வந்து அவர்களை தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்க உதவியது. அரசாங்கத்தின் இவ்வகையான மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப் பாளர்களையும், நோர்வே தரப்பினரையும் மிகச் சாதுரியமாகவும், தந்திரோபாயமாகவும் கையாண்டு தமது காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றனர். ஆனால், அரசாங்கம் இவர்கள் மீது காட்டும் மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கு புலிகள் தரப்பிலிருந்து பதிலாக மனிதாபிமானத்தையோ, சாதாரண மனித நேயத்தையோ இதுவரை காணக்கூடியதாக இல்லை. அதற்கு உதாரணமாக சிறுவர் மற்றும் பெண்கள் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளான வெளிநாட்டு பிரஜை ஒருவரைக் கைது செய்வதற்காக மன்னாருக்குச் சென்ற அதுவும் அரசகட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள் சென்ற - பொலிஸ் குழுவினரை புலிகள் பிடித்துச் சென்றனர். மூன்று ஆண்களும், இரண்டு பெண்களுமாக ஐந்து பொலிஸார் புலிகளால் கைது செய்யப்பட்டனர். அதில் இரண்டு பெண் பொலிஸாரும் விடுவிக்கப்பட்ட நிலையில், ஏனைய 3 பொலிஸாரும் இன்னும் புலிகளின் சித்திரவதை முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். இரண்டாவது தடவையாக புலிகளின் நீதிமன்றத்தால் அவர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளியைக் கைது செய்வதற்காகச் சென்ற பொலிஸாரைக் கைது செய்த புலிகள் அதற்கான காரணங்களைப் புரிந்துகொண்டு அவர்களின் விடுதலைக்காக இதுவரை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இப் பொலிஸாரின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் புலிகளிடமிருந்து மனிதாபிமான அல்லது மனிதநேயமிக்க அணுகுமுறையை எதிர்பார்த்துள்ளது. தமக்காக இலங்கை அரசு மனிதாபிமானத்தை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கும் புலிகளின் மனிதாபிமானமற்ற செயலாக இதைக் கருத முடியும். இதைப்போல் புலிகளால் புரியப்படும் அரசியல் படுகொலைகள் தொடர்பிலும் அவர்கள் வெளிப்படுத்தும் மனிதாபிமானத்தை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

குடும்பஸ்தர்கள் மீதான படுகொலை, கோவில் பூசகர்கள் மீதான படுகொலை, கல்விமான்கள் மீதான படுகொலை என்று படுகொலை வகைகளின் பட்டியல் மிக நீளமானதாகும். என்னதான் புலிகள் கொலைகளுக்காக நியாயங்களைக் கூறினாலும் அல்லது குற்றங்களை வேறொரு தரப்பின் மீது சுமத்த முற்பட்டாலும் மறைக்கப்பட முடியாத உண்மைகள் இன்னும் சாட்சியங்களாக உள்ளன. ◎

---

# அதிரடி அய்யாத்துரை



**மத்தியில** கூட்டாட்சி, மாநிலத்தில சுயாட்சி எண்டதை தங்கட பொலிடிக்ஸ் இலக்கெண்டு சொல்லிக் கொண்டிருக்கிற வீணைக் கட்சிக்காரர், ஒற்றையாட்சிக் குள்ளாலதான் தீர்வெண்டு சொல்லுற வெற்றிலைச் சின்னக்காரருக்கு அதானுங்கோ, மஹிந்தமானவருக்கு உந்த எலக்ஷனில சப்போர்ட் பண்ணினமே எண்டு கூத்தமைப்பு எம்.பி.மார் பெருசா ஆதங்கப்படுகினம். எல்லாத்தையும் எடுத்தம் கவுத்தம் எண்டு எதிர்க்கிறதாலதான் இதுவரைக்கும் தமிழ் தரப்புக்கு ஒரு அங்குலத்தைத்தன்னும் நகர்த்த முடியாமப் போட்டுது. ஆகையால அவரின்ர நிலைப்பாட்டை எதிர்க்காம, அவரோடை பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, உந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையை இயங்கச் செய்தால் பிறகு படிப்படியா பிரச்சினைக்கு தீர்வு காணலாம். அதுமட்டுமில்லை, உந்தத் திட்டத்தை பெரும்பான்மை மக்களும் எதிர்க்கமாட்டினம் எண்டு வீணைக் கட்சியின்ர தலைவர் தேவமானவர் சொல்லுறார். ஆனால் பாருங்கோ, எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார் என்னவோ ஒற்றை ஆட்சி யெண்டால் ஆகாது எண்ட கணக்கா ரீல் விடுறவை. உத்தமமானவை எண்டால் ஒற்றையாட்சியை உறுதிப்படுத்தி ஆறாவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு ஏனுங்கோ இவை சத்தியப்பிரமாணம் செய்திருக்கினம். அண்ணன் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தையே தூக்கி எறிஞ்சவர். இவை என்னடாவெண்டால் அந்த ஒற்றையாட்சிக்குள்ள எம்.பி.பதவிக்கும், லோயருக்கும் பதவிப் பிரமாணம் செய்துபோட்டு சும்மா புருடா விட்டுக் கொண்டிருக் காங்கள். உதெல்லாம் பாருங்கோ சும்மா சனத்தை உசுப்பேத்திற வேலை தானுங்கோ....

**சொந்த** ஊரின்ர சுடலையில தன்ர இறுதிச் சடங்கு நடத்த யாரும் தடையா இருந்திடக் கூடாதெண்டதே சில பேராசிரியர்மாருக்கு வாழ்நாள் இலக்காக கொண்டிருக்கினமுங்கோ. என்னடா இது சாக முதலே சுடலையைப் பத்திக் கவலைப்படுற அந்த மண்பற்றுமிக்க பெருத்த பேராசிரியர் யாரு எண்டு தானே திங் பண்ணுறியள். இதில திங் பண்ண எண்ணங்கோ இருக்கு. கொழும்பில பிளட்ஸ் வேண்டி சொகுஷா இருந்து கொண்டு பேராசிரியர் எண்ட லைசன்சைக் காட்டிக் கொண்டு தாயகக் கோட்பாடுகளுக்கும், தேசியத்துக்கும் புதிய வியாக்கியானம் பேசிக்கொண்டு கட்டுரை எழுதிறவர் தன்ர சொந்த ஊரிலேயே தனக்கு நல்லடக்கம் நடக்க வேணுமெண்டதுக்காகத் தானுங்கோ உப்பிடியெல்லாம் பாடு படுறாராம். முடிஞ்சால் ஒரு பட்டத்தையும் வாங்கிக்கொள்ள வேணும் எண்டும் ஒரு பகல் கனவும் கண்டு கொண்டிருக்கிறாராம். காலம் எப்புடிக் கெட்டுக்கிடக்கு கண்டியளோ. தேசியத்தின்ர பேரால படுகொலைகள் புரியப்பட்டால் அது தேவையானது தானெண்டு தாளந் தட்டிறது தன்ர நல்லடக்கம் நல்லபடியா நடக்கவேணுமெண்டதுக்காகத் தானுங்கோ வல்வையில உள்ள சோணப்பர் சுடலையில அப்புடி என்ன தான் புதைஞ்சு கிடக்கோ.

**அரசனை** நம்பி புருஷனை கைவிட்ட மாதிரி ரெண்டெழுத்தாரை நம்பி தன்ர கோடினேட்டர் பதவியும் பறிகொடுத்த ரி.வி.க்காரர் ரங்கமணியை சுனாமி உதவியில சுருட்டிக் கொண்டு போயிட்டார் எண்டு ரெண்டெழுத்தார்தான் முதலில தங்கட வெப்சைட்டில கொட்டை எழுத்தில செய்தி போட்டிச்சினம். பிறகு பிறகுதான் ரங்கமணி சுவிசுக்குப் போயிட்டாரெண்டு கதை பரவத் தொடங்கிச்சுது. ரங்கமணி மின்னிற நிகழ்ச்சி யிலையும் வெடிமலை நிகழ்ச்சியிலையும் காட்டின கூத்துகள் எல்லாம் பொய்யெண்டு நிரூபணமாகிடும் எண்டதாலை அவரைத் தேடிப்போனவை மிரட்டித்தான் ஆளை நாட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்திருக்கினமாம். ரங்கமணியை இப்பவெல்லாம் ரி.வி.யிலை பார்க்கேக்க, ஆள் முந்தியிருந்த உஷார் இல்லாமல் வேண்டா வெறுப்பாத்தான் இருக்கிறார் எண்டு தெரியுதுங்கோ. விட்டகுறை தொட்டகுறை மாதிரி விட்டுப்போட்டுப் போனாலும் திரும்பி வந்திட்டியள் எண்டால் விரும்பிச் செய்யுமாப்போல காட்டி கொள்ளத்தானே வேணும்? ரங்கமணியின்ர ராசி அப்படிங்கோ....

**தனியார்** வானொலி ஒன்றின் செய்தியாசிரியர் ஒருவர் அண்மையில வன்னிக்குப் போயிருந்தவராம். போன இடத்தில ரெண்டெழுத்தாரின்ர ஊடகத்துக்குப் பொறுப்பானவரையும் ஒருக்காச் சந்திச்சவராம். அவரோடை கதையோட கதையா தமிழ் ஊடகங்களின்ர போக்குப் பத்திக் கேட்டதுக்கு, அடக்கமுடியாத சிரிப்போடை பொறுப்பானவர் என்ன சொன்னவராம் தெரியுமோ, உண்மையைச் சொல்ல வேணுமெண்டால் உந்தத் தமிழ் ஊடகக்காரருக்கு அவையள் எப்புடி நடந்து கொள்ள வேணுமெண்டு அதாவது ரெண்டெழுந் தாரைப்பற்றி எந்தளவுக்கு செய்தி போடவேணுமெண்டு சொன்னோமோ, அதைவிடவும் ஓவராத்தான் நடந்து கொள்ளினம். அதுதான் தங்களுக்கு ஆச்சரியமாக் கிடக்கு எண்டாராம். பாத்தியளோ, எங்கட தமிழ் ஊடகக்காரர் உப்பிடி இஷ்டத்துக்கு வாங்கிக் குத்தினமே எண்டு யோசிச்சவைக்கு இப்ப ஒரு உண்மை அம்பலப்பட்டுப் போயிட்டுது. ரெண்டெழுத்தார் லிமிட் பண்ணினது என்னவோ உண்மைதான். ஆனால் அதுக்கும் மேலா இவை போயிட்டினம். நீதியாவும், தர்மமாவும் எந்த லிமிட்டில செய்தி போடுகினமோ தெரியாதுங்கோ. ஆனால் தேசியத்துக்காக ரொம்பவும் தானுங்கோ விழுந்து எழும்புகினம்.

**திருவாணமலையில** 'பொங்கு தமிழ்' நடந்ததெல்லோ. உண்மையில தமிழ் பொங்குச்சுதோ இல்லையோ தெரியாது. ஆனால் உதுக்கு செலவுக்காக தங்கட ஒருநாள் சம்பளத்தை பறிகொடுத்தவையின்ர வயிறு பொங்கிச்சுதுங்கோ. அதாலதான் சனம் உந்த நிகழ்ச்சிக்கு வராமல் வீட்டோட இருந்துச்சுதுகளாம். ஒருநாள் சம்பளத்தையும் பறிகொடுத்துப்போட்டு ஒரு நாளையும் செலவழிச்சால் யாருக்குங்கோ நஷ்டம். சனத்தின்ர வயிறு உப்பிடி பொங்கேக்கையும், தனக்கும் உதுக்கும் சம்பந்தமில்லை எண்ட மாதிரி சம்பந்தமானவர் அடுத்த பக்கம் திரும்பிக் கொண்டுதான் தலைமையேற்று நடத்தினவராம். ஆஹா...ஆஹா...இதுவெல்லோ தமிழ் பற்று, மண் பற்று, தேசப் பற்று. மகா ஜனங்களேப்! நல்லா ஞாபகம் வச்சுக் கொள்ளுங்கோ. அடுத்த எலக் ஷனில உதே முகத்தை உங்கட பக்கம் மட்டுமே திருப்பிக் கொண்டு கும்பிடு போட்டுக் கொண்டு ஒரு ரெடிமேட் சிரிப்பை கருங்கிப் போன மேல் உதட்டுக்கும் கீழ் உதட்டுக்கும் இடையில தொங்க விட்டுக் கொண்டு வருவாங்கோ. அப்ப நீங்கள் எந்தப் பக்கம் பார்க்கப் போறியள் எண்டதை இப்பவே தீர்மானிச்சுக் கொள்ளுங்கோ.

**அதிகாரத்துக்கான** எலக்ஷன் வேலைகள் வடக்கு, கிழக்குக்கு வெளியிலை பரபரப்பாக நடந்து கொண்டிருக்கெல்லோ. ஆனால் எங்கட வடக்கு, கிழக்கு இதுவரைக்கும் ஆரவாரமா ஒண்டையும் காணயில்லை யுங்கோ. உதுதான் சாட்டெண்டு பச்சைக் கட்சிக்காரர் கூட்டங்களை நடத்தலாமெண்டு யோசிச்சினம். ரெண்டெழுத்தார் உந்த எலக்ஷனில அக்கறை காட்டயில்லையெண்டிட்டினம். ஆகையால தாங்கள்தான் கூட்டம் நடத்த வேணுமெண்டிட்டு பச்சைக் கட்சிக்காரர் அனுமதி கேட்டிருக்கினமாம். ரெண்டெழுத்தாரும் கிரீன் சிக்னல் காட்டியிருக்கினமாம். நீலக் கட்சிக்காரர் பாதுகாப்புக் காரணங்களுக்காக உங்காலைப் பக்கம் போகமுடியாமல் யோசிக்கிறாராம். அதனால் பச்சைக் கட்சிக்காரர் வாச்சுப் போச்சுது எண்டு யோசிக்கினமாம். பழசு பழசாவே இருக்கட்டும் எண்டு மண்ணெண்ணை யாரிட்டச் சொல்லி குடா நாட்டில கூட்டமொண்டை நடத்தச் சொல்லிச்சினமாம். பச்சைக் கட்சிக்காரர் கேக்கினமெண்டாலும், தன்ர படத்தை யாழ்ப்பாணத் தியேட்டரில ஓட்டக்கூடாதெண்டு ரெண்டெழுத்தார் போட்ட உத்தரவை எப்புடிங்கோ மீறிறதெண்டுதான் மண்ணெண்ணையாருக்கு கிடுக் கலக்கமா இருக்குதாம்.


# பயணத்தடையும் பிரஸல்ஸ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும்

**இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் தமிழாக்கம்.**

புலிகள் மீது ஐரோப்பிய யூனியன் விதித்திருக்கும் பயணத்தடையை உடனடியாக நீக்கக்கோரி, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலுள்ள தனது முகவர் அமைப்புகளை பிரஸல்ஸில் அக்டோபர் 24ஆம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை நடத்துமாறு புலிகள் இயக்கம் உத்தரவிட்டுள்ளதென்ற செய்தி தொடர்பாக நான் இதனை எழுதுகிறேன். இலங்கையைப் பணயமாகப் பிடித்து வைத்திருக்கும் புலிகள் இயக்கம் அதனது மிரட்டலையும் பயங்கரச் செயற்பாடுகளையும் தற்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மீது விஸ்தரிக்க முனைகிறது. மிக விரைவில் முழு உலகத்துக்கும் அதனை விஸ்தரிக்க முனையும் புலிகள் இயக்கத்தின் இந்த உத்தரவையேற்று ஐரோப்பா, பிரிட்டன் மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த பல மக்கள் இந்த உத்தேசப் பேரணியில் பங்குபற்றவுள்ளனர் இவர்கள் ஒன்றில் தாம் வாழும் நாடுகளின் பிரஜைகளாகவோ அல்லது நிரந்தரவாசிகளாகவோ உள்ளனர். இவர்கள் தாம் வாழும் நாடுகளில் தமது பிள்ளைகளின் கல்வி உட்பட சகல வசதிகளையும் அனுபவித்து வருகின்றனர். இவர்களில் அதிகமானோர் தமது பெற்றோர்களையும் நெருங்கிய உறவினர்களையும் தாம் வசிக்கும் நாடுகளுக்கு அழைத்துள்ளனர். பிள்ளைகளுக்குப் போர்ப் பயிற்சியளிப்பது உட்பட புலிகளின் சகல நடவடிக்கைகளுக்கும் நிதியுதவி அளிப்பவர்கள் இவர்களே.

புலிகளின் மிக அதிகமான யுத்த நிறுத்த மீறல்களையும் மற்றும் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் புலிகள் மறுதலித்து பல வருடங்களாக அவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் பலாத்காரமாக அடக்கி வைத்திருப்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்வீர்களேயானால், இதுவரை ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருக்கும் தடைகள், மிகவும் சொற்பமானவையென்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்த ஏற்பாடுகளின் காரணமாகவே புலிகளால் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைய முடிந்துள்ளது. முதலிரு மாதங்களிலும் இப் பகுதிக்குள் புலிகள் நுழைவது ஐம்பதாகவும் நூறாகவும் மட்டுப்படுத்தப்பட்ட போதிலும் மூன்றாவது மாதத்திலிருந்து பெருமளவு எண்ணிக்கையில் அவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து சேர்ந்தனர். இப்போது அவர்கள் அனேகமாகச் சகல பகுதிகளிலும் நுழைந்துள்ளதோடு குறிப்பாக வடக்கையும் இப்போது அவர்கள் கட்டுப்படுத்தி வைத்துள்ளனர். இப் பகுதிகளில் சகல உரிமைகளையும் அனுபவித்து வந்த மக்கள், பல அடிப்படை உரிமைகளைத் தற்போது இழந்துள்ளனர். இப் பகுதிகளில் ஆகக்குறைந்தது ஒருவராவது கொல்லப்படாமல் ஒரு நாளாவது கழிவதில்லை. அரசியல் நோக்குக்



வி.ஆனந்தசங்கரி

கொண்ட கொலைகள் வலுக்கட்டாயமாகக் கைது செய்தல், தொந்தரவுகள், ஆட்கடத்தல்கள், தடுத்து வைத்தல், சித்திரவதை, கப்பம் வாங்குதல், மிரட்டுதல், காணாமல் போதல், பிள்ளைகளைப் பிடித்துச் செல்லல் ஆகியவை புலிகள் மேற்கொள்ளும் பல அடிப்படை உரிமை மீறல்களில் சிலவாகும். இப்போதும் புலிகள் மேற்கொள்ளும் உரிமை மீறல்கள் தொடர்கின்றன.

இத்தகைய தீய செயற்பாடுகளுக்கு மத்தியிலும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் சிறந்த வசதிகளைப் பெறப்புலிகள் தவறவில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்னர் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைய துணிவற்றிருந்த நூற்றுக்கணக்கான புலிகள், பயணத்தடை அமுல்படுத்தப்படுத்தப்படாத வரை அரசாங்கப் பந்தோபஸ்துடன் வெளிநாடுகளுக்குச் சுதந்திரமாகச் சென்றனர். விமான நிலையத்துக்குச் செல்ல ஹெலிகொப்டர்களும் வழங்கப்பட்டன. அரசாங்க செலவில் பெருந்தொகையான பொருட்கள் பரிசோதனை செய்யப்படாமலேயே கொண்டு வரப்பட்டன. நோர்வே ஏற்பாட்டாளர்களைப் புலிகள் சுரண்டவும் தவறவில்லை. புலிகளின் பயணச்செலவுகள், ஹோட்டல் வசதிகள், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்புகள், கருத்தரங்குகள் ஆகியவற்றிற்கெல்லாம் நோர்வே ஏற்பாட்டாளர்களே பணம் செலுத்தினார்கள்.

மூன்று வருடங்கள் எட்டு மாதங்களுக்கு முன்னர் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதையடுத்து புலிகளைச் சென்று சந்தித்த பல ராஜதந்திரிகள் மற்றும் முக்கியத் தலைவர்கள் மக்களைக் கொல்வதையும் சிறுவர் பேராளிகளைச் சேர்த்துக் கொள்வதையும் நிறுத்துமாறு புலிகளுக்குப் பல தடவைகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். புலிகள் பல தவறுகளை இழைத்துள்ளனர் என்று கண்டு கொள்ளப்பட்டிருந்தாலும் இந்த இரு விடயங்கள் குறித்தே அவர்களுக்கு அழுத்தம் தரப்பட்டிருக்கிறது. இந்த ஆலோசனைகளுக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை. பயணத்தடை விதிக்கப்பட்ட பின்னரும் கூட படுகொலைகளிலும் பிள்ளைகளைக் கடத்துவதிலும் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். இது சர்வதேச சமூகத்திற்கும் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் சவாலாக அமைந்துள்ளது.

2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை நெதர்லாந்துத் தூதுவர் திருமதி சுஸான் பிலாங்கார்ட், பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஸ்டீபன் எவான்ஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொறுப்பதிகாரி வூல்ட்டர் வில்சன் ஆகியோர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து இவற்றை நிறுத்துமாறு ஆலோசனை கூறினார்கள்.

2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அமெரிக்காவின் பிரதி வெளிவிவகாரச் செயலாளர் ஆமிடேஜின் சார்பில் அடம் ரெல் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ் டெட்டுடன் நிலைமைகள் குறித்து கலந்தாலோசித்த பின்னர் விடுத்த அறிக்கையில் படுகொலைகளும் தற்கொலை குண்டுத் தாக்குதல்களும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்றும் சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்துக் கொள்வது நிறுத்தப்படவேண்டுமென்றும் தெரிவித்திருந்தார்.

புலிகள் வன்செயல்களைக் கைவிட வேண்டும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்க வேண்டும், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வொன்றைக் காணுதல் என்ற ஒஸ்லோ பிரகடனத்தின் கொள்கைகளை புலிகள் மதித்து நடக்க வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றெல்லாம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் பெரேரோ வால்ட்னே 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் கூறினார்.

புலிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு முதற்படியாக அவர்கள் மீது பயணத்தடை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த தீர்மானம் நியாயமானது என்பதை எடுத்துக் கரட்டுவதற்கு மேலே கூறப்பட்ட மூன்று தரப்பினரின் கருத்துகளும் போதுமானதாகும்.

பிரஸல்ஸில் புலிகள் நடத்தவிருக்கும் ஆர்ப்பாட்ட பேரணியைத் தடை செய்வதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் சர்வதேச சமூகத்தைக் கோருகிறேன். புலிகளோடு இணங்கிப் போகாதவர்களைக் கொலை செய்வதற்கும் பிள்ளைகளைப் படையணிகளில் சேர்த்துக் கொள்வதற்கும் புலிகளுக்கு உரிமையுண்டென்பதை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வலியுறுத்துவதற்காகவே உண்மையில் இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேரணியில் கலந்து கொள்ள இருப்பவர்களிடம் அவர்கள் விரும்பினால் தமது மனைவிகள் பிள்ளைகள் சகிதம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லலாமென்று மரியாதையாக அவர்களுக்குச் சொல்லப்படவேண்டும். அத்துடன் ஜனநாயக சமூக அமைப்பில் ஏகப் பிரதிநிதித்துவம் என்ற கருத்தோட்டம் என்றுமே ஏற்றுக்கொள்ளப்பட முடியாதென்றும் பாஸிச அரசொன்றின் கீழேயே அது பொருத்தமானதாக இருக்குமென்றும் அவர்களுக்குச் சொல்லப்பட வேண்டும். பாஸிச சக்திகளால் நவீன ஜனநாயகம் நாசப்படுத்தப்பட முடியாது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகளைத் தடை செய்வதே, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இருக்கக் கூடிய ஒரே வழி. புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்கு சர்வதேச சமூகத்திற்குக் கிட்டியிருக்கும் மிக அருமையான சந்தர்ப்பம் இதுவாகும்.

புலிகளை ஏகப்பிரதிநிதிகளென்று கூறிக்கொள்ளும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்கள் பிள்ளைகளைப் படையணிகளில் சேர்த்துக் கொள்வதையோ அல்லது யாழ்ப்பாணத்தில் கடைசியாகக் கொலைசெய்யப்பட்ட இரு முன்னணிக் கல்லூரி அதிபர்கள் உட்பட, பல படுகொலைகளையோ கண்டிக்காதது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. பிரஸல்ஸில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்கள் சிலரும் பங்குபற்றத் திட்டமிட்டுள்ளனர். இவ்வாறு ஆனந்தசங்கரி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


## சிங்கப்பூரில் தங்குமிட வசதி



சிங்கப்பூரில் வீடுமுறையைக் கழிக்கவும் திருமணத்துக்கு வருபவர்களுக்கு எல்லா வசதிகளோடும் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும் விபரத்துக்கு எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாக

கை தொலைபேசி எண் : 0065 97514941

தொலை நகல் (Fax) : 0065 64816144

படத்தில் காணும் அப்புவீடம் தொடர்பு கொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**

10, Anson Road, #15-14, International Plaza, Singapore 079903



## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு


Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"

"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"









## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com


விளம்பரப் பகுதி

## ஓராண்டு நினைவுகளில்

புவியில் 24 05 1968



விண்ணில் 19 10 2004

### அமரர் திருக்கேதீஸ்வரநாதன் ஸ்ரீதரன்

### T.K. குட்டி (ஜேர்மன்)

**திதி 23 – 10 – 2005**

வாழ்க்கை இவ்வளவுதானா என்று
வாழ்ந்து காட்ட முன்பு
இளமையில் எம்மை விட்டுப் பிரிந்த
ஈடில்லாத அன்புச் செல்வமே!
சொல்லால் வர்ணிக்க முடியாத – என்
சோக முடிவை நினைக்கையிலே
வல்ல ஓர் மூல சக்தி – தன்
வலிமையைக் காட்டி விட்டதே
எல்லையில்லாக் கனவுகள் – எம்
இதயத்தில் வைத்தோம்
உள்ள அத்தனையும் உடைந்ததே
உன் ஆத்மா சாந்தியடைய
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
தாய் பரஞ்சோதி, சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள். மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்

பரீஸ், பிரான்ஸ்

## இன்னொருவர் பார்வையில்

**மனித** உரிமைகள் தொடர்பாகத் தமது உறுதிப்பாட்டினைத் தெரிவிக்குமாறு கோரிப் புலிகள் இயக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதென்பது ஓர் இமாலயப் பணியாகும். 2003ஆம் ஆண்டு ஹக்கோன் பேச்சுவார்த்தைகளின்போது, மனித உரிமைகள் சம்பந்தமாகச் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவொன்று வேண்டுமென்ற யோசனையை ஆரம்பத்திலேயே நிராகரித்த புலிகள், அனேகமாக இரண்டரை வருடங்கள் கழிந்த நிலையில் மீண்டும் அந்த விடயத்தைப் பற்றிப் பேச விரும்பாமல் கடந்த வாரம் நழுவி விட்டனர். யுத்த நிறுத்தம் பற்றிப் பேசுவதே உடனடித் தேவையென்று கூறி மனித உரினடித் விவகாரத்தைத் தட்டிக் கழித்து விட்டனர்.

புலிகளை வளைத்துப் பிடித்து மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தமொன்றுக்கு வருவதற்குக் கடைசியாக முயற்சி மேற்கொள்ளப்பட்ட தற்போதைய தருணம் உகந்ததல்ல.

சில வாரங்களுக்கு முன்னர் பயணத்தடை விதிக்கப்பட்டிருப்பதால், சர்வதேச சமூகம் எந்த நடவடிக்கையையும் எடுக்கலாமென்று புலிகள் நினைப்பதற்குக் காரணங்கள் இருக்கின்றன. இதனால்தான் ஹக்கோனில் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட உத்தேச மனித உரிமைகள் பிரகடனம் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டபோது, புலிகள் கொடுத்த பதிலுக்கு இந்த அச்சமே காரணம். முன்னைய ஆட்சியின்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டவர்களும் தற்போதைய சமாதான செயலகத் தலைவர் ஜயந்த தனபாலவும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் புறம்பாகவே மனித உரிமைகள் விடயம் பற்றிப் பேச வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளனரென்பதையே இயன் மார்ட்டின் என்றுமே கூறிவந்துள்ளார்.

இதற்கு மத்தியிலும் மனித உரிமைகள் பிரகடனம் சம்பந்தமான பிரச்சினை கிளப்பப்பட்டபோது, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மூடுதிரையாகப் புலிகள் இயக்கம் பயன்படுத்திக் கொண்டது. யுத்தநிறுத்தம் சம்பந்தமான உத்தேசப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னரே மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடலாமென்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், இயன் மார்ட்டினிடம் தெரிவித்தார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சிறந்த செயற்பாடுகளுக்கு இரண்டாந் தர அம்சமாக மனித உரிமைகள் விவகாரம்

**'மனித உரிமைகள்: புலிகள் காட்டுத் தர்பாரையே விரும்புகின்றனர் என்ற தலைப்பில் சம்பிக்க லியனாராச்சி என்ற அரசியல் ஆய்வாளர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது. இந்தக் கட்டுரை கடந்த 19ஆம் திகதி 'டெயிலி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்னர் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் அதாவது இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் போது மனித உரிமைகள் பற்றி இருதரப்பும் இணக்கம் கண்டன. ஆனாலும் மனித உரிமைகளைக் கண்காணிப்பது தொடர்பாக சர்வதேசக் குழு ஒன்றினை அமைப்பது குறித்துப் புலிகள் இன்று வரை நழுவல் போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.**

இருக்கத்தக்கதாக இப் பிரகடனம் மீளாய்வு செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

அடுத்த ஜனாதிபதியாக எவர் தெரிவு செய்யப்பட்டாலும், இரண்டரை வருடங்களாகத் தேய்ந்து, தேக்கமுற்றிருக்கும் சமாதானப் பொறிமுறைக்குப் புத்துயிரளித்த பின்னரே அதனை உந்தித் தள்ளி ஆரம்பிக்க வேண்டியுள்ளது. 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஹக்கோனில் அரசாங்க மற்றும் புலி இயக்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக்கென அமர்ந்தபோது, மனித உரிமைகள் தொடர்பான யோசனைகளை இயன் மார்ட்டின் முன்வைத்தார். மனித உரிமைகள் தொடர்பான கொள்கைப் பிரகடனமொன்று வெளியிடப்பட வேண்டுமென்றும் மனித உரிமைகள் பேணப்படுவதற்கும் கண்காணிப்பதற்கும் பொறிமுறையொன்று தேவையென்று இருதரப்புகளும் இறுதியாக ஏற்றுக் கொண்டன.

# மனித உரிமைகளும் புலிகளும்

பலராலும் எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு மாதம் முன்பதாகவே சர்வதேச மன்னிப்புச் சபை முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் இலங்கைக்கு விஜயம் செய்தார். அதாவது இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் மோசமான பிரசாரத்திலீடுபட்டு தெற்கைக் கலக்கியடித்துக் கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் அவர் விஜயம் மேற்கொண்டார்.

மறுபுறத்தில் புலிகள், மனித உரிமைகள் சம்பந்தமான தமது உறுதிப்பாட்டைத் தெரிவிப்பதில் நழுவல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்கள். இருந்தாலும் வடக்கு, கிழக்குப் பிரச்சினையில் இரு பிரதான வேட்பாளர்களும் நேரெதிர் நிலைப்பாட்டை எடுத்திருக்கும் நிலையில் தேர்தலுக்கு முன்னர் யுத்தமா? சமாதானமா? என்பதில் தீர்க்கமான தீர்மானம் எதையினையும் புலிகள் எடுக்கப் போவதில்லை.

இயன் மார்ட்டின் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட வேளையில் அரசாங்கப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையிலான, 'நிழல் யுத்தம்', உக்கிரமடைந்திருந்தது. அவர் விஜயம் மேற்கொண்டிருந்தபோது, முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் யாழ்ப்பாணத்தில் கல்லூரி அதிபர்கள் இருவர் கொலை செய்யப்பட்டனர். அத்துடன் படை வீரர்கள், பொலிஸ்காரர்கள் ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் அத்துடன் புலி உறுப்பினர்களெனப் பல தொடர்ச்சியான படுகொலைகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு, வவுணதீவில் புலிகள் மீது கருணா குழுவினர் நடத்திய தாக்குதலில் நான்கு புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். புலிகளின் மட்டக்களப்புப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் கார்த்திக் உட்பட ஏழு பேர் காயமுற்றனர்.

கடந்த வாரம் கொழும்புக்கு வருகை தந்திருந்த நோர்வேயின் விசேட பிரதிநிதியும் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவருமான ரொன்ட் புருவ் ஹொவ்டே, இந்த வன்செயல் அதிகரிப்புக் குறித்துக் கூறுகையில், பாதுகாப்பு நிலைமை மிகவும் ஆபத்தாகவுள்ளதென்று குறிப்பிட்டார்.

தேர்தலுக்கு முன்னர் புலிகள் திட்டவட்டமான உறுதிப்பாடுகள் எதனையும் முன்வைப்பார்களென்று இயன் மார்ட்டின் எதிர்பார்க்கமாட்டார். மிகவும் ஆபத்தான முறையில் வன்செயல்கள் அதிகரித்து வருவதால், தேர்தலுக்கு முன்னர் புலிகளிடம் உறுதிமொழியைப் பெறுவதற்கு இயன் மார்ட்டின் எண்ணியிருக்கலாம். தேர்தலுக்குப் பின்னர் மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக இயன் மார்ட்டின் இவ்வாறு முயற்சியெடுத்திருக்கலாம். மனித உரிமைகள் தொடர்பான உறுதிமொழியை வழங்குவதைப் புலிகள் தவிர்த்துக் கொண்டாலும், புலிகளின் செயற்பாடுகள் குறித்து சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறதென்பதைப் புலிகளுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியது மிக முக்கியமானதாகும். எனவே மனித உரிமைகள் தொடர்பான விடயத்தை மறைப்பதற்குப் புலிகளால் முடியாது.

மாற்றப்படக் கூடாதென்று மட்டுமே ஜயந்த தனபால தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் புதுப்பிக்கப்பட்ட பாத்திரமொன்றினை வகிக்க விரும்பும் இயன் மார்ட்டின், அடுத்ததாக என்ன செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். எதற்கும் ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை அவர் பொறுத்திருக்க வேண்டும்.

**வலுவான அதிகாரமுள்ள புதிய கண்காணிப்பு பொறிமுறையொன்று புதிய அணுகுமுறைகளுடன் ஏற்படுத்தப்படாவிட்டால் மிக மோசமாக சிதைவடைந்து கொண்டிருக்கும் மனித உரிமைகள் நிலைமையை கட்டுப்படுத்த எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் பயனற்றுப் போய்விடும். இதைத்தான் இயன்மார்ட்டின் இந்தப் பயணத்தின் போது சரிவரப் புரிந்து கொண்டி ருக்கிறார். அதனால்தான் சர்வதேச விசாரணை அதிகாரம் கொண்ட மனித உரிமைகள் அமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டியது மிக அவசரத் தேவையென்று மார்ட்டின் கொழும்பில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.**

ஏற்கனவே அவர் இரண்டரை வருடங்கள் பொறுத்துப் பார்த்துவிட்டார். சர்வதேச சமூகம் புலிகள் மீது போதிய அழுத்தத்தைச் செலுத்தத் தவறியதால் புலிகள் தங்களால் இயன்றவரை மனித உரிமைகள் தொடர்பான உறுதிமொழி அளிப்பதைத் தவிர்த்து வருகிறார்கள் என்பதையே அவர்களின் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. மனித உரிமைகள் தொடர்பான விடயத்தை, ஆறாவது சரத்தாக உள்ளடக்கி பெரும் எடுப்புகளோடு டோக்கியோ பிரகடனம் வெளியிடப்பட்டது. இதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் அப்படியே

இது சிந்தனைக்குரிய விடயம். அதாவது முன்னைய ஐ.தே.மு. ஆட்சியின் சமாதானப் பேச்சாளர்கள், மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளை மீளாய்வு செய்வதற்கு உகந்த பொறிமுறையொன்றினை ஏற்படுத்துவதில் தாமதம் காட்டியதாகச் சிவில் சமூகம் குற்றஞ்சாட்டியது.

ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது புலிகளை வளைத்து மடக்குவதற்குக் கிடைத்த அரியதொரு சந்தர்ப்பம் தவறவிடப்பட்டதாக சிவில் சமூகம் குற்றஞ்சாட்டியது. அப்போதைய பிரதான பேச்சுவார்த்தையாளரான ஜீ.எல்.பீரிஸ் புலிகளின் அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுத்து, வடக்கு - கிழக்கில் மனித உரிமைகளைக் கண்காணிக்க சர்வதேசக் கண்காணிப்புக் குழுவொன்றின் தேவையை நிராகரித்தனர். அதாவது புலிகளின் பிரதான பேச்சுவார்த்தையாளர், குறிப்பாகத் தமிழ்ச்செல்வன் புலிகள் இயக்கம் இராணுவ அமைப்பென்ற நிலையிலிருந்து அரசியல் இராணுவ சக்தியாக பரிணாம மாற்றம் பெறும் கட்டத்தில் புலிகள் இயக்கம் இருப்பதால், இப்போதைக்கு அவசரப்பட்டு அதனை மேற்கொள்ளத் தேவையில்லையென்று எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்தே ஜீ.எல்.பீரிஸ் விட்டுக் கொடுத்தார்.

மனித உரிமை விடயங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி அரசாங்கத் தூதுகோஷ்டிக்கு எடுத்து விளக்கி உதவுவதற்காக சிவில் சமூக ஆர்வலர்கள் குழுவொன்று இலங்கையிலிருந்து அப்போது ஹக்கோனுக்குச் சென்றிருந்ததென்பது நினைவில் கொள்ளத்தக்கது. புலிகளின் கோரிக்கைக்கிணங்க அரசாங்கச் சமாதானப் பேச்சாளர்கள் மக்களைக் குறிப்பாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள மக்களை இந்த நெருக்கடியான தருணத்தில் கைவிட்டுள்ளனரென்று அரசாங்கத் தூது கோஷ்டிக்கு உதவுவதற்காக ஹக்கோன் சென்றிருந்த இலங்கையின் மிக முக்கிய மனித உரிமை ஆர்வலரொருவர் நாடு திரும்பியதும் குறிப்பிட்டார்.

சமாதான முயற்சிகளைப் பாதுகாப்பதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களின் பாதுகாப்பும் சுதந்திரமும் பலியிடப்பட்டுள்ளனவென்று அப்போது அவர் கூறினார். இந்த விடயம் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நோர்வேயின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் வலியுறுத்தினார். ஆனால், மனித உரிமை விவகாரத்தைப் பெரிதாக வற்புறுத்த வேண்டாமென்று நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பர்க் கூறினார். புலிகளைப் பொறுத்த வரையில் அன்ரன் பாலசிங்கம்

சில சந்தர்ப்பங்களில் விட்டுக் கொடுப்பவர்போல் காணப்பட்டார். பிரபாகரனின் குரலாகக் கணிக்கப்படும் தமிழ்ச்செல்வன் விட்டுக்கொடுக்க மறுத்து கடும்போக்கு நிலைப்பாட்டை எடுத்தார். சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவொன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்ற விடயம் பேச்சுவார்த்தைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது இந்த விடயத்தைக் கையாளுவதற்கு வெளிநாட்டு ஆலோசனைகளைப் பெற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவை மேலும் பலப்படுத்தலாமென்று பிரதம பேச்சுவார்த்தையாளர் ஜீ.எல்.பீரிஸ் கூறினார். அமைச்சர் மிலிந்த மொரகொட மேலும் ஒருபடி முன்னே சென்று மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பலப்படுத்துவதோடு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்களை அதிகரிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். யுத்தநிறுத்தக் காண்காணிப்புக் குழுவுக்கு சமாந்திரமாக மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்கு சர்வதேசக் குழுவின் சேவைகள் பெறப்படவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்று பூரண அதிகாரங்களுடன் நிறுவப்பட்டால் அது நாட்டின் இறைமையைப் பாதிக்குமென்ற அச்சம் காரணமாகவே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இதற்கு ஆதரவு வழங்க தவறியதென தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. நாட்டின் ஏனையப் பகுதிகளுக்கும் புதிய மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கோரப்படுமென்பதாலேயே இவ்வாறு அரசு பயந்ததாக சமாதான முயற்சியில் ஈடுபட்டோர்கள் உட்பட பலர் தெரிவித்தனர்.

இருக்கக்கூடிய பொறிமுறை மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்கான ஒன்றாக இருக்காதென்று மனித உரிமை ஆர்வலர்கள் எச்சரித்தனர். சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்றினை உருவாக்கினாலும் கூட பல்வேறு காரணங்களுக்காக அவை எதிர்பார்த்த பலனைத் தரப்போவதில்லையென்று அவர்கள் கூறினர். அதாவது அப்படியான ஒரு குழுவொன்றின் அதிகாரம் மற்றும் திறன்கள் மட்டுப்படுத்தப்படும் என்பதாலும் கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் இதனோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் பிரச்சினைக்குரிய காரணங்களாக அமையலாமெனவும் கருதினர்.

வலுவான அதிகாரமுள்ள புதிய கண்காணிப்பு பொறிமுறையொன்று புதிய அணுகுமுறைகளுடன் ஏற்படுத்தப்படாவிட்டால் மிக மோசமாக சிதைவடைந்து கொண்டிருக்கும் மனித உரிமைகள் நிலைமையை கட்டுப்படுத்த எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் பயனற்றுப் போய்விடும். இதைத்தான் இயன்மார்ட்டின் இந்தப் பயணத்தின் போது சரிவரப் புரிந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் சர்வதேச விசாரணை அதிகாரம் கொண்ட மனித உரிமைகள் அமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டியது மிக அவசரத் தேவையென்று மார்ட்டின் கொழும்பில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். இந்தக் கருத்துக்களின் மூலம் அவர் கூறுவது இதுதான். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசாரணை செய்வதற்கென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளோ செல்ல முடியாமல் இருப்பது சமாதான முன்னெடுப்புகளுக்கு பாரிய பின்னடைவென்று அவர் குறிப்பிடுகிறார். சமாதான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை வருடங்கள் கடந்துவிட்டன. இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் மிக அடிப்படையான இந்த மனித உரிமைகள் விவகாரம் பாரிய அளவில் கைவிடப்பட்டுள்ளது.

எனவே இந்த முக்கிய விடயத்தைக் கையாளுவதற்கு இன்னும் காலம் கனிந்து வரவில்லை. பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எவரும் கூறுவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

நன்றி : டெய்லி மிரர்


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**முழுப்** பாடலையும் எழுதி முடித்த பிறகு, பாடலை எம்.ஜி.ஆரிடம் காட்டுவதற்காக, நானும் நண்பர் முரசொலி மாறனும் ஜெமினி ஸ்டுடியோ சென்றோம்.

மாறன் வெளிலே தங்கிவிட நான் மட்டும் எம்.ஜி.ஆரின் மேக்கப் ரூமிற்குள் சென்றேன்.

அப்போது எம்.ஜி.ஆர். ஜெமினியில் 'நீரும் நெருப்பும்' படப் பிடிப்பிற்கான ஒப்பனையில் இருந்தார்.



முழுப் பாடலையும் நான் எம்.ஜி.ஆரிடம் பாடிக் காண்பித்தேன். அந்தப் பாடலில், உயிருக்கு அஞ்சாது நாட்டுக்கு உழைத்தோர் பற்றியெல்லாம் சரணங்களில் எழுதியிருந்தேன்.

எம்.ஜி.ஆர். பாட்டைக் கேட்டுவிட்டு வெகுவாக சந்தோஷப் பட்டார். நான் விடைபெற்றுக் கிளம்பும்போது என்னை மறுபடியும் தன் ரூமுக்குள் அழைத்தார்.

'வாலி', நாட்டுக்காக, உயிரைத் துச்சமா நினைச்சவங்களப் பத்தி இந்தப் பாட்டுல எழுதியிருக்கீங்க... அதெல்லாம் நல்லாயிருக்கு இருந்தாலும், தமிழ் மொழிக்காகத் தண்ட வாளத்துல தலெ வெச்சுப் படுத்தவரு, நம்ம கலைஞர்.. அவரைப் பத்தி ஒரு சரணம் எழுதி இந்தப் பாட்டுல சேத்துடுங்க...' என்று எம்.ஜி.ஆர். என்னிடம் கேட்டுக் கொண்டார். அவர் சொன்னது போலவே பாட்டி இரண்டாவது சரணத்தை நான் அமைத்தேன்.

இந்தப் படத்தில் என் பாட்டில் கலைஞரை உயர்த்தி நான் சொல்ல வேண்டுமென்று எம்.ஜி.ஆர். விரும்பியதுபோல் இதே படத்தில் இன்னொரு பாட்டில் எம்.ஜி.ஆரை உயர்த்தி நான் சொல்ல வேண்டுமென்று கலைஞர் விரும்பினார்.

படத்தின் கதாநாயகனாகிய எம்.ஜி.ஆர். -

*'நான் அளவோடு ரசிப்பவன்...'*

- என்று பாடுவதாக ஒரு பாடலை நான் 'எங்கள் தங்கம்' படத்தில் எழுதினேன்.

'நான் அளவோடு ரசிப்பவன்' என்று முதல் வரியை எழுதிவிட்டு, இரண்டாவது வரியை சிந்தித்துக் கொண்டிருக்கும் போது....

என் பக்கத்தில் அமர்ந்திருந்த கலைஞர்.

"வாலி! ரெண்டாவது வரியை 'எதையும் அளவின்றிக் கொடுப்பவன்' - என்று போட்டா நல்லாயிருக்குமே!" என்று என்னிடம் சொன்னார்.

நான் அவ்வாறே எழுதினேன்.

இப்படி, கலைஞரும் எம்.ஜி.ஆரும் பரஸ்பர அன்பு பாராட்டிய காலம் அது.

இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் அந்தக் காலத்துக் கதாநாயகர்களும், கதாசிரியர்களும், படப்பாடல்கள் எவ்வாறெல்லாம் அமைய வேண்டுமென்று அக்கறையும் ஆர்வமும் காட்டுவதுண்டு.

இன்றைய கதாநாயகர்கள், கதாசிரியர்கள், இயக்குநர்கள் எல்லாமே பாட்டு வரிகளைப் பற்றி இசையமைப்பாளர்களிடமே கலந்து பேசுமளவிற்கு, இன்னவரிகள் தான் இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்திச சொல்லும் அளவிற்கு - அக்கறையும் ஆர்வமுமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அப்படி ஏதாவது சொல்லப் போனால், இசையமைப்பாளர்கள் தங்களை ஓரங்கட்டி விடுவார்களோ என்று அஞ்சுகிறார்கள். எனவேதான், காட்சிக்குப் பொருத்தமில்லாத எத்துணையோ பாடல்களுக்கு, இவர்கள் 'ஏனோ தானோ'வென்று நடித்து முடிக்கிறார்கள்.

செழுமையான பாடல் வரிகள், தங்களையும் தங்கள் படங்களையும் உயர்த்தும் என்ற பிரக்ஞை இவர்களிடம் இல்லை.

அதனால்தான் - இது குறித்து நானும் மௌனமாகிப் போனேன்.

***'நிர்வாண மக்கள் வாழ்கின்ற நாட்டில் நெசவாளிக் கென்ன மரியாதை?'***

என்று ஒரு படத்தில் பாட்டெழுதி என் ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டதோடு விட்டு விட்டேன்.

(தொடரும்.......)




---

# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....




**க்**ரோஹனிடமிருந்து ஜெர்மன் இராணுவம் பற்றி நிறைய இரகசியங்களை அவள் சேகரித்தாள். ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் எந்தெந்த ஸ்பெயின் துறைமுகங்களில் தங்களுக்கு வேண்டிய எரிபொருளைப் பெறுகின்றன, ஜெர்மன் உளவாளிகள் பிரான்சுக்குள் நுழைகின்ற இரகசியப் பாதைகள் போன்ற பல தகவல்களையும் அவள் சேகரித்து தன்னுடைய பிரெஞ்சு எஜமானர்களுக்கு அனுப்பி வைத்தாள். மாட்ரிட் நகரில் அவள் வசதியாக வாழ்வதற்கு வேண்டிய பண உதவியை க்ரோஹன் செய்தார்.

ஆனால் உள்ளபடியே அவள் ஜெர்மன் அரசாங்கத்தின் உளவாளியாக வேலை பார்ப்பதைப் போலவே அவர் நம்பினார். அப்படியே ஜெர்மன் அரசுக்கும் தகவல் கொடுத்து அவள் வாழ்வதற்குத் தேவையான நிதி உதவியும் அவர்களிடமிருந்து பெற்று அவளுக்கு அளித்தார்.

ஆனால் போர் முடிந்து அவள் பிரான்ஸ் நாட்டுக்குத் திரும்பியபோது அவளுடைய சேவையை அந்த நாட்டு மக்களில் எவருமே அங்கீகரிக்கவில்லை. மார்த்தேயும் தம்பட்டமடித்து அதை விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. விரக்தியடைந்த அவள் இங்கிலாந்து சென்று கிராம்டன் என்கிற பிரிட்டிஷ்காரரைத் திருமணம் செய்து கொண்டு அமைதியான குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டாள். போர் முடிந்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவளுடைய உண்மையான சேவையைப் புரிந்துகொண்ட பிரெஞ்சு அரசாங்கம் Legion of Honour என்கிற விருதை வழங்கி அவளைக் கௌரவித்தது.

முதல் உலகப் போரின் போது ஜெர்மனியர்களுக்காக சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்ணொருத்தி உளவாளியாக வேலை பார்த்தாள். அவள் அடிக்கடி பிரிட்டனுக்குச் செல்வாள். பிரிட்டிஷ்காரர்களின் இராணுவ சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரித்துக் கொண்டு சுவிற்சர்லாந்துக்குத் திரும்பி வீடுவாள். பிரான்சில் மட்டும் எழுபது டிவிஷன் பிரிட்டிஷ் படைகள் இருந்தன. ஆகவே எல்லாத் தகவல்களையும் சேகரித்து நினைவில் வைத்துக் கொள்வது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. குறிப்பெடுத்துக் கொண்டு வர முடியாது. பிடிபட்டால் அவள் உளவாளி என்கிற விஷயம் வெளியாகி வீடும். அதற்கு அவள் ஒரு வழி கண்டுபிடித்தாள்.

இங்கிலாந்திற்குச் செல்லும்போது தன்னுடன் அவள் நிறைய பெட்டிகோட்டுகள் (உள் பாவாடை) கொண்டு செல்வாள். இங்கிலாந்தில் இருக்கும்போது அதன் ஓரங்களில் நூலினால் பூ வேலைப்பாடு செய்து திரும்ப எடுத்துக் கொண்டு வருவாள். எந்த வரிசையில் எத்தனையாவது இராணுவ டிவிஷன் இருக்கிறது, என்பதை நினைவில் வைத்துக்கொள்ள பெட்டிகோட்டுகளில் செய்யப்பட்ட பூ வேலைகளை அவள் பயன்படுத்திக் கொண்டாள்.

பூக்களில் போடப்பட்டிருக்கும் தையல்களை இதற்கு அவள் பயன்படுத்தினாள். முதல் பூவில் முப்பது தையல்கள் இருந்தால் முப்பதாவது டிவிஷன் முதலில் இருப்பதாக அர்த்தம். இப்படி தையல்களின் எண்ணிக்கையைக் கணக்கில் வைத்து யாரும் சந்தேகிக்காதபடி தகவல்களை அவள் கொண்டு வந்து கொண்டிருந்தாள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

**ஆசிய** மற்றும் அராபிய திரைப்படத் துறையானது தனக்காகப் போடப்பட்டிருந்த விலங்குகளைத் தகர்த்திருப்பதை அண்மைக்காலத் திரைப்படங்கள் காட்டுகின்றன. தற்காலத் திரைப்படங்களில் பாலியல் தொடர்பில் பகிரங்கமாகவும், மிகவும் விரிவாகவும் அவற்றில் பேசப்படுவதைக் காணலாம்.

ஒரு சமயம் கௌஷல்யன் கங்குலியின் Shunyo Ibuke எனும் திரைப்படம் கல்கத்தாவில் முதன் முறையாகத் திரையிடப்பட்ட போது இரசிகர்கள் பெரும் குழப்பத்தையே உண்டு பண்ணிவிட்டனர். இது ஒரு மோசமான அல்லது கெட்ட திரைப்படமென மிரினாள் சென் போன்ற கல்கத்தாவை கேந்திரமாகக் கொண்ட இயக்குநர்கள் கூட


# ஆசிய - அராபிய திரைப்படங்களில் அதிகரிக்கும் ஆபாசங்கள்



அத்திரைப்படத்தை பார்ப்பதையே நிராகரித்துவிட்டனர்.

மார்பகங்கள் மிகவும் சிறுத்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதை நிராகரித்த ஒருவனின் கதையை இத் திரைப்படம் தன்னகத்தே கொண்டிருந்தது.

வங்காளத்தில் இத்திரைப்படம் பல்வேறு விமர்சனங்



களுக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும் இவ்வருடம் டில்லியில் நடைபெற்ற 'ஓஷியன் சினே பேன்' ஆசியத் திரைப்பட விழாவில் இத்திரைப்படம் உயரிய கவனத்தைப் பெற்றுக் கொண்டது.

இத்திரைப்படத்தின் மூலம் தான் பாலியல் தொடர்பில் எவ்விதமான தூண்டுதல்களையும் மேற்கொள்ளவில்லை என அதன் இயக்குநர் கங்குலி கூறுகின்றார்.

"ஆண்களுக்குள் இருக்கின்ற குருட்டுத்தன மான பாலியல் புரிதல்களையும் அதன் முன்பாகப் பெண்கள் முகங்கொடுக்கும் இடையூறுகளையும் முன்வைப்பதே எனது நோக்கம். அதாவது இத்திரைப்படத்தின் மூலம் கூறப்படுகின்ற பாலியல் தொடர்பிலான மறைமுகக் கருத்துக்களின் ஊடாக எமது சமூகத்தில் தலைதூக்கியுள்ள மூடக் கொள்கைகள் மற்றும் அவற்றில் காணக்கூடிய சுயநலம் - குறுகிய இலாபம் என்பனவற்றை தெளிவு படுத்தும் நோக்கில் இத்திரைப்படத்தை இனங்காண முடியும் என்பது இயக்குநர் கௌஷல்யன் கங்குலியின் கருத்தாகும்.

'ஓஷியன் சினே பேன்' திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட திரைப்படங்களைப் பார்க்கும்போது அவ்வனைத்துத் திரைப்படங்களில் காணப்பட்ட ஒரு பொதுத் தன்மை பாலியல் ரீதியிலான பிரச்சினையாகும். ஒரு சிலர் இத்திரைப்படங்களை காமக் கண்கள் கொண்டு பார்த்திருக்கக் கூடும். ஆனால் உயரிய கலைக் கண்களால் பார்ப்பவர்களால் இத் திரைப்படங்களின் உயர் தரம் பற்றி குறைத்து மதிப்பிட இயலாது.

சம்பிரதாயபூர்வ பாலியல் செயற்பாடுகள் கொண்ட ஒரு சமூகத் தளத்தில் அதனுடன் கூடியதான முற்போக்குச் சிந்தனை சார்ந்த மேலைத்தேய சினிமாவின் குணவியல்புகளை இந்தத் திரைப்படங்களில் காணக் கூடியதாக உள்ளது.

பாலியல் தொடர்பான அணுகுமுறைகளை ஒவ்வொரு கோணத்தில் நின்று தெளிவுபடுத்துவதாக ஒவ்வொரு திரைப்படமும் அமைந்துள்ளது. அதாவது ஒவ்வொரு சினிமா இயக்குநரும் தான் கொண்ட பாலியல் என்ற விடயத்தை தான் சார்ந்துள்ள சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் மதப் பின்னணிகளைக் கொண்டு விவரிக்கின்றனர்.

ஈரான் நாட்டின் திரைப்பட இயக்குநரான (பெண்) நிக்கீ சலீம் இயக்கியுள்ள One Night எனும் திரைப்படத்தில் அனுமதிக்கப்பெற்ற ஒரு சமூக வழக்கு மீறப்படுகின்றமை தொடர்பில் ஆராயப்படுகின்றது. எனினும் இதனது வெளிப்பாட்டை இயக்குநர் மிகவும் கவனமாக மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இத் திரைப்படத்தின் முக்கிய கதாபாத்திரமான நெகார், தனது தாயாரால் ஒரு நாள் இரவு அவனது நண்பரின் வீட்டில் விடப்படுகின்றார். தனது தாய் அந்த வீட்டுக்கு வரும் ஒருவரால் மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதால் இவ்வாறு விடப்படுகின்ற இளைஞனான நெகார் வீதியில் நடந்து செல்லும் போது டெஹ்ரான் நகரில் வைத்து மூன்று இளைஞர்களைச் சந்திக்கின்றான். இம் மூவரும் தாங்கள் பெண்களுடன் கொண்டு வரும் பல்வேறு உறவு நிலைகளைப் பற்றிக் கூறி மகிழ்கின்றனர். இது இத்திரைப்படத்தின் உள்ளடக்கமாகும்.

இவர்களுள் ஆளுகின்ற பொய், பயங்கரமான சிந்தனைகள், துன்பப்பட்ட பாலியல் உணர்வுகள் என்பனவும் அவரவரின் மானசீக நிலைப்பாடுகளும் இங்கே தெளிவாக வெளிப்படுத்தப்படுவதாக இயக்குநர் கூறுகின்றார்.

இங்கே பல்வேறு சிந்தனைகளிடையே சிக்கித் தவிக்கின்ற நெகாரின் பாத்திரத்தின் ஊடாக ஆண் - பெண்பால் குறித்து நிலவுகின்ற சம்பிரதாய கருத்தியல்வாதங்கள் நவீன காலத்தில் கூட மாற்றம் பெறவில்லை என்பதையே இயக்குநர் மேலீ வாட்டமாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

இங்கு திரையிடப்பட்டுள்ள ஒரு சில திரைப்படங்கள் பாலியலின் ஊடாக பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள கலாசார ஏகநிலை என்பதோடு ஓரியல் நிலையை தகர்த்தெறிவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

துருக்கி நாட்டின் திரைப்படமான Borrowed Wife (கடனாகப் பெற்ற மனைவி) எனும் திரைப்படம், இளைஞர்களை திருமணத்துக்காகத் தயார் செய்வதற்கு முன்பதாக அவர்களுக்கு தற்காலிக மனைவிமாரைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு விடயம் பற்றிப் பேசுகின்றது.

இப்படியானதொரு வழக்கம் 1930களின் மத்திய காலம் வரை துருக்கியில் இருந்து வந்துள்ளது.


பலத்த இஸ்லாமிய சட்டதிட்டங்களின் மத்தியில் கூட சமூக ரீதியில் சுதந்திரமாகப் பாலியல் கல்வியைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு முறைமை துருக்கியில் ஒரு காலத்தில் இருந்துள்ளது என்ற விடயம் எனது மனதைக் கவர்ந்த விடயமாகும் என்கிறார் இத் திரைப்படத்தின் இயக்குநர் அதிப் லிமாஸ்.

இந்நிலையில் இன்னும் சில இயக்குநர்கள் தங்களது திரைப்படங்களில் பாலியலை அரசியல் மயப்படுத்தியும் உள்ளனர்.

அல்ஜீரிய திரைப்படமான 'Viva Algeria' என்ற திரைப்படம் மூன்று விபசாரிகள் குறித்துப் பேசுகின்றது. பாலியல் எனும் தலைப்பின் ஊடாக அரசியலின் பால் செல்லவும், சமூகத்தினுள் இரகசியமாக நுழைந்து கொண்டிருக்கும் அடிப்படைவாதம் குறித்து தெளிவுபடுத்தவும் இத்திரைப்படத்தை இயக்குநர் நதீர் மோக்ஷே ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

இந்தியத் திரைப்பட இயக்குநரான சந்தோஷ் சிவன் தனது Nawarsha (ஒன்பது வருடங்கள்) திரைப்படத்தின் ஊடாக அலிகளைப் பற்றிப் பேசுகின்றார்.

இதே நேரம் ஹொங்கொங் திரைப்படத்துறையின்



பிரபல இயக்குநரான வொன் கவாயின் '2046' திரைப் படமானது சிதைந்த நினைவுகள், தனிமை, பிதற்றல், அன்பைப் பெறுவதற்கான ஆசை மற்றும் அதனைப் பெற இயலாமை, பாலியல் என்பவற்றைப் பின்னணியாகக் கொண்டிருக்கின்றது.

இத்திரைப்படத்தின் முக்கிய பாத்திரம், ஒருவரின் தொடர்பில் இருந்து இன்னொருவரின் தொடர்பைப் பெறல் என அடிக்கடி மாறி அன்பைத் தேடுகின்றது.

-பாரூக்

# உரிமை மடல்... 25

மலை தடை கடந்து
புயலிடை எழுந்து
உங்களுக்காக
ஓர் உரிமை மடல்!

உண்மை எதுவென உரத்த குரலெடுத்து
உன்னத வழிகாட்டி எழுதும்
உரிமை மடல்!

இது
செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்
தேவானந்தா அவர்கள்
இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்
தொடர் மடல்!...



**அன்பான எம் தேசத்து மக்களே!.... உலகெங்கும் பரந்து வாழும் எம் தாயக தேசத்து உறவுகளே! என் உயிரினும் மேலான பாசமிக்க தோழர்களே!**

**உங்களுக்கு வணக்கம்!**

தேர்தல் கோசங்கள் தெருவெங்கும் வானுயர ஒலிக்கின்ற ஒரு சூழ்நிலையில்.....

சமாதானத்தை நாங்களே உருவாக்குவோம் என்ற வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்ற இன்றைய நாட்களில்....

யாருக்கு வாக்களிப்பது என்று மக்களாகிய நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில்......

உங்களோடு இன்னொரு உரிமை மடல் மூலம் மறுபடியும் நான் மனம் திறந்து பேச விரும்புகிறேன்!

திசை வழி தெரியாத இருண்ட காட்டினுள் எது வழியெனத் தெரியாது தடுமாறி நின்றிருந்த எமது தாயக தேசத்தின் மொத்தச் சனத்தையும் வழிகாட்டியாக நின்று வெளிச்சத்தை நோக்கி அழைத்துச் செல்லவே ஈ.பி.டி.பி. விரும்புகிறது.

உரிமை கேட்டு எழுந்த எம் மக்களாகிய உங்களது இலட்சியக் கனவுகளை உன்னத இலக்கு நோக்கி நகர்த்திச் செல்லவே ஈ.பி.டி.பி. விரும்புகிறது.

தேர்தலுக்காக அல்ல, தேசத்திற்காக தியாகங்களை ஏற்கவே இன்று ஈ.பி.டி.பி. திடமுடன் எழுந்து நிற்கிறது!

எமது தாயக தேசத்தின் விடிவிற்காக...... எமது மக்கள், தங்களை தாங்களே ஆளுகின்ற சுயாட்சி உரிமைக்காக..... எமது இறுதி இலக்கை அடையும் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைக்காக..... ஈ.பி.டி.பி. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்த விரும்பி இன்று உறுதியுடன் எழுந்து நிற்கிறது.

நாற்றமெடுக்கும் சுயலாப அரசியல் சாக்கடையில் புதைந்துபோய்..... நகர முடியாமல் இருக்கும் அரசியல் தீர்வு நோக்கிய வண்டியை முன்நோக்கி நகர்த்திட.... நான் கடந்த வாரம் மூன்று கட்டத் திட்டமொன்றை மக்களாகிய உங்களிடம் முன்மொழிந்திருந்தேன்!

இத்திட்டம் குறித்து மக்களாகிய நீங்கள் காட்டிவரும் ஆர்வத்தை எண்ணி நான் மனம் மகிழ்கின்றேன்! எமது மூன்று கட்டத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்து குவியும் கடிதங்களைக் கண்டு நான் மனம் நிறைகின்றேன்!

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அரசியல் தீர்வு நோக்கிய எமது திட்டம் குறித்துப் பலரும் பாராட்டியிருந்தீர்கள்! ஆதரவு தருவதாக வாக்குறுதி தந்திருந்தீர்கள்!

எமது தாயக தேசத்தின் விடுதலைக்கும் அதை அடைவதற்கான எமது கட்சியின் மூன்று கட்ட நகர்விற்கும் மக்களாகிய நீங்கள் வழங்கியிருக்கும் மட்டற்ற ஆதரவு என்பது எமக்கு இன்னமும் உறுதியைத் தந்துள்ளது. உத்வேகத்தைத் தந்துள்ளது! எமது தளராத நம்பிக்கைக்கு உங்கள் சம்மதங்கள் மேலும் உரமூட்டியுள்ளன.

எமது மூன்று கட்ட நகர்வு குறித்து எமது அயலுலக நட்பு நாடாகிய இந்தியாவுடன் நாம் பேசி வருகிறோம்! சர்வதேச நாடுகளின் ராஜதந்திரிகளுடன் நாம் பேசி வருகிறோம்! அவர்களிடம் எழுத்து மூலம் எமது திட்டத்தை சமர்ப்பித்திருக்கின்றோம்!

எமது திட்டத்திற்கு அனைத்துலக ராஜதந்திரிகளிடமிருந்தும் வரவேற்புக் கிடைத்திருக்கிறது. அவர்களது அங்கீகாரம் கிடைத்து வருகிறது.

மக்களாகிய உங்களது அங்கீகாரத்துடனும் சர்வதேச நாட்டுப் பிரதிநிதிகளின் அனுசரணையோடும் எமது திட்டத்தை மெல்லென நகர்த்தி, எமது தாயக தேசத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வரலாற்றுக் கடமையை இன்று ஈ.பி.டி.பி.யினராகிய நாம் முன்னெடுத்துச்செல்ல உறுதி பூண்டு நிற்கின்றோம்.

ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம், சர்வதேச அங்கீகாரம் பெற்றிருக்கும் எமது மூன்று கட்ட நகர்வினை எழுத்து மூலம் நாம் சமர்ப்பித்திருக்கின்றோம்!

ஒரு ஜனநாயக நாட்டில் பலதும் பத்தும் என்று பல்வேறுபட்ட கருத்துக்கள் பரந்திருக்கும்! அவைகளில் சரியெது, பிழையெது என்பது குறித்து ஈ.பி.டி.பி. தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறது.

தேர்தல் காலங்களில் பொதுவாகத் தேர்தல் கூட்டுக்கள் ஏற்படுத்தப்படுவது வழமையான நிகழ்வுகள்தான்! இத்தேர்தல் கூட்டுக்கள் குறித்து ஈ.பி.டி.பி.யினராகிய நாம் மிகவும் தெளிவாக இருக்கின்றோம்!

அதே நேரத்தில் எமது மக்களுக்கான இறுதித் தீர்வான 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்ற எமது அரசியல் இலக்கு குறித்தும் நாம் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றோம்!

இதில் எந்த விதமான விட்டுக்கொடுப்புகளுக்கும் எமது கட்சி ஒருபோதும் இடமளிக்காது என்பதை நான் உறுதியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்!

வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டு யாரும் தேர்தலில் போட்டியிட முடியும்! அதிகாரத்தைக் கையிலெடுத்து ஆட்சிக்கு வந்த பின்பு அவர்கள், எரிகின்ற எம் தேசத்தின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருவதென்பது ஒடுக்கப்படுகின்ற எமது தேசிய இனத்தை வழிகாட்டிச்செல்ல முற்படும் எங்களது கைகளில் மட்டும்தான் தங்கியிருக்கிறது.

கடந்தகால வரலாற்றின் கசப்பான அனுபவங்கள் இன்றும் எமக்கு முன்னால் பயனுள்ள படிப்பினைகளாக விரிந்து கிடக்கின்றன.

ஒரு ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு இருக்கக்கூடிய சாதகமான அம்சங்களில் முதன்மையானது பேரம் பேசும் வாய்ப்பு என்பதேயாகும்!

அந்தப் பேரம் பேசும் வாய்ப்பினை நாம் சரிவரப் பயன்படுத்தினால் இந்த மண்ணில் சமாதானமும் சம உரிமையும் உருவாகும் என்பதில் தளராத நம்பிக்கை எமக்கு உண்டு!

தமிழ் பேசும் மக்களாகிய எங்களது தரப்பிலிருந்து கடந்த காலங்களில் சரியான சமிக்ஞைகள் காட்டப்படவில்லை! ஈ.பி..டி.பி.யினராகிய நாம் இது குறித்து கடந்த காலங்களிலும் சரி, இன்றைய சமகாலத்திலும் சரி, தெளிவான ஒரு நிலைப்பாட்டினையே எடுத்து வருகின்றோம்!

ஆகவேதான் இந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் நாம் மக்களாகிய உங்களோடு சில அனுபவங்களை மனம் திறந்து பேச வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

புலிகள் மக்களாகிய உங்களை எந்தத் திசை நோக்கி அழைத்துச் செல்கின்றார்கள் என்பதை நீங்கள் உங்களது அனுபவங்களிலிருந்து உணர்ந்திருப்பீர்கள்!

'இல்லாத ஊருக்கு இதுதான் வழி' என்று கூறி, புலிகள் உங்களை அழிவை நோக்கியே அழைத்துச் செல்ல முற்படுகிறார்கள்!

ஆனால் எமது கட்சியோ மக்களாகிய உங்களை ஒரு இலக்கு நோக்கி சரியான திசைவழியில் அழைத்துச் செல்லவே விரும்புகிறது.

கடந்த காலங்களில் புலிகள் இந்த நாட்டின் ஜனாதிபதிகளோடு கைகுலுக்கியிருக்கிறார்கள்!

பிரதமர்களோடு கைகுலுக்கியிருக்கிறார்கள்!

ஈ.பி.டி.பி.யினராகிய நாமும் அரச தலைவர்களோடு கைகுலுக்கியிருக்கின்றோம்! ஆனாலும் புலிகள் எதைச் சாதித்தார்கள்?.... ஈ.பி.டி.பி. யினராகிய நாம் எதைச் சாதித்திருக்கின்றோம்? என்பதை மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று அதை எமது மக்களாகிய உங்களது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் இறுதி இலக்கு நோக்கி புலிகளால் நகர்த்திச் சென்றிருக்க முடியும்!

ஆனால், புலிகள் இந்த விடயத்தில் மாபெரும் வரலாற்றுத் துரோகத்தை மக்களாகிய உங்களுக்கு இழைத்திருக்கிறார்கள். இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் புலிகள் முதன் முதலாக ஜனாதிபதி பிரேமதாசா அவர்களோடு கைகுலுக்கி பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டார்கள்!

அவர்கள் பிரேமதாசா அரசிடம் என்ன கோரிக்கையினை முன்வைத்திருந்தார்கள் என்பதை மக்களாகிய நீங்கள் சிந்திக்க வேண்டும்! மக்களாகிய உங்களது கோரிக்கைகள் குறித்து ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேசினார்களா?... இல்லை என்றுதான் கூறவேண்டும்!

எமது தாயக தேசத்தின் விடிவு குறித்து எதையும் பேசாதிருந்த புலிகள், மக்களாகிய உங்களது சமாதானக் கனவுகளை உடைத்து அதற்கு எதிராகவே தமது கோரிக்கையினை பிரேமதாசா அரசிடம் முன்வைத்திருந்தனர்.

தமிழ் பேசும் மக்களுக்கென உருவாக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையினை கலைத்துவிடுமாறு கோரிக்கை விடுத்தனர் புலிகள்!

புலிகளின் கோரிக்கையினை ஏற்று அன்றைய பிரேமதாசா அரசு, மாகாண சபையைக் கலைத்து தமிழ் பேசும் மக்களாகிய உங்களது அரசியல் அபிலாசைகளை உடைத்துச் சிதைத்திருந்தது.

இது யார் குற்றம்?... மாகாண சபைகளைக் கலைக்கச் சொல்லிக் கோரிக்கை விடுத்த புலிகளின் குற்றமா?.... அல்லது ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி பிரேமதாசா அரசின் குற்றமா?....

அதன் பின் 90களின் ஆரம்பத்தில் ஒரு ஜனாதிபதி தேர்தல் நடந்தது! அதில் அன்றைய எமது சக்திக்கு உட்பட்ட வகையில் மக்களாகிய உங்களை ஜனாதிபதி சந்திரிகாவிற்கு வாக்களிக்குமாறு நாம் அன்று கேட்டிருந்தோம்! சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஆட்சியதிகாரத்தைக் கையிலெடுத்திருந்தார்.

நாம் மக்களாகிய உங்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியின்படி..... ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் உங்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியின் படி... அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் ஒரு தீர்வுத் திட்டத்தை அன்று அவர் கொண்டு வந்திருந்தார்.

புலிகளும், புலிகளின் யுத்த எண்ணங்களுக்குத் துணைபோயிருந்த சில தமிழ்க் கட்சிப் பிரமுகர்களும் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து அதிக அக்கறை காட்டியிருக்கவில்லை. ஈ.பி.டி.பி. மட்டும் இத்தீர்வுத் திட்டம் குறித்து சில திருத்தங்களோடு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்திருந்தது.

அந்த அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகள் பாராளுமன்ற விவாதத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது, அதை எதிர்த்து பிரதான எதிர்க் கட்சியினர் வழமைபோல பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர். அப்போது அந்த ஊர்வலத்தில் இன்றைய தமிழ் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு எமது மக்களாகிய உங்களுக்கான தீர்வு யோசனையை எதிர்த்திருந்தனர்.

புலிகளின் யுத்த எண்ணங்களினாலும், சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்தத் தவறிய தமிழ் தலைமைகளினாலும் ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் சமாதான முயற்சி முடங்கிப்போயிருந்தது!

இது யார் குற்றம்?.... ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட தீர்வு யோசனையை எதிர்த்திருந்த புலிகளின் குற்றமா?..... அல்லது அந்த முயற்சியை இடைநிறுத்திய ஜனாதிபதி சந்திரிகாவின் குற்றமா?....

**எம் இனிய மக்களே!**

புண்ணுக்கு வலியா?.... அல்லது மருந்துக்கு வலியா?.... யாருக்கு வலி? என்று மக்களாகிய நீங்கள் சிந்திக்க வேண்டும்! எமது மக்களுக்கான தீர்வு குறித்து நாம்தான் அக்கறை காட்டியிருக்க வேண்டும்! தமிழர் தரப்பாகிய நாங்கள், ஒரு அரசியல் தீர்வு குறித்து உறுதியான நிலைப்பாட்டில் இருந்திருந்தால் அன்று ஜனாதிபதி அவர்கள் அந்தத் தீர்வு யோசனையினை இடைநிறுத்தியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காது!

நாம் சரியாக இருந்து கொண்டு செயற்படும் பட்சத்தில் மட்டும்தான் அரச தரப்பினரின் தவறு குறித்து நாமும் விமர்சிக்க முடியும்!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னரான வரலாற்றில், அரசியல் தீர்வு குறித்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக தென்னிலங்கை இனவாத சக்திகளை விடவும் புலிகளே முன்னின்று இன்று வரை தடையாகச் செயற்பட்டு வருகிறார்கள்!

ஆகவேதான் அரசியல் தீர்வு குறித்த எமது இறுதி இலக்கை அடையும் எமது பயணத்தில் எமது மக்களாகிய உங்களது உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் நாம் கவனம் எடுத்திருந்தோம்!

அதற்காக அரசுக்கு ஆதரவளித்ததன் மூலம் ஜனாதிபதியின் உதவிகளைப் பெற்று எம்மால் முடிந்த பணியினை மக்களாகிய உங்களுக்குச் செய்திருந்தோம்!

இறுதியாக, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களோடு பேச்சு நடத்தினார்கள் புலிகள். டோக்கியோ மாநாடு வரை ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்திருந்தும் புலிகளால் எந்த முடிவையும் எட்ட முடியாமல் போய்விட்டது.

அதற்குக் காரணம் புலிகளின் தவறான அணுகுமுறையும்....யுத்த எண்ணங்களும்.... நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகளும் மட்டும்தான் என்பதை நீங்கள் உணர வேண்டும்!

இறுதியாக, ஜனாதிபதி சந்திரிகா அவர்களிடம் பொதுக் கட்டமைப்பு கேட்டார்கள் புலிகள்!

ஜனாதிபதி அவர்கள் அதை வழங்கியிருந்தபோது, தமது பயணத்திற்கான பாதுகாப்பு என்ற சுயலாப நிபந்தனையை விதித்து, பொதுக் கட்டமைப்பையும் கைவிட்டனர் புலிகள்!

பொதுக் கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி வழக்குத் தாக்கல் செய்திருந்ததாகப் புலிகள் கூறி வருகிறார்கள். சட்டம் படித்த மேதைகளைத் தமது கூட்டமைப்பில் கொண்டிருக்கும் புலிகள், பொதுக் கட்டமைப்பு தேவையான ஒன்றுதான் எனக் கோரி ஏன் வழக்குத் தாக்கல் செய்திருக்கக் கூடாது? என மக்களாகிய உங்களிடம் நான் கேட்கின்றேன்!

அவர்கள் அந்த வழிமுறையைக் கையாள்வதற்கு ஒரு போதும் நினைக்க மாட்டார்கள்! ஏனென்றால், மக்களது பிரச்சினைகள் தீர்ந்துவிடக் கூடாது என்பதுதான் புலிகளின் நோக்கம்! மக்களாகிய நீங்கள் துன்பங்களையும் துயரங்களையும் சுமக்க வேண்டும்! அதனூடாகக் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுதான் புலிகளின் நோக்கம்!

ஆகவேதான் புலிகள் கடந்த காலங்களில் தேடி வந்த சந்தர்ப்பங்களையெல்லாம் தங்களது சுயலாப அரசியலுக்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டார்கள்!

இதுவரை கால வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்தை புலிகள் மக்களாகிய உங்களது நலன்களுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று நான் உங்களிடம் கேட்கின்றேன்?...

அன்பான மக்களே! தேர்தல் என்பது ஒரு ஜனநாயக நடைமுறை! இந்த ஜனநாயக தேர்தல் நடைமுறையை புலிகள் தங்களது சுயலாப அரசியலுக்காகவே இதுவரை பயன்படுத்தி வருகிறார்கள்!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலையும் புலிகள் மக்களின் நலன்களுக்கு மாறாக, தங்களது நலன்களுக்காகவே பயன்படுத்தத் திட்டமிட்டுக் காத்திருக்கிறார்கள்!

ஈ.பி.டி.பி.யினராகிய நாம் இத்தேர்தலை தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு பேரம் பேசும் வாய்ப்பாகவே பயன்படுத்த எண்ணி செயற்பட்டு வருகின்றோம்!

இதில் யாருடைய வழிமுறையை நீங்கள் ஏற்று செயற்படப் போகின்றீர்கள்! அழிவை நோக்கிய புலிகளின் வழிமுறையை ஏற்கப் போகின்றீர்களா?.... அல்லது ஆக்கத்தை நோக்கிய ஈ.பி.டி.பி.யின் வழிமுறையை ஏற்கப் போகின்றீர்களா?....

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று புலிகள் கூறுகிறார்களோ அங்கே ஒரு பொறிக் கிடங்கு காத்திருக்கின்றது என்று அர்த்தம்! அங்கே புலிகளின் சுயலாப அரசியல் மறைந்திருக்கிறது என்று அர்த்தம்!

இது புலிகள் மீது நான் கொண்ட எதிர்ப்புணர்விலிருந்து புறப்பட்டு வரும் கருத்துக்களல்ல. இதுவரை கால எனது அனுபவங்களின் வெளிப்பாடுதான் இந்தக் கருத்துக்கள்!

சரியானது எதுவோ - மக்களின் விடிவிற்கு ஏற்புடையது எதுவோ - அதைப் புலிகள் செய்தாலும் ஈ.பி.டி.பி.யினராகிய நாம் ஏற்பதற்குத் தயாராக இருக்கின்றோம்!

மக்களாகிய உங்களுக்குத் தெரியும் புலிகள் பொதுக் கட்டமைப்பைக் கோரிய போது நாம் அதற்கு ஆதரவளித்திருந்தோம்! ஏனென்றால் இது புலிகளின் பிரச்சினை என்று நாம் பார்க்கவில்லை. இங்கேதான் துயரப்படுகின்ற மக்களின் பிரச்சினையும் அடங்கியிருக்கிறது என்றுதான் நாம் கருதியிருந்தோம்.

ஆனால் புலிகள், தங்களது பிரச்சினை வேறு; தமிழ் மக்களது பிரச்சினை வேறு என்பதைப் பொதுக் கட்டமைப்புக் கோரிக்கையினைக் கைவிட்டதன் மூலம் மறுபடியும் ஒரு முறை நிரூபித்திருக்கிறார்கள்.

புலிகள் ஏவி விடும் மாய மானைப் பின்தொடர்ந்து மக்களாகிய நீங்கள் கடந்த காலங்களில் ஓடியபோது சூழ்ச்சிகளே உங்களைச் சூழ்ந்து கொண்டன.

**அதனால் அம்புகள் உங்களைத் தைத்தன!.... தைத்த அம்பின் ரணங்களில் இருந்து குருதி வடிந்தது! வடிந்த குருதியின் மீது ஆயிரமாயிரம் மனித உயிர்களே மடிந்து சரிந்தன! தொடர்ந்தும் புலிகள் ஏவி விடும் மாய மானைப் பின்தொடர்ந்து மக்களாகிய உங்களில் கணிசமானவர்கள் ஓடுவதில்லை என்று தீர்மானம் எடுத்திருப்பதாக நான் உணர்கின்றேன்!**

**விடுதலை என்ற பெயரில் மக்களை மௌனமாக்கி, உறைய வைத்து, உயிர் குடிக்கும் புலிகளின் செயல் கண்டு நீங்கள் விழிப்புற்ற மக்களாக மாறி வருவது கண்டு நான் மனம் திறந்து பாராட்டுகிறேன்!**

**அச்சத்தின் காரணமாக.... தொட்டதை விட்டுவிட முடியாத தவிப்பின் காரணமாக... இன்னமும் புலிகளின் அழிவுப் பாதையை நோக்கி நடக்கும் எஞ்சிய மக்களிடம் நான் பகிரங்கமாகக் கூறுவது இதுதான்!**

**தவறான அரசியல் வழிமுறையை நீங்கள் பின் தொடர்ந்து செல்லுகின்ற ஒவ்வொரு கணமும் புலிகள் மேலும் தவறான அரசியலை முன்னெடுத்துச் செல்லவே வழிவகுக்கும்! புலிகளை விட்டு நீங்கள் ஜனநாயகத்தின் பக்கம்.... நியாயத்தின் பக்கம்.... தர்மத்தின் பக்கம்.... அணிதிரளும் போதுதான் புலிகளும் மக்களாகிய உங்களது பக்கம் திரும்பி, திருந்தி வருவார்கள்!**

ஆகவேதான் மக்களாகிய நீங்கள், உங்களது தீர்மானங்களை நீங்களே சுயமாக எடுத்து, ஆயுத பலத்திற்கும் அச்சுறுத்தலுக்கும் அடிபணியாது, உங்களது வாக்குப்பலத்தைப் பிரயோகிக்க வேண்டும் எனப் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நான் ஏற்கனவே கூறியதைப்போல் தேர்தல் கூட்டில் பலதும் பத்தும் இருக்கும்! இவைகள் குறித்து நாம் தெளிவுடன் இருக்க வேண்டும்!

தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினை என்பது பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கப்படவேண்டிய ஒன்று என்பதை எமது வரலாற்று அனுபவங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

இதற்குக் குறுக்கே எந்தச் சக்தி தடையாக இருந்தாலும் இதுதான் முடிந்த முடிவு என்பது நிச்சயமாகிவிட்டது.

சர்வதேச சமூகம், தமிழ் பேசும் மக்களாகிய எங்களின் பக்கம் உறுதுணையாக நின்று செயற்படக் காத்திருக்கும் இத்தருணத்தில், எமது தாயக தேசத்தின் சமஷ்டித் தீர்வு நோக்கிய பயணம் நிச்சயம் ஈடேறியே தீரும்!

இது குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தனது சாதகமான எண்ணங்களை எங்களோடு பகிர்ந்து வருகின்றார். எமது அயலுலக நட்பு நாடாகிய இந்தியாவும் சர்வதேச நாடுகளும் எமக்குப் பக்கபலமாக இருக்கும்போது..... மக்களாகிய உங்களது பலமும் சக்தியும் எங்கள் பக்கம் இருக்கும்போது... எமது கோரிக்கையினை நாம் விரைவாக வென்றெடுக்க முடியும் என நாம் திடமாக நம்புகிறோம்!

(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க...)





நண்றெம் பாட்டினெடு தாளம் – மிக
நன்றா வுளத்தழுந்தல் வேண்டும் – பல
பண்ணிற் கோடிவகை இன்பம் – நான்
பாடத் திறனடைதல் வேண்டும்.

– சுப்பிரமணிய பாரதியார்

# சிவப்பு நிற பை!

கேரள மாநிலத்தில் கொச்சுண்ணி என்ற அதிசயத் திருடன் இருந்தான். அவன் ஏழைகளை வஞ்சித்து பணம் பறிக்கும் செல்வந்தர்களைக் கொள்ளையடித்து வந்தான். ஆனால், இவ்வாறு திருடிய பணத்தைத் தனக்கென்று பயன்படுத் தாமல் அதைக் கொண்டு ஏழைகளுக்கு உதவி வந்தான். இதனால் ஏழைகள் அவனிடம் அன்பு கொண்டனர். ஆனால், பணக்காரர்கள் இவன் பெயரைக் கேட்டாலே நடுங்கினர்.

காயங்குளம் என்ற ஊரில் ஏழைகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒரு ஜமீன்தார் இருந்தார். தங்க நகை முதலிய ஆபரணங்களை அடமானமாகப் பெற்றுக் கொண்டு மிக அதிக வட்டிக்குப் பணம் கடன் கொடுப்பது அவர் வழக்கம். அசலைச் செலுத்த முடியாது தவிக்கையில், அவர்களது அடமானப் பொருட்களை ஜமீன்தார் தன்னுடையதாக்கிக் கொள்வார். இவ்வாறு சேர்த்த செல்வத்தினால் அவர் பெரிய மாளிகையே கட்டிவிட்டார்.

அந்த மாளிகையில் இரட்டைச் சுவர்களை அமைத்து தன் இருப்பிடத்தை உறுதியாகவும் இரகசிய அறைகள் அடங்கியதாகவும் ஏற்படுத்திக் கொண்டார். 'யாராவது இவ்வளவு பந்தோபஸ்து எதற்கு?' என்று கேட்டால் கொச்சுண்ணி திருட முயற்சித் தால் என்னிடமுள்ள அடமானப் பொருட்களை நான் எப்படி பத்திரமாகப் பாதுகாக்க முடியும்? ஆகவே தான் என் வீட்டை மர்மக் கோட்டை ஆக்கிவிட்டேன். இப்போது பத்து கொச் சுண்ணிகள் வந்தாலும் திருட முடியாது என்று பெருமையாகப் பேசினார்.

அவரது இந்த வாய் சவடால் கொச்சுண்ணியின் காதில் விழுந்தது. ஜமீன்தாருக்கு ஒரு பாடம் கற்பிக்க முடிவு செய்தான் கொச்சுண்ணி.



கிருஷ்ணன் நாயர் என்பவன் தனது நகைகளை ஒரு முறை ஜமீன்தாரிடம் அடகு வைத்து ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். இதை அறிந்த கொச்சுண்ணி ஒரு நாள் இரவு ஜமீன்தார் வீட்டுக்குச் சென்றான்.

ஜமீன்தார் உடலில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு, தன் வீட்டிலுள்ள சிறிய குளத்தில் குளிப்பதற்குத் தயாராக இருந்தார். இதுதான் சமயம் என்று வீட்டின் முன்புறம் மறைவாக நின்று கொண்டு, ஜமீன்தாரது மனைவியை அழைத்து, கிருஷ்ணன் நாயர் வந்திருக்கிறான்; அவனிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு அவன் அடகு வைத்திருந்த நகைகளைத் திருப்பிக்கொடு என்று ஜமீன்தாருடைய குரலில் பேசினான். தன் கணவர் தான் தோட்டத்தி லிருந்தபடியே பேசுகிறார் என்று நம்பின ஜமீன்தாரின் மனைவி, அடகு நகைகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். அங்கு நின்றிருந்த கொச்சுண்ணியின் கையில் நகையைக் கொடுத்துவிட்டு சிவப்பு நிறப்பையை பெற்றுக் கொண்டாள். கொச்சுண்ணியும் நகைகளுடன் சென்று விட்டான். இது குளத்தில் குளித்துக் கொண்டிருந்த ஜமீன்தாருக்குத் தெரியாது.

**பாப்பா முரசு சிறுகதை**

சில நாட்கள் சென்றபின் கிருஷ்ணன் நாயர் ஜமீன்தாரிடம் வந்து தான் வாங்கிய கடனை திருப்பிக் கொடுத்து அடகு வைத்த நகைகளைக் கேட்டான். பணத்தைப் பெற்றுக் கொண்டு உள்ளே நகைகளைத் தேடிய ஜமீன்தாருக்கு அவற்றைக் காணாததால் அதிர்ச்சி ஏற்பட்டது. உடனே தன் மனைவியைக் கூப்பிட்டு விசாரித்தார்.

உங்களுக்கு மறந்துவிட்டதா? நீங்கள் தானே சில நாட்களுக்கு முன் கிருஷ்ணன் நாயர் வந்திருந்த போது அவருடைய பணத்தைப் பெற்றுக் கொண்டு நகைகளைத் திருப்பிக் கொடுக்கச் சொன்னீர்கள் என்றாள்.

'அப்படியா, அந்தப் பணம் எங்கே?' என்று ஜமீன்தார் கேட்டார். அவளும் கொச்சுண்ணி தந்த சிவப்பு நிற பணப்பையைக் கொண்டு வந்தாள். அதைத் திறந்து பார்த்தால் உள்ளே பணமே இல்லை.

பெருத்த அதிர்ச்சியுற்ற ஜமீன்தார், கிருஷ்ணன் நாயரிடம் நிலைமையை விளக்கித் தன்னை மன்னிக்கும் படி கேட்டுக் கொண்டார். நகைகளுக்குப் பதிலாக அதற்குச் சமமான மதிப்புள்ள பணம் கொடுத்து அவனை அனுப்பினார்.

ஜமீன்தாரும், அவரது மனைவியும் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்ந்தனர். அன்று வந்த ஆள் எப்படி இருந்தான்? என்று கேட்டார்.

நான் உன்னிப்பாகக் கவனிக்கவில்லை. நீங்களே கொடுக்கச் சொன்னதால் தான் வந்திருப்பது கிருஷ்ணன் நாயர் என்று நினைத்தேன் என்றாள்.

'ஆஹா! இது கொச்சுண்ணியின் வேலை தான்!' என்ற எண்ணம் தோன்றவே ஜமீன்தாருக்கு அதிர்ச்சியுடன் பயமும் ஏற்பட்டது. 'தன்னுடைய குரலில் பேசி தன் மனைவியை ஏமாற்றிவிட்டானே... இன்னும் என்னவெல்லம் செய்வானோ' என்ற பயம் வந்தது.

இப்படி சோகக் கடலில் மூழ்கி இருந்த இருவரையும் நோக்கி சில மணி நேரங்களில் கொச்சுண்ணியே வந்தான் என்றால் அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்?

'ஏன் இப்படி இருவரும் கவலையாக இருக்கிறீர்கள்?' என்றான் கொச்சுண்ணி. ஜமீன்தாரால் பேசவே முடியவில்லை. அவர் மனைவி நடந்ததைச் சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்டு கடகடவென சிரித்த கொச்சுண்ணி ஒரு பையை நீட்டி, 'இதோ அந்த நகைகள். சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்... கிருஷ்ணன் நாயரைக் கூப்பிட்டு அவனுக்கு நகைகளைக் கொடுத்த விட்டு எங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். என்னமோ, பத்து கொச்சுண்ணிகள் வந்தாலும் உங்கள் வீட்டில் திருட முடியாது என்று சவடால் அடித்தீர்களாமே... அதற்காகத் தான் இப்படி செய்தேன்.' என்று சொன்னான் கொச்சுண்ணி.

இந்நிகழ்ச்சிக்குப் பின் ஜமீன்தார் நல்லவராக மாறிவிட்டார் என்று கேள்விப்பட்டதால் அவருக்கு எந்த இடைஞ்சலும் தரவில்லை கொச்சுண்ணி!

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.11.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 619**

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 617

**பரிசுக்குரியவர்:**
**கு.ரஜிந்த்,**
**தரம் 3A, 20/10 சி.வி.வீதி, திருகோணமலை**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| யோகராசா கலாரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | எஸ். அபிலாஷினி, யூ.டி. 63 ஸ்ரீ மஹிந்த தர்ம மாவத்தை, தெமட்டகொட, கொழும்பு - 09. |
| ஜே.பி. சுதர்சிலா, 32/2, கொனவெல வீதி, ரஜாவல. | நஸ்ஹா நீலாப்தீன், 77/1, குளியாப்பிட்டிய வீதி, தம்பதெனியா |
| எஸ்.கஸ்தூரி, 22 மின் கம்பம், மரக்காரபளை வீதி, கணேசபுரம், வவுனியா. | ஜெ.பாத்திமா, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. |
| எம்.எம்.எப். முன்பிகா, தரம் 8, முஸ்லிம் மத்திய கல்லூரி, பறகஹதெனிய. | மு.நி. பௌஸாத், 376 B, மக்காமடி வீதி, மருதமுனை 03, கல்முனை. |
| பி. சஹானா வெலண்டைன், தரம் 3, காவத்தை தமிழ் மகா வித்தியாலயம், காவத்தை. | பி.எம்.எப். சாபிரா, 75, கண்டி வீதி, மல்லவபிட்டிய, குருநாகல். |

# ஆத்திசூடி


## தக்கோன் எனத் திரி

நீ உன் சொல்லாலும் செயலாலும் உன்னை ஒரு உதாரண புருடனாக மற்றவர்கள் கணிக்கும்படியாக நடந்து கொள்!

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

# வேளைக்கெல்லாம் சோறுண்டு



யானைக் கூட்டம்
துதிக்கையை
துக்கிக்
குளிக்கும்
குளத்தைப்பார்
வானை
எட்டும்
காட்டின்மேல்
வானக் கப்பல்
போகுதுபார்.

கூளா முறிப்பைப் பாருங்கள்
குரங்குக் கூட்டம் தாவுது
வேளாண்மைதான் எங்கள்
– தொழில்
வேளைக்கெல்லாம்
சோறுண்டு.

காலை காட்டுப் பாதையிலே
கூடிப் பள்ளி வருவோமே
மாலை வெய்யில் ஆறிடவே
மகிழ்ந்து வீடு சேர்வோமே.

# அதிசய உலகம்

## நூற்றாண்டு நடப்புகள்

### 1903

* ஆகாய விமானத்தை ரைட் சகோதரர்கள் வெள்ளோட்டம் விட்டனர்.

* மேரி கியூரிக்கும் அவரது கணவருக்கும் நோபல் பரிசு கிடைத்தது. ஆராய்ச்சிக்காக இரவு பகல் உழைத்ததால் பரிசு கொடுக்கப்பட்ட அன்று அதை நேரில் போய் வாங்கமுடியாமல் போனது.

* கடுமையான சட்ட திட்டங்களை அமுல்படுத்தியதால் சேர்பியாவின் அரசனும் அரசியும் கொல்லப்பட்டனர்.

* பிரசித்தி பெற்ற முதல் திரைப்படம் 'Great Train Robbery'.

### 1904

* மூன்றாவது ஒலிம்பிக் விளையாட்டு.

* பார்க்க, பேச, கேட்க முடியாத ஹெலன் கெல்லர் பட்டப்படிப்பு முடித்தது.

* ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே போர்.

* ரஷ்ய நாவலாசிரியர் அந்தான் செகாவ் மரணம்.


# உங்கள் பொது அறிவு எப்படி?

## தெரிந்ததும் தெரியாதவையும்

| | |
|---|---|
| 1. ஜப்பானியத் தீவுகளில் பெரியது எது? | ஹொன்ஷீ |
| 2. கடல் மட்டத்திற்கு கீழேயுள்ள நாடு? | நெதர்லாந்து |
| 3. சூரியன் உதிக்கும்நாடு எது? | ஜப்பான். |
| 4. நடுஇரவில் சூரியன் உதிக்கும் நாடு எது? | நோர்வே |
| 5. உலகின் பெரிய பாலைவனம் எது? | சகாராப் பாலைவனம். |
| 6. இந்து சமுத்திரத்தின் பெரிய தீவு எது? | மடகஸ்கார். |
| 7. உலகின் பெரிய தீவு எது? (அவுஸ்திரேலியாவைத் தவிர்த்து) | கிறீன்லாந்து |
| 8. உலகத்தில் கூரை எனப்படுவது எது? | தீபெத் பீடபூமி. |
| 9. உலகில் மிகப்பெரிய சமுத்திரம் எது? | பசுபிக் சமுத்திரம் 963, 986,000 சதுர மைல். |
| 10. ஆபிரிக்காவில் உயர்ந்த மலை எது? | கிளிமஞ்சாரா மலை. |


# தகவல் பெட்டி

## நகத்தில் நங்கை



நவீன யுகத்தில் நாகரீக மோகம் கொண்ட நங்கையர் தமது நகத்தை அலங்கரித்துக் கொள்வதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். அதற்கான பிரத்தியேகப் பயிற்சிகளையும் எடுத்துக் கொண்ட அழகுக் கலை நிபுணர்கள் பல்வேறு டிசைன் களையும் கையில் வைத்துக்கொண்டு காரியத்தைக் கச்சிதமாக முடிப்பதற்கு எப்போதும் தயாரான நிலையிலேயே இருக்கிறார்கள். இந்த மோகம் பெண் ஒருவர் தனது புகைப்படத்தை தனது விரல் நகத்தில் பிரதிசெய்து கொள்ளும் அளவுக்கு முன்னேறியுள்ளது. நீங்கள் காண்பது தனது புகைப்படத்தைத் தனது நகத்தில் பிரதி செய்து கொண்டுள்ள சிங்கப்பூர் பெண் ஒருவரை. அற்பனுக்கு பவிசு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பானாம்.

## பலசாலிகள்



சீனாவில் சேன்ங் டு நகரில் வருடாந்தம் உலகிலேயே பலசாலியான ஆண் மகனைத் தேர்ந்தெடுக்கும் போட்டி நடைபெறுகிறது. இப்போட்டியில் கலந்துகொள்ளும் ஆஜானுபாகுவான ஆண்மகன் செய்ய வேண்டியது, கப்பல் கட்டப் பயன்படுத்தும் சங்கிலியை ஒரு குறிப்பிட்ட தூரம் வரை முடிந்தளவு வேகமாக இழுத்துச் செல்வதாகும். தனது பலத்தை நிருபிப்பதற்காகவே இவர்கள் இவ்வாறு பலப்பரீட்சை மேற்கொள்கிறார்கள்.


## 'பச்சை' பன்றி



ஃபஷனைப் பற்றி பன்றிக்கு என்ன தெரியப் போகிறது என்று கேட்டால் நியாயமாகத் தான் இருக்கும். ஆனால் நாகரீக ஃபஷன் உலகில் பன்றிக்கும் பச்சை குத்தி ஃபஷனாக்கும் பண்டிதர்கள் இருக்கிறார்கள். இது சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற நூதன கலைக் கண்காட்சியின் போது பச்சையுடன் உலா வந்த இரண்டு பன்றிகள். பன்றிகளுக்குப் பச்சை குத்தும் சிரமமான பணியை சிரமேற்கொண்டு செய்தவர் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த கலைஞர் ஒருவர். சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும் என்ற பழமொழியும் காலப்போக்கில் பொய்யாகும் போல.

## இராட்சத பலூன்

பார்த்த பார்வைக்கு தேவலோகத்தில் மிதந்து வரும் தேவலோக அரண்மனை போல் காட்சி தந்தாலும், இது உண்மையிலேயே ஒரு அழகான இராட்சத பலூன் ஆகும். சூடான வாயு மூலம் மேலே மிதந்து சென்ற இப்பலூனில் பலர் பயணம் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இக் கண்கொள்ளாக் காட்சியைக் காணக் கிடைத்தது, பிரான்ஸ் டோடோக்க்ஞாவில் நடைபெற்ற ரோகாமாடோர் பலூன் உற்சவத்தின் போதே. 'அழகான ராட்சசியே மேல் வானில் மிதக்கிறியோ' என்று பாடினாலும் பிழையில்லை தானே?



## வாழும் வரை போராடு!

வாழ்வதற்கு வீடொன்று இல்லாவிட்டால் வாளிக்குள் தலையைச் செலுத்தினால் சரியா? சரியென்று சொல்லும் ஸ்கொட்லாந்து ஊர்க்காரரான எடின்பர்க், நடைபாதையில் தனது தலையை வாளிக்குள் செலுத்தி தலை கீழாக நாளாந்தம் நிற்கிறார். உண்ண உணவும் உறைய இடமும் இல்லாத இவர், இவ்வாறு தலை கீழாக நின்று தனது ஜீவியத்தை நடத்த பணம் திரட்டிக் கொள்கிறார். 'நம்மிலும் கேடு நாட்டிலே கோடி' என்று நம்மூர் பிச்சைக்காரர்கள் முணுமுணுப்பது காதில் விழுகிறதா?





நந்தனா



நந்தா - ஹதீப்சிங்
அகரம்

'இதயத்திருடன்' படத்தில் இயக்குநர் சரணிடம் அஸிஸ்டெண்டாகச் சேர்ந்த ஆனந்தபாபு, அந்தப் படத்தின் படப்பிடிப்பு பாதிகூட முடிவடையாத நிலையில் அங்கிருந்து கழன்றுகொண்டுள்ளார். இந்தக் கழன்றுகொள்ளலுக்குக் காரணம் உரிய மரியாதை தரப்படவில்லை என்கிறது ஆனந்தபாபு தரப்பு. அப்படி என்ன மரியாதை குறைச்சலாக நடத்தினீர்கள் பாபுவை? என்று சரண் தரப்பில் கேட்டால், ஒரு நாள் கிளாப் அஸிஸ்டெண்ட் வரவில்லை. அதனால் கிளாப் அடிக்கவிட்டோம். அது தவறா? என்று பதில் வருகிறது. 150 படங்களுக்கு மேல் ஹீரோவாக நடித்திருக்கும் என்னை அஸோஸியேட் டைரக்டர் ஆக்காமல் அஸிஸ்டெண்டாக வைத்துக்கொண்டதே தப்பு. அதிலும் கிளாப் அஸிஸ்டெண்ட் ஆக்கினால் எப்படி? எனப் புலம்புகிறார் ஆனந்தபாபு. யார் பக்கம் நியாயமோ இறைவனுக்கே வெளிச்சம்.

---

'அந்நியன்' படத்தில் 'அந்நியன்' விக்ரம் முதன்முதலாக எருமை மாடுகளை அவிழ்த்துவிட்டு கொலை செய்யும் வில்லன் நடிகர் ஹனிபாவின் கார் நம்பர் படத்தில் 'டி.என்.எக்ஸ்.100.' இதே கார் நம்பர் நிஜத்தில் தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னத்தின் கார் நம்பராம். இந்தக் கார் எண்ணை ஷங்கர் பயன்படுத்தக் காரணம், ஏ.எம்.ரத்னத்தின் மீது ஷங்கருக்கு உள்ள கோபம்தான் என்கிறது கோடம்பாக்கம். அப்படி என்ன கோபம்? முன்பு ஏ.எம்.ரத்னத்தின் தயாரிப்பில் 'பாய்ஸ்' படமெடுத்தார் ஷங்கர். அந்தப் படம் எதிர்பாராத விதமாக நஷ்டத்தைத் தழுவ, அதை ஈடுகட்டும் விதமாக சூப்பர் ஸ்டார் ரஜினி - ஷங்கர் - ஏ.எம்.ரத்னம் காம்பினேஷனில் (சந்திரமுகிக்கு முன்) ஒரு படத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கினார் ரத்னம். இதற்கு ஓ.கே. சொன்ன ரஜினியும், மூவரும் சேர்ந்தே அந்தப் படத்தைத் தயாரிக்கலாம் பெரிய பட்ஜெட்டில் என்றுகூற, அதன்பிறகு ரஜினியை தனியாகத் சந்தித்த ஷங்கர், ரத்னம் எதற்கு? நாம் இருவருமே அந்தப் படத்தைச் செய்யலாம் என்ற ரீதியில் பேச....இந்த விஷயம் ரஜினி தரப்பில் இருந்து ரத்னத்திற்கு தெரிய வந்திருக்கிறது. இதில் கடுப்பான ரத்னம்...ஷங்கருடன் சண்டைக்குப்போக...அந்தப் படத்திட்டமும் ஆரம்ப நிலையிலேயே கைவிடப்பட்டதாம். அதுமுதல் தன்னிடம் சண்டைபோட்ட ரத்னம் மீது கடுப்பில் இருந்த ஷங்கர் 'அந்நியன்' ஹனிபா பாத்திரம் மற்றும் கார் மூலம் ரத்னத்தை பழிவாங்கிவிட்டதாகக் கூறுகிறார்கள். இதில் எந்தளவு உண்மையோ யாமறியோம். அந்தக் கார் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் நிஜத்தில் ரத்னத்தினுடையது என்பது மட்டுமே யாம் அறிந்தது பராபரமே!

'மீண்டும்...மீண்டும்.....'என்கிற படத்தில் சங்கராச்சாரியாரை இமிடேட் செய்வதுபோல் சில காட்சிகள் அமைக்கப்பட்டிருப்பது பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறோம்.

டைரக்டர் ரகுநாத், சாமியார் வேடத்தில் நடித்திருக்கிறார். படம் முடிந்து சென்ஸாருக்கு போனபோது...சென்ஸார் அதிகாரிகள், சாமியார் சம்பந்தப்பட்ட காட்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். இதையடுத்து மறுபடியும் சென்ஸார் ஆபீஸர்கள் படத்தைப் பார்த்து இந்தமுறையும் அந்தக் காட்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ரகுநாத்தோ அந்தக் காட்சிகளை நீக்க மறுத்துவிட்டார். இதையடுத்து படம் ரிவைஸிங் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.



விஜய் - அஸின்
சிவகாசி

---

சினேகாவின் அக்கா ஆத்துக்காரர் மாதவ். வளரும் கலை இயக்குநர். 'உன்னை சரணடைந்தேன்' உள்பட சில படங்களுக்கு ஆர்ட் டைரக்ஷன் செய்திருக்கும் இவரும் சிநேகாவின் அக்காவும் பிரிந்துவிட்டார்கள். கோர்ட்டில் விவாகரத்து கோரியிருக்கிறார்கள் என்று எக்கச்சக்க தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் வேளையில்...'ஜெயம்' ரவி நடிக்கும் 'மழை' படப்பிடிப்பு ஸ்பாட்டில் நம்மிடம் மாட்டிய மாதவ்விடம் அந்தத் தகவல்களை கேள்வி ஆக்கினோம்.

"காதலித்து கரம் பிடித்த நாங்க பிரிய சான்ஸே இல்லை. போன வாரம் தான் இதே 'மழை' படத்திற்காக ஜோடியா குற்றாலம் போயிட்டு வந்தோம் நாங்க. வேணும்னா வீட்டிற்கு ஃபோன் போட்டுத் தாரேன். என் மிஸஸ்கிட்டேயும் கேட்டுத் தெரிஞ்சுக்குங்க." என்று சிரித்தவரிடம் 'மழை' தவிர்த்து வேறு என்னென்ன படங்களில் கலை இயக்குநராக பணிபுரிகிறீர்கள்? என்றோம்.

ஆனந்தம் பிலிம்ஸின் என்.எஸ்.வாசன் - கோகுல் இருவரது தயாரிப்பில் 'ஒவ்வொரு நாளும்', ஆனந்தம், உட்பட இரண்டு மூன்று புதிய படங்களுக்கு ஆர்ட் டைரக்டராக ஒப்பந்தமாகியுள்ளதாகக் கூறினார் ஓவியக் கல்லூரியில் பயின்றவரான மாதவ்.

---

**கி.பி.1752**இல் ஒரு குறுநில மன்னனின் குலதெய்வ கோயிலில் பணியாற்றிய ஒரு பூசாரியின் மகன் நீலகண்டபிள்ளை. இவர் தனது பெற்றோர்களின் மரணத்திற்குப் பின் உலக வாழ்வை வெறுத்தார். பின் துறவறம் பூண்டு தேவசகாயம் பிள்ளையாக மாறிய உண்மைச் சம்பவமே இப்படத்தின் கதை. திருவாங்கூர் வரலாற்றுச் சான்றோடு திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. முற்றிலும் திரைப்படக் கல்லூரி மாணவர்கள் நடிக்கின்றனர். கதை - திரைக்கதை -வசனம் எழுதி தயாரித்து இயக்குகிறார் ஜி.கிளமெண்ட். கன்னியாகுமரி, திருவனந்தபுரம், பத்மநாபபுரம் அரண்மனை, உதயகிரி கோட்டை, திருவாங்கூர் சமஸ்தானம், துப்பாக்கித் தொழிற்சாலை உள்ள தோக்கிலை போன்ற இடங்களில் படப்பிடிப்பு நடக்கிறது.

'சூரியன்' படத்தில் சரத் மொட்டை போட்டார். அந்தப் படத்தில் உதவி இயக்குநராக வெங்கடேஷ் இருந்தார். வெங்கடேஷ் இயக்குநரான பிறகு சரத்தை வைத்து மொட்டை போட்டு ஒரு படத்தைத் தர பல வருடங்களாகத் திட்டமிட்டிருந்தார். ஆனால் சரத்துக்கு மொட்டை போடும் அதிர்ஷ்டம் வின்சென்ட் செல்வாவிற்கு. 'காக்கி' படத்தில் முழுக்கவே மொட்டை போட்டு நடிக்கிறார் சரத். இந்த மொட்டை குறித்து சரத்திடம் கேட்டோம். தலையை தடவியபடியே பேச ஆரம்பித்தார்.

"'காக்கி' படத்தில் சக்திவேல் என்கிற பொலிஸ் அதிகாரியாக நான் நடிக்கிறேன். படத்தில் கேரக்டரை வித்தியாசப்படுத்திக் காட்ட ஆசைப்பட்டு தலைமுடியை ரொம்ப ஷார்ட்டா கட் பண்ண திட்டமிட்டோம். இதற்காகப் பல ஹேர் டிரஸ்ஸர்களிடம் சிகை அலங்காரம் பண்ணியும் செட்டாகவில்லை. அதனால் போடு மொட்டையை என்று மொட்டையைப் போட்டுவிட்டேன். இப்பொழுது மொட்டைத் தலை கெட்-அப் ரொம்ப நல்லா இருக்குன்னு எல்லோரும் சொல்றாங்க."

100-வது படம் 'தலைமகன்' பிரமாண்டமாக தொடங்கப்பட்டிருக்கிறது. ஆனால் திடீரென தெலுங்குக்குப் போகிறீர்கள் என்று கேள்விப்பட்டோமே?

"ஆரம்பத்தில் தெலுங்கில் நடித்தேன். தமிழில் பிஸியான பிறகு அங்கு நடிக்கவில்லை. சிரஞ்சீவி கேட்டுக்கொண்டதால் ஒரு படத்தில் நடிக்கப்போய் தொடர்ந்து வாய்ப்புகள் அங்கே வருகிறது. இருந்தாலும் கதைகளைத் தேர்வு செய்து ஒருசில படங்களில் நடிக்கவிருக்கிறேன்" என்றார் சரத்.

---

**வி**ஜய் 'சிவகாசி' படம் முடிந்ததும் தனது சொந்தப் படமான 'ஆதி'யை முடிக்கிறார். அதன்பிறகு எஸ்.ஜே.சூர்யா இயக்கத்தில் 'புலி' அல்லது 'புலிகேசி' படத்துக்குப் போகிறார். அப்புறம்...மறுபடி ஏ.எம்.ரத்னத்துக்கு ஒரு படம். அதற்குப் பிறகு அதாவது அடுத்த வருட தீபாவளிக்கு தி.மு.க. துணை பொதுச்செயலாளர் மு.க.ஸ்டாலின் தயாரிப்பில் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் நடிக்கிறார்.

---


இந்த வருட தீபாவளி எப்படியிருக்குமோ தெரியவில்லை. ஆனால் 2006 தீபாவளி இப்பவே பரபரப்பாகிவிட்டது. ரஜினியின் 'சிவாஜி', கமலின் 'தசாவதாரம்', மு.க.ஸ்டாலினின் விஜய் படம்..... என சூடுபிடிக்கிறது.



பிரபு - மாளவிகா
பாசக்கிளிகள்



எஸ்.ஜெ. சூர்யா - நயன்தாரா
கள்வனின் காதலி



**க**லைஞர் திரைக்கதையில், ராம.நாராயணன் தயாரிப்பில், அமிர்தம் இயக்கத்தில் பிரபு - முரளி - மாளவிகா - வினித் - நவ்யா நாயர் நடிக்கும் படம் 'பாசக்கிளிகள்'. இந்தப் படத்தில் ஒரு சுகமான காதல் பாடலை எழுதியிருக்கிறார் வைரமுத்து.

'மீசை முத்தம் வேண்டுமா
மீசை இல்லாத முத்தமா
தண்ணீர் முத்தம் வேண்டுமா
தரையில் முத்தம் வேண்டுமா'

என முத்தத்தை வைத்து முணுமுணுப்பாகப் போகிறது அந்தப் பாடல். கலைஞரும் அவருக்கே உரிய கைவண்ணத்தில் பிரபு - மாளவிகாவுக்காக ஒரு காதல் பாடலை எழுதியிருக்கிறார்.

'தென்றல் எனும் தேரேறி
மன்றம் வந்த முல்லை மலரே' என

இலக்கியத் தரமாகப் போகிறது அந்தப் பாடல்.

---

**பு**துமுகம் மகேஷ், புதுமுகம் கீர்த்தனா நடிக்க, எம்.எஸ்.குப்தா இயக்கத்தில் தமிழ், தெலுங்கில் தயாராகும் படம் 'இது கொஞ்சம் புதுசு'. இன்றைய நவீன உலகில் பணமே பிரதானம் என உழைக்கும் கணவன் - மனைவிக்கு, வாழ்க்கையில் இன்னும் பல விஷயங்கள் இருக்கிறது. அதையும் கொஞ்சம் கவனிங்க எனக் குமட்டில் இடித்துச் சொல்ல வருகிறதாம் இந்தப் படம்.

மெசேஜ் மட்டும் இல்லை, கிளாமர் மஜாவும் இப்படத்தில் உண்டு.

---

**ப**த்திரிகைகள் ஆதரிச்சாலும் சேனல்கள் ஓரம்கட்டியே வருகின்றன. விஜயகாந்தை

இதனால் தன் கட்சிக் கொள்கைகளைப் பரப்ப 'ஏஏ' என்கிற சேனலை துவக்க ஆலோசித்து வருகிறார். அதென்ன 'டபுள் ஏ'?

விஜயகாந்தின் பெற்றோர் பெயர்களை (அழகர், ஆண்டாள்) குறிக்கிறது.



சுஜிபாலா



மதுபாலா

# 'டிசம்பர் 26' சுனாமி திரைக்காவியமாகிறது

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி சுனாமியால் ஏற்பட்ட சீரழிவுகளை அவ்வளவு சீக்கிரத்தில் யாரும் மறந்திட முடியாது. கொடூரத்தின் வலியை எந்தப் பாசாங்குமில்லாமல் படம் பண்ணியிருக்கிறார் இயக்குநர் ரா. மணிவாசகன். குறும்படங்கள், தொலைக்காட்சித் தொடர் என்று வேறொரு தளத்தில் இருந்தவர், கடந்த ஆண்டு தெற்காசிய அளவில் நடந்த குறும்படப் போட்டியில்.....சிறந்த குறும்படத்துக்கான விருதை வங்காள மொழி இயக்குநர் ஷியாம் பெனகல் கையால் வாங்கியவர்.

உறவுகளை ஒட்டுமொத்தமாகத் தொலைத்துவிட்டு, அநாதைகளாக, கடல் மணற்பரப்பில் சந்திக்கிற ஒரு ஆண், ஒரு பெண் கதாபாத்திரங்களை வைத்துக்கொண்டு மொத்தப் படத்தையும் பண்ணியிருக்கிறார்.

அதிலும் ஹீரோவுக்கு தமிழ் மட்டும்தான் தெரியும். ஹீரோயினுக்கு தமிழ் தெரியாது. இந்த இரண்டு கதாபாத்திரங்கள் எப்படி உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள், ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதலாக இருக்கிறார்கள் என்பதை தெளிவான திரைக்கதையின் மூலம் சுவாரஸ்யமாகச் சொல்லியிருக்கிறார் இயக்குநர். சுனாமி பேரலைக்காக ஸ்பெஷல் கிரா∴பிக்ஸ், ஹைடெக் தொழில்நுட்ப யுக்தி என்பவற்றைப் பயன்படுத்தி நடந்த கோரத்தைக் கண் முன் நிறுத்தியிருக்கிறார்கள்.

படத்தின் ஹீரோ நிகில். சினிமாவுக்குப் புதியவர். ஹீரோயின் பாயல், ஏற்கனவே நடித்திருந்தாலும் கதாநாயகியாக அறிமுகமாவது இந்தப் படத்தில்தான்.

"இப்படியொரு முயற்சி எடுக்கணும்கிற எண்ணம் எப்படி வந்தது?" என்று இயக்குநரிடம் கேட்டால், கம்ப்யூட்டரில் படத்தை எடிட் பண்ணிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரைக் கைகாட்டுகிறார் மணிவாசகன்.

"மணிமாறன், அப்புறம் சீனிவாசன் ரெண்டு பேருமே என்னோட நண்பர்கள். மணிமாறன் பிரமாதமான எடிட்டர். 2003இல் சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற குறும்படப் போட்டியில் சிறந்த எடிட்டருக்கான விருது வாங்கியவர். நல்ல சினிமா பண்ண வேண்டும் என்ற கனவு எங்களுக்குள் உண்டு. எப்போங்கிறது மட்டும் தெரியாமல் இருந்தது. சுனாமி பாதிப்பு மனசைப்போட்டு உலுக்கியெடுக்க...அதையே பண்ணலாம்னு தீர்மானம் பண்ணினப்போ, நாங்களே பண்றோம்னு எனக்குத் தோள்கொடுத்தது மணிமாறனும், சீனிவாசனும்தான்.

மொத்தப் படத்தையும் தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப் பட்டணத்துக்குப் பக்கத்துல ஊர் லகூன் தீவுல படமாக்கினோம். மொத்தம் 25 நாள்தான்.

கரடு முரடான அந்தத் தீவுப்பகுதியில் படம் பண்ண நாங்க பட்ட சிரமம் கொஞ்சம் கிடையாது. ஆனால் எல்லாக் கஷ்டத்துக்கும் பலனாகப் படம் ரொம்ப நல்லா வந்திருக்கு என்று சந்தோஷமாகச் சொல்கிறார்.

"இரண்டு கதாபாத்திரங்கள் மட்டும்னு சொல்றது இந்திய சினிமாவுக்கு புதுசு. இரண்டரை மணி நேரத்துக்கு எப்படி போரடிக்காமல் கொண்டு போக முடியும்?

அதை சவாலா எடுத்துக்கிட்டுத்தான் பண்ணியிருக்கோம். காதல், சோகம், பரிதாபம், சந்தோஷம் எல்லாமே இருக்கும். படம் பார்த்திட்டு வெளியில் வர்றப்போ குறைந்த பட்சம் ரெண்டு நாளாவது டிஸ்ட்ரப் பண்ற படம் இது" என்கிறார்.

படத்திற்கு இசை - அருண். முன்னணி இசையமைப்பாளர் பலரிடம் கீ-போர்டு ப்ளேயராக இருந்தவர். ஆறு பாடல்களை ரகளையாகப் போட்டுக் கொடுத்திருக்கிறாராம். அதேபோல் ஒளிப்பதிவாளர் முத்து மனோகர். 'ஊமை விழிகள்' படம் டெக்னிக்கலா பேசப்பட்டது போல் 'டிசம்பர் 26' பேசப்படும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறார் இயக்குநர்.

ஜூலை மாதம் திரைக்கு வருகிறது!

வி னி சி ட்

**ப**த்திரிகைகளைத் திறந்தால் மாணவிகளை குரு ஸ்தானத்தில் இருக்கும் ஆசிரியர்கள் சிலர் பலாத்காரம் பண்ணுகிற செய்தி வந்தபடிதான் இருக்கிறது. இதற்கு மாணவர்களை வைத்தே அந்த ஆசிரியர்களைத் திருத்த வேண்டும் என்ற கருத்தை வைத்து தயாராகும் படம் 'இப்படிக்கு என் காதல்'. புதுமுகம் ரவி, தயாரிப்பாளர் குண்டேச்சா மீது பாலியல் புகார் கொடுத்த தனுஜா, அபிநயஸ்ரீ உட்பட பலரும் நடிக்க... பி.கிஷோர் இயக்கியிருக்கிறார் இந்தப் படத்தை.

---



**ந**டிகைகள் சொந்தப் படம் தயாரிப்பது கத்திமேல் நடக்கிற சமாச்சாரம்தான். பெரும்பாலும் பேலன்ஸ் தப்பி காலில் காயம் பட்டுத்தான் இருக்கிறது. இருப்பினும் சிலர் தன்னம்பிக்கையோடு படத் தயாரிப்பில் இறங்குகிறார்கள். ராம்கோபால் வர்மாவின் கம்பனியோடு கூட்டு சேர்ந்து சூர்யாவை ஹீரோவாக வைத்து ஜோதிகா படம் தயாரிக்க இருக்கிறார். ராதிகா, சரத்தை வைத்து சரத்தின் 100ஆவது படமான 'தலைமகன்' படத்தை பிரமாண்டமாகத் தயாரிக்கப்போகிறார். இந்த வரிசையில்...நடிகை விந்தியாவும் படக்கம்பெனி துவக்கியிருக்கிறார். இப்போது நஷ்டத்தை ஏற்படுத்தாத உத்தரவாத ஹீரோ யார் என்றால்....? எல்லோரும் கை காட்டுவது சத்யராஜைத்தான். 20 இலட்ச ரூபாய் சம்பளம். ஒரு மாசம் கால்ஷீட் என திட்டமிட்டு நடிக்கிறார் சத்யராஜ். படமும் கையைக் கடிக்காமல் காப்பாற்றிவிடுகிறது. இதைக்கேள்விப்பட்ட விந்தியா, நேராக சத்யராஜிடம் போனார். என் சொந்தப்படத்திற்கு நீங்கள்தான் கால்ஷீட் தரவேண்டும் என்றார். 2007 டிசம்பர் வரை தனது கால்ஷீட் டைரி நிரம்பியிருப்பதை சொன்ன சத்யராஜ், கூடவே இன்னொரு அட்வைசும் சொன்னார். 'சம்பாதிச்ச காசை சட்டுனு விட்டுறாதம்மா. படமெடுத்த நடிகைகள்லாம் ரொம்ப அவஸ்தைப்பட்டுப் போயிட்டாங்க. அதனால ரொம்ப கவனமா தயாரிப்பில் இறங்கணும்' என கால்ஷீட் கேட்டுப் போன விந்தியாவிடம் கை நிறைய அட்வைஸை அள்ளிக்கொடுத்திருக்கிறார் சத்யராஜ்.



மதுபாலா




## வருவாயா?



நீ தீண்டிய என் விரல்கள்
நீ பார்த்த என் விழிகள்
நீ கேட்ட என் மொழிகள்
எல்லாமே இன்று
வெடித்து வரண்டுவிட்டன - என்
இதயம் போல.

ஆனால், உன் ஞாபகங்கள் மட்டும்
எனக்குள் தந்தியடிக்கின்றன.

ஆயிரம் பேர் சுற்றி நின்று
ஆறுதலாய் என் தலை கோதி
பால் வார்த்த போதும்.....
என் நாசி தேடியது உன் வாசனை,
என் விழிகள் தேடியது உன் உருவம்,
தளர்ந்து போன என் கரங்கள்
உன் ஸ்பரிசத்துக்காக
வெற்றிடத்தைத் துழாவுகின்றன.
என் உயிர் காத்திருப்பது உனக்காக.
வருவாயா மகனே?
நீ வந்தால் தான்
இந்த ஊருக்குத் தெரியும்
நான் அநாதை இல்லையென்று.
நீ வந்தால் தான்
இந்த ஊருக்குப் புரியும்
நான் மலடியில்லையென்று.
உன் மனைவியிடம் அனுமதி பெற்று
வருவாயா மகனே?
என் இறுதி மூச்சை வழியனுப்ப....

-நசிஷா பன்னீர்.

## விடியல்

இழந்து போன சுவர்க்கம் - இனி
உனக்காக வரப்போவதில்லை.
நரகம் உனக்குப்
பரிசளிக்கப்பட்டாலும்
நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்.
விடிவில்லா விடியல்களில்
வாழ்ந்து கொண்ட போதினிலே
வந்துவிட்ட மனவடுக்கள்
மாறும்முன்னே
மானுடம் செதுக்கும் சிற்பியாகி
நரகங்களைச் சொர்க்கங்களாக்கு
அப்போது சூரியனும் இறந்துவிடும்.
ஆனாலும்....
விடியலின் விளிம்புகள்
தெரியாது.
மீண்டும் ஓர் நாள்...உனக்காக
உதித்தெழுவான் உதயகாலன்.
அப்போது விடியுமடா - உன்
வாழ்க்கை
வசந்தமாக!

-எஸ்.யசோதினி, கரவெட்டி.

## மரணம்

ஞாபகங்களின்
துணிக்கைகளில்
ஒளிந்து
விளையாடுகிறது
மரணம்.

மனிதன் மரணத்தை
மறந்து
மகிழ்வுறுகிறான்
இன்னொருவன்
இறக்கையில்தான்
மரணம் என்ற
பூதமொன்று
மடியில்
உறங்குவதை
மனிதன்
உணர்கின்றான்.

மரணத்தை
வென்றுவிட்ட
மனிதனுக்கு
ஆசைதான்
மரணம் யாருக்கும்
மசிவதில்லை.

மரணத்தை
வென்றவன்
எங்கேனும்
உண்டோ?

உயிர்களின்
மனசுகளில்
கடைசிப் பக்கம்
இடமிருக்கு
மரணத்திற்கு

வாழ்வுத் தேர்வை
எழுதி
முடித்தவனுக்கு
இறைவன்
கொடுக்கும்
இறுதி விருதுதான்
மரணம்.

-இராமச்சந்திரன்
தவேந்திரன், ஹாலி
- எல.



## நான் கண்ட வைரமுத்து

எந்த நாட்டுக் கவிஞனோ!
எழுத்தாளனோ! தான்
வெளியிடுகின்ற நூலுக்கு
வைரமுத்திட மிருந்து
ஆசியுரை பெற்றால்
அதுவே பெரும்
பாக்கியம்......
என்று நினைக்கிறேன்.

கவிப்பேரரசுவின்
தாவணியில்லாத
கவிதைகள்
இருபதையாள்கிறது
முக்காடு போட்ட
கவிதைகள்
அறுபதையாள்கிறது.

தத்துவங்களும்
படிப்பினைகளும்
சிந்தனாவாதிகளையாள்கிறது
இம்மாற்றம்
எவருக்கு வரவில்லையோ
அவர்களும்
அதுகளெனும்
அஃறிணையே!

தத்துவக்
கண்ணதாசன்களின்
தலைவன் - கவிப்பேரசு
புரட்சிப் பாரதிகளின்
புதிய பாதைகள் -
கவிப்பேரசு
கற்பனைக் கம்பன்களின்
கம்பிகள் - கவிப்பேரசு
மரபுக் கவிஞர்களின்
மானிலம் - கவிப்பேரசு
புதுக் கவிஞர்களின்
புண்ணியஸ்தலம் -
கவிப்பேரசு.

கவிப்பேரரசார் தான்
'உலகம்' எனும்
நான்கெழுத்து
'கவிதை' யெனும்
மூன்றெழுத்திடம்
திணந்தோறும்
தோற்றுப்போகிறது!

இப்போது தானே!
நூலுக்குப் பின்னே
ஊக்குச் செல்கின்றது.

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் - 01.

## உண்மைக் காதல்

அவன்
கனவாக
இருந்திருந்தால்
மறந்திருப்பேன்
காதலாக
இருக்கின்றானே!
மதங்கள்
மாறுபட்டிருக்கலாம்
மனங்கள்
ஒன்றுபட்டிருக்கின்றதே!
இனங்கள்
வேறுபட்டிருக்கலாம்
இதயங்கள்
ஒன்றுபட்டிருக்கின்றதே!
அர்த்தமற்ற அந்தஸ்து
நம்மை
அந்நியப்படுத்தலாம்
அன்பு கொண்ட
நெஞ்சங்கள்
ஒன்றுபட்டிருக்கின்றதே!
ஆயிரம் காரணங்கள்
நம்மைப் பிரிக்க
நினைக்கலாம்
அத்தனையையும்
வெல்லும்
நம் உண்மைக் காதல்.

-எஸ்.என்.பிரியா,
கொட்டகலை.

## காலமெல்லாம் காத்திருப்பேன்

அன்றைய நம்
அறிமுகத்தின் பின்
காதலால்
காயப்பட்டுக் கொண்டிருக்கிறது
நெஞ்சம்!

உன்
அன்பின் ஆழத்தை
அஞ்சலில் அறிந்த பின்பு
தபால்காரன் என் பாதையை
மறந்த நாட்களில்
என் சந்தோசத்திற்கு கருச்சிதைவு.

உன் இறுதி மடல் வந்து
பிரிவின் விளிம்பில் உள்ள
துக்கம்
சோகத்தை மட்டுமே
ஆசீர்வதிக்கிறது.

உன் பெயரை மட்டுமே
பூஜித்துக் கொண்டிருந்த போது
நான் மறந்தே போகிறேன்
வேறு தேவைகளுக்காகவும்
இதயம் இருப்பதை!

என் இதயத்தில்
தகிக்கும்
உன் நினைவுகள்
பலவீனப்பட்டு
மரணித்துப் போவதற்குள்
உன் முடியாத முடிவை
முன்வைத்து விடாமல்
முடியுமான முடிவை
அஞ்சலில் சேர்த்துவிடு!

காத்திருப்பேன் கண்ணே
காலமெல்லாம்....
கல்லறையில் கூட - உன்
காதலுக்காக!

-எம்.ஏ.றமீஸ்,
அட்டாளைச்சேனை - 10.

## துனியார் மருத்துவமனை

அழகான வரவேற்பறை
அமைதியான சூழல்
அன்பான தாதிமார்
அருமையான பஞ்சு
நாற்காலிகள்
அதில் அமர்ந்தவுடனே
பாதி நோய்
குணமாகியது
போல் ஒரு உணர்வு
திரைச் சீலைக்குள்
சிரித்த முகத்தோடு
வைத்தியர்
பெயரைக் கேட்டார்

பெரியசாமி என்றேன்
வியாதியைச்
சொன்னேன்
விருப்பத்தோடு
கேட்டார்
மூச்சை நன்றாக
இழுத்து
சுவாசிக்கச் சொன்னார்
பயப்படத்
தேவையில்லையென்று
இரண்டே சொல்லில்
கவிதை சொன்னார்

பிறகு கலர் கலராய்
வில்லைகள் கொடுத்தார்
கட்டணம் எவ்வளவு
என்று
கனிவாகக் கேட்டேன்
தொகையைச் சொன்னார்
தொகையைக்
கேட்டவுடன்
நான் மறுபடியும்
நோயாளியானேன்.

-வெ.ரெங்கநாதன்,
நோட்டன்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

சாதாரண மனிதர்கள் உணர்ந்து வெளிப்படுத்துவதற்கு சாத்தியங்களை மறுதலிக்கும் மனவெளி ஊடாட்டங்களின் உணர்திறன் நிலைகளை ஒழுங்குபடுத்தி, அதற்கென பிரத்தியேக ஒரு உருவம் அளித்து உலவ விடும் சக்தி, படைப்பாளியிடமே இருக்கிறது.

கவிதை தனது பேசும் குரலை தொடர்ந்து சோதிக்கும் மொழியுடனும், குறிப்பியல் வெளியுமே கவிதையின் உயிர்த்தலையும், அதன் இறவாமையையும் பேணிக்கொண்டு இருக்கிறது என பொதுவாக அடையாளம் காண இயலும்.

சொற்களின் தீராத உதவியால் வெளிப்பட்டு உலவுவதும், பேசுவதும், சொற்களை மொழிபேசுவது என்பது கவிதையின் மேலெழும் உள்ளீடுகளின் இடைவிடாத சாத்தியப்பாடுகளின் கலகம் ஆகிறது. அல்லது நிகழ்வின் உயிர்ப்பு எனவும் மறுபொருள் கொள்ளப்படலாம்.

கவிதை ஒரு நிகழ்வின் அனுபவத்தை சுமந்து திரிந்து வாசிப்போனிடத்தில் இறக்கிவிடுவதோ அன்றி பல காலங்களாக அலைவுற்ற மன அவசத்தை சமயம் பார்த்து பீச்சிவிட்டு தப்பித்துவிடுவதோ அல்ல. மாறாக அதுவே ஒரு அனுபவத்தை, ஒரு நிகழ் உயிர்ப்பை உற்பத்தி செய்ய வேண்டும். கவிதை என்பது அனுபவத்தின் சராம்சம் அல்லது படிவு அல்ல. அனுபவ கவனமிச்சம் என்பது கவிதையிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட இயங்கும் படிவு. கவிதை தான் முடிவான நிகழ்வு.

தமிழை ஓர் உடலாக வடிவமைக்கும் மகா கதையாடலான காலாவதியாகிப்போன நவீனத்தில் இருந்து விடுபட்டு விளிம்புகள், தனியன்கள், மாற்றுக்களின் சப்தங்களாக அதிரும் பின் நவீனத்துவ வாசிப்பு கவி மனதுகொண்ட மிஹாத் உடைய "முள் வெளியில் துளிர்த்த சப்தத்தில் வழியும் ஒற்றைப் பேரிசை" என்னும் பிரதிகளின் குழுமம் விரைவில் வெளிவர இருக்கிறது. இவை மொழியை நினைவாய்க்கொண்ட மனதை உதறி சித்திரத்தில் படிகின்றன. அச்சித்திரக் குழுமத்தில் இருந்து சில பிரதிகள் இதோ.

### ஒடுக்கு முறையின் தீச்சுடரிலிருந்து நீர்த்துளிகள் மீண்டெழும்

தேயும் கிழக்குப்பிறை
அழுது திரிந்த
நெடும் பாதையின் துயர
விளிம்பில்

மழை வற்றிய மேகங்கள்
அசைவற்றிருந்தன.

கால நீட்சிச் செழிப்பில் தேங்கிய
சோனி வயல்களில்
ஆயுதம் தரித்து நயவஞ்சகம்
பயிர்களை அழித்த துயர
ஒலிப்படிவுகளை
எந்தவொரு தமிழ்ச்சேவலின்
பரிவான கூவலிலும் கேட்க
முடியவில்லை.

பனியின் மெல்லிய கீற்றுகளில்
முடியப்பட்ட
வாழ்வாதாரங்களை
தீ முளைத்த தரையில் கிடத்தி
மூச்சை நிறுத்தியவன்
பாவ நெருப்பாற்றில்
விடுதலைப்படகு வலிப்பவன்.

குருவிகள் கூடுகட்டத் தொடங்கிய
குருத்திலைக் காலத்தின் போது
ஒற்றுமையின் பசளை தின்று
நிமிர்ந்து வளர்ந்த
மரத்தின் ஹிருதயத்தில்
வெடிகுண்டு வைத்துச்
சிதிலமாக்கியவன்
அடக்கு முறைக்கெதிரான போரின்
பெயரால்
கொலை மொழியில் குருதி
நிலக்கவிபாடி
சகோதர கலாசார யோனிக்குள்
பாசிச மலம் கழிப்பவன்.

இன்று எமது கவிதைகளின்
பாதங்களை
காட்டு முள் தைத்தபோது; முள்
பிடுங்க கை உயர்கையில்
எங்கோவொரு மூலையில்
காகங்கள் குரைக்கும் சப்தங்கள்
இலத்திரன்காற்றில் பிசுபிசுத்தன

தெரிந்து கொள்!
நீ ஏந்தியிருக்கும் ஆயுதங்களின்
விதைகள்
இன்னொரு நந்தவனத்தின்
அமைதிக்குள்
மண்முடிக்கிடக்கின்றன...!

### இருளைப்புணர்ந்த இரவின் கதை

ரகஷ்ய சுதந்திரம்
மௌன வெடிப்படைந்து
கொல்லைப்புற அன்பின்
அற்புத தேடுதலில்
பிரமாண்டமாய்
பரிமளிக்கும்

வெற்று மனதின்
உயர்தாகமானது
பரிசுத்த இனிமையால்
ஆசை உரம் தூவி
அழைக்க
பயிர் செழித்த
வழியெங்கும்
பரவசக்கலை விளையும்

விழியில் அமுதம்
தடவிய வானவில்
பறவை
இருள்கடிவாளமுடைத்துச்
சிறகடித்துப் பறந்து
நிஷ்ப்த வெளியெங்கும்
எச்சம் பீச்சுகையில்
மரக்கிளை நெடுகிலும்
மலர்கள் பூக்கும்

கனாக்குளையலுக்குள்
புதைந்த துயில் தூரிகை
புறகளின் மெத்தைச்
சிறகுகளில்
வைகறைச் சூரியனை
வரைய
கொப்பளிக்கும் வெப்பம்
மென்மைகளுக்குள்
பதுங்கும்

இதுகண்டு
காதல் மண்டபம்
முழுவதும்
மாயை நெருப்பு
பற்றிக்கொள்ள
ரசவாதத் தோட்டத்துப்
பற்றைகளுக்குள்
இசை மெல்ல
அமுங்கும்.

ஆழ்ந்த தியானத்தை
ஆற்றலான சவால்
பிடித்திருக்கும் வரை
அருவருப்புச் சொர்க்கம்
சுகத்துக்கு
விடுதலையளிக்காது.

### இரை போன பாதையில் சிறகடிக்கும் மகாகால ஈரப்பறவை

நிலாவெளிப் பறவையின்
சூரிச்சொண்டு மீட்டுகின்ற
மையல் இசையில்
சுருண்டு கிடந்த இரவின் சலனம்
விறைத்து எழுந்து
மலரின் இதழ் உடைத்து
வழிகிறது

காற்றின் சிறு இதயமும்
ஸ்தம்பித்துப்போன கொடிய
இடைவெளியில்
உன் கவிச்சிறகுகள் உதிர்ந்து
சிலிர்த்திட்ட நட்சத்திரக்காட்டில்
தெகரத்திலலைகிறது மோகமான்.


நாளிகைகளைத் தின்ற
நெடிய அலைக் கழிச்சலுக்குள்
கன்னங்களில் - துாவிட்ட மார்கழி
வாசனை
பின்னப்பட்ட ஞாபக ஜடையில்
தொங்கிக் கிடக்கிறது.

இலை உதிரும் அலை
வரிசையில் சிக்கிடும்
புன்னகையின் தாளலயமானது
நதிக்கனவுகளின்
மேற்பரப்புகளில் விழிகையில்
பனி முட்களின் கீறல்
தொடங்கிய
முன்னிரவிலிருந்து
வர்ணத் துயில்களுக்குள்
பேரிசை எழுகிறது


மூங்கிலின் சருகுகளை
உரசித் துடுப்பு வலிக்குமொரு
சில் வண்டுத் தென்றலின்
ரகஷ்யப் புதரினில்
பார்வைகள் பொறுக்கிடாத
பழம்
மலர்ந்து மல்லுக்கு நிற்கிறது.

பல வருஷாந்திர மேகத்தினில்
இருந்து
இரு மழைத்துளிகள் மட்டும்
பூமிக்கு இறங்கிய ஓர் தினத்தில்
பச்சிலைகள் வரைந்திடும்
புல்லோவியத்தை
ஸ்பரிசித்து நோகாமல்
எந்தப் பாலையில்
உன் ஒற்றை மந்தை
மேய்கிறது?

## பேனா நண்பர் பகுதி - பேனா நண்பர் பகுதி - பேனா நண்பர் பகுதி




பெயர் : ரி.காண்டீபன்.
வயது : --
முகவரி : தீகவாபி வீதி,
மாணிக்கமடு, இறக்காமம்.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர் : எஸ். பிரதீபன்.
வயது : --
முகவரி : 29, ஈகியூட்டி பை,
பிரேபுறாக் வீதி,
கொழும்பு - 02.
பொழுதுபோக்கு :
வழமையானவை.



பெயர் : சோ. நிமல்.
வயது : 23.
முகவரி : பிரதான வீதி,
பால்சேனை, கதிரைவெளி,
வாகரை.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரி.வி.




பெயர் : ஏ. குமார்.
வயது : 29
முகவரி : Ref No 2273, K.B.R.
DFAC - D2H, Apoae - 09348,
U.S.A.
பொழுதுபோக்கு : பத்திரிகை,
புத்தகம்.

# பொழுது நன்றாகக் கழிய பின்பற்ற வேண்டியவை

இன்று பொழுது நன்றாக அமைய வேண்டும் என்று, காலையில் எழுந்து கொள்ளும் போதே மனம் தீர்மானிக்கிறது. இன்று எதிர்வரும் பிரச்சினைகள் அனைத்தையும் திறம்படக் கையாள வேண்டும். சந் தோஷ நிமிடங்களை அப்படியே அனுபவிக்க வேண்டும், என்ற தீர்மானத்துடன் காலை வேலைகள் மளமளவென நடக்கின்றன. வேலைக்குச் செல்பவர்கள் படும் பாடு தான் பெரும் திண்டாட்டமாய் அமைந்துவிடும்.

வேலை இடத்தில் உடன் பணிபுரிபவர்களுடன் அனுசரித்துப் போகுதல் வேண்டும், மேலதிகாரி கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் விரல் நுனியில் பதில்கள் வைத்திருக்க வேண்டும். பி.ஆர்.ஓ. வைப் பகைத்துக் கொண்டால், வேண்டிய கிளையன்ட்களை மடக்கிப் போட்டு வேறு ரூட்டுக்குத் திருப்பி விடுவார் என்று ஏகப்பட்ட சவால்களுடன் அலுவலகத்தில் நுழைய வேண்டும்.

காலையில் எழுந்திருக்கும்போது சுறுசுறுப்புடன்



எழுவது, மதியம் சாப்பாட்டு நேரம் ஆனதும் காணாமல் போய்விடும். நான்கு மணி நேரத்தில், உடன் வேலை செய்பவர்களுடன் அனுசரித்துப் போக வேண்டிய நிர்ப்பந்தத்தால் ஏற்பட்ட சோர்வு இது. காலையில் கலகலவென பேசிய பேச்செல்லாம் காணாமல் போய், அமைதியாகிறீர்கள். யாராவது கேள்வி கேட்டால் அசிரத்தையாக பதில் சொல்வது அல்லது எரிச்சலுடன் பதில் சொல்வது என்று இருக்கிறீர்கள். மாலை நேரத்தில் கோபத்தின் உச்சிக்குச் சென்று, அதே கோபத்துடன் வீட்டுக்குச் செல்கிறீர்கள்.

வீட்டில் எல்லோரும் உங்களை உதாசீனப்படுத்துவது போல தோன்றுகிறது. எந்த காரியமும் செய்யப் பிடிக்கவில்லை. ஏன் இப்படி?

டாக்டர்களிடம் கேட்டால், இதற்கு 'மூட் டிஸ் ஆர்டர்' என்று பெயர் சொல்வர். சாதாரண மூட் ஸ்விங்குடன் இதை ஒப்பிட வேண்டாம். அது வேறு. இது வேறு. தினமும் இப்படி மூட் டிஸ் ஆர்டர் ஏற்படுகிறது என்றால், உடனடியாக மனநல மருத்துவரிடம் செல்வது நல்லது.

எப்படி எல்லாம் நடந்து கொள்ளக் கூடாது என்று ஒரு வரைமுறையை அறிந்து வைத்தால், இப்பிரச்சினையிலிருந்து வெளிவரலாம்.

* காலை நேரத்தில் மேலதிகாரி உங்களிடம் எரிந்து விழுந்தால், மனம் நொந்து போவீர்கள். சகஜம்தான். மூளையில் உள்ள சில இரசாயனங்கள் தான் இதற்குக் காரணம். செரோடோனின், நார் பெனெப்ரைன், காபா மற்றும் டோபோமைன் ஆகியவை தான் உங்கள் சுக, சந்தோஷ, துக்க கோபங்களை வெளியே காட்டுகின்றன. சில நேரங்களில், தட்ப வெப்ப மாற்றங்களினாலும் இத்தகைய மூட் டிஸ் ஆர்டர் ஏற்படலாம்.

இதற்கென பிரத்தியேக மருத்துவ முறைகள் உள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள இரசாயனங்களின் அளவுகளில் மாற்றம் கொண்டு வந்து, உங்கள் பிரச்சினையைத் தீர்க்கலாம். மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டு இதைச் சரிசெய்து கொள்வதை விட, உணவு முறையில் கவனம் செலுத்தலாம். உதாணரமாக, கோபம் தலைக்கேறும்போது, சாக்கலேட் சாப்பிடுங்கள். மிட்டாய், சாக்கலேட், போன்ற கார்போஹைடிரேட் அதிகம் கொண்ட உணவுகளைச் சாப்பிடும்போது செரோடோன் இரசாயனத்தின் அளவு உடலில் அதிகரிக்கிறது. இது ஓரளவு கோபத்தைக் குறைக்கிறது. ஆனால், இதையே வழக்கமாகக் கொண்டால், ஒரு நாள் 'கோதுமை மூட்டை உடம்புக்காரி'யாக வேண்டியதுதான். பச்சைக் காய்கறி, வாழைப்பழம், சிக்கன், அதிக சதைப்பற்றுள்ள மீன் ஆகியவற்றைச் சாப்பிடும்போது உங்கள் கோபம், வெறுப்பு குறையும்.

* காபி, டீ ஆகியவற்றில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டால், டென்ஷன் குறைவதாகத் தோன்றும். ஆனால், இவற்றை அதிகம் சாப்பிட்டு உடலைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது.



தினமும் 15 நிமிடமாவது உடற் பயிற்சி செய்வதை வழக்கமாகக் கொண்டால், உங்கள் தன்னம்பிக்கை எக்கச்சக்கத்துக்கு ஏறி விடும். எந்த சவாலையும் நன்றாகவே சமாளிக்கலாம். உடலில் சுறு சுறுப்பு கூடுவதால் ஏற்படும் தன்னம் பிக்கை இது. செய்து பார்த்து, ஒரு மாதத்தில் உங்களிடையே ஏற்படும் மாற்றத்தை நீங்களே உணருங்கள்.

# 'நொன்-ஸ்டிக்' பாத்திரத்தை உபயோகிப்பவர்கள் கவனத்திற்கு....

'நான்-ஸ்டிக்' பாத்திரங்களை மிகக் கவனமாகக் கையாள வேண்டும். அவற்றை அதிகச் 'சூட்டில் அடுப்பில் வைக்கக் கூடாது. வைத்தால் நச்சு வாயுவை உற்பத்தி செய்யும். கூடுமான வரையில், அடி கனமாய் உள்ள பாத்திரங்களையே சமைக்கப் பயன்படுத்தலாம். தோசைக் கல் 'நான் - ஸ்டிக்'கில் செய்யப்பட்டதாக இருந்தால், அதை மட்டும் சற்றுக் கவனமாய் பராமரித்தால் போதும்.



- பலரும் 'நொன்-ஸ்டிக்' பாத்திரங்களை சபீனா, மெட்டல்-ஸ்கிராப் போன்ற வற்றைப் பயன்படுத்தித்



துலக்குகின்றனர். மென்மையான நைலான் பிரஷ்ஷால், லிக்விட் சோப் போட்டு இதைச் சுத்தம் செய்ய வேண்டும்.

- எவர்சில்வர் கரண்டி போட்டு 'சக்கு சக்கு' என்று கொத்து பரோட்டாவுக்கு அடிப்பது போல் அடித்து நாசப் படுத்துகின்றனர். இது மிகத் மிக தவறு. இதற்கென்று கொடுக்கப்பட்ட மரக் கரண் டியைத் தான் பயன்படுத்த வேண்டும்.
- பாத்திரத்தைச் சுத்தம் செய்ததும், எண்ணெய் தடவி வைக்க வேண்டும்.
- மரக் கரண்டியையும் லிக்விட் சோப் போட்டுத் தான் சுத்தம் செய்ய வேண்டும்.
- அதிகச் சூடுள்ள அடுப்பில் 'நொன்-ஸ்டிக்' பாத்திரத்தை வைக்காதீர்கள். இதை எப்போது உபயோகித்தாலும், 'சிம்'மில் வைத்தபடி தான் சமைக்க வேண்டும். இது வேலைக்கே ஆகாது என்று தோன்றினால், பாத்திரத்தை யாருக்காவது தானம் கொடுத்து விடவும்.




# நீங்கள் அழகாக ஜொலிக்க ஆசையா?

குமரிப் பருவம் என்கிற டீன் - ஏஜ் வயது இருக்கிறதே! எல்லாப் பெண்மணிகளும் கட்டான உடலை கட்டாயம் பாதுகாக்க வேண்டிய கால கட்டம் அது.

அன்றாட சாப்பாடு விஷயம் முதல் நடைமுறை வாழ்க்கை விஷயம் வரை திட்டமிட்டுச் செயல்படும் பெண்களால்



ஆரோக்கியம் பெற முடிகிறது. ஆரோக்கிய உடலால் வாழ்க்கையில் வெற்றி பெற முடிகிறது.

இதற்கு என்ன செய்ய வேண்டும்.

தினசரி வாழ்க்கையை



வரைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

காலை எழுந்ததும் குளிர்ந்த நீரில் முகம் கழுவி, வாய் கொப்பளித்து, ஒரு செம்பு நீராகாரம் அல்லது தண்ணீரைப் பருக வேண்டும்.

அடுத்த அரை மணி நேரத்தில் உடல் வியர்க்கும் படியாக ஏதாவது உடற் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன் பிறகு




குளித்து பூஜை முடித்து சாப்பிட வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் வயிறு முழுக்க சாப்பிட எண்ணக் கூடாது.

ஒரு நல்ல சாப்பாட்டு முறை என்பது 1/2 வயிற்று சாப்பாடு, 1/4 வயிற்றுத் தண்ணீர் 1/4 வயிறு காலி என்பதுதான். இதனைப் பழக்கிக் கொள்ள வேண்டும்.

அன்றாட உணவுப் பழக்கங்களில் நான்வெஜ், எண்ணெய் பலகாரம், இனிப்பு, காபி - டீ, குளிர் பானங்கள், கொழுப்பு பதார்த்தங்களை மிகமிகக் குறைத்துக் கொள்ளுங்கள்.

பச்சை காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை ஒதுக்கி விடாதீர்கள். அவைகள் இளமையைத் தருகின்றன. ஓடி ஆடி எவ்வளவு வேண்டுமானாலும் வேலை பார்க்கலாம். ஆனால் அவ்வப்போது சற்று ஓய்வு எடுக்கத் தயங்காதீர்கள்.




மதிய சாப்பாட்டுக்குப் பிறகும், மாலையில் சற்று நேரமும் கட்டாயம் ஓய்வு தேவை. இந்த ஓய்வு மன இறுக்கத்தைச் சரி செய்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கவலையை மறந்து இரவில் நிம்மதியாகப் படுக்கச் செல்லுங்கள்.

# மனைவிமார் கவனத்திற்கு!

திருமண வாழ்வின் இனிமையை முழுவதும் அனுபவிக்க பாலியல் தொடர்பான சில முக்கிய விஷயங்களைப் பெண்கள் தெரிந்துகொள்வது அவசியம்.

கணவன்மார்கள் எப்போதுமே அந்த சிந்தனையிலேயே இருந்து வருகிறார்கள் என்பது



பெரும்பாலான மனைவிமார்களின் குற்றச்சாட்டு. இதற்குக் காரணம் சில கணவர்கள் தங்கள் மனைவிகளிடம் அதை மட்டும் அதிகமாய் எதிர் பார்ப்பதுதான். தங்களிடமும், குழந்தைகளிடமும் அன்பாகப் பேசுவதில்லை; கவனிப்பதில்லை என்றும் மனைவிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆனால் ஒரு சில கணவர்கள் வேறு மாதிரி இருக்கிறார்கள். இவர்களிடம் சுத்தமாக 'செக்ஸ்' ஆர்வம் இருக்காது. எப்போதும் மனைவியை விட்டு விலகியே இருப்பார்கள். இதுவும் மனைவியர்களுக்கு வெறுப்பாகத்தான் இருக்கிறது.

இப்படிப்பட்ட கணவர்களை வசப்படுத்த மனைவிமார்கள் செய்ய வேண்டியதுதான் என்ன?

கணவன் ஆசையோடு அணைக்கும் போதெல்லாம் 'உங்களுக்கு எப்பவும் இதுவே வேலையா போச்சு!' என்று அலுத்துக்கொள்ளும் பெண்கள் கணிசமாகவே இருக்கிறார்கள்.

இந்த அலட்சியப் போக்குக்குக் காரணம் கணவன் தன்னை அணைக்கும் போதும், முத்தமிடும் போதும் அவர் அதற்குத்தான் முயற்சி செய்கிறார் என்று தவறாக நினைத்துக் கொள்வதுதான்.

பெண்கள் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆண்களுக்கு 'செக்ஸ்' தவர உடல் ரீதியான தேவைகள் இருக்கவே செய்கின்றன. மனைவியிடம் தனிமையில் பேச



வேண்டும். அவளுக்கு திடீரென முத்தமிட வேண்டும்...போன்ற ஆசைகள் கணவர்களுக்கு உண்டு. ஆனால் இந்த ஆசைக்கு பின்னால் இருப்பது 'செக்ஸ்'தான் என்று தவறாகப் புரிந்துகொள்கிறார்கள்.



அதனால் கணவர் நெருங்கும் போது படக்கென விலகுவது நல்லதல்ல. மென்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

சில கணவர்கள் அந்த விஷயத்தில் ஆர்வம் இல்லாமல் இருந்தால் பெண்களே முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும். இது தவறில்லை. அப்போதும் அவர் ஆர்வம் காட்டாவிட்டால் செக்சாலஜிஸ்டு நிபுணர்களிடம் சென்று ஆலோசனை கேட்கலாம்.

இதை விட்டு விட்டு போலியான மருத்துவர்கள் தருகிற லேகிய மருந்தை வாங்கி ஏமாந்து விடாதீர்கள். அவர்களால் ஆண் - பெண்களின் உடலில் உள்ள குறைபாடுகளை துல்லியமாகக் கண்டறிய முடியாது. எல்லோருக்குமே ஒரே வகையான லேகியத்தைக் கொடுக்கிறார்கள்.

ஒருவரின் மனநிலை எந்த அளவுக்குச் சரியாக உள்ளதோ அந்த அளவுக்கு அவரால் அந்த விஷயத்தில் இனிமையைப் பெற முடியும். இதற்கு கணவன் - மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்புடன் பழக வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

## ரொட்டி உப்புமா

***தேவையானவை :-***

ரொட்டி - 1 (முழு ரொட்டி)
மிளகாய் வற்றல் - சிறிது
எண்ணெய் -2 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு.

***செய்முறை :-***

ரொட்டியைச் சிறு சிறு துண்டுகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும். வாணலியை அடுப்பில் ஏற்றி எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும் கடுகைப்போட்டு மிளகாய் வற்றலைக் கிள்ளிப் போடவும். கடுகு வெடித்தவுடன் ரொட்டித் துண்டுகளைப் போட்டு, உப்பு கலந்த நீரை லேசாகத் தெளித்து வதக்கவும்.

# ஒரு தாய் மகள் 54

க்ளோவைப் பார்த்தேன். ரொம்ப வலியில் இருந்தாலும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தாள்" என்றவன், இரண்டு நாள் முன்பு பிலிப்பின் அப்பாவையும் அம்மாவையும் பார்த்தேன்" என்றான்.

பேஜின் நெஞ்சு வேதனையில் விண்டது. க்ளோ பிழைத்துக்கொண்டு விட்டாள். ஆலிஸனைப் பொறுத்தமட்டில் பிழைத்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையாவது இருக்கிறது. ஆனால் அந்தப் பையன் பிலிப்? போனவன் போனவன்தானே? அவனுடைய பெற்றோருக்கு எப்படி இருக்கும்?

பிலிப் குடித்திருந்ததால் விபத்து நேரிட்டிருக்கும் என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அவர்கள் மீது வழக்கு தொடரப் போவதாக பிலிப்பின் அப்பா சொன்னார்" என்று சொல்லிவிட்டு அவர்களுடன் சேர்ந்து ஆஸ்பத்திரி கேன்ட்டீனில் சிற்றுண்டி அருந்தியபின் ஜேமி புறப்பட்டுச் சென்றான்.

அன்று இரவு பிராட் வீடு திரும்பவில்லை.

காலை, அம்மாவை அழைத்து வருவதற்காக விமான நிலையத்துக்கு ஆண்டியுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் பேஜ். அப்போதுதான் பிராட் வந்தான்.

"ஸாரி பேஜ்" என்று அவன் ஆரம்பித்ததுமே கோபம் வெடித்துக் கொண்டு வந்தது அவளுக்கு.

"ஆலி இருக்கிறாளா, போய் விட்டாளா?" என்று போன் செய்து கேட்கக் கூட உங்களால் முடியவில்லை? இல்லையா?

"ஏன்... ஆலிஸனுக்கு....என்ன நேரிட்டது?" என்றான் கரகரத்த குரலில்.

"ஒன்றும் நேரவில்லை. ஆனால் ஏதாவது நேர்ந்திருந்தால் உங்களை எங்கே கூப்பிடுவது? நீங்கள்தான்...."

"மூடு வாயை!" என்று கூறித் தன் அறைக் குள் சென்றவன் மடேலென்று கதவைச் சாத்திக் கொண்டு விட்டான்.

ஆண்டியுடன் விமான நிலையத்துக்குப் புறப்பட்டாள் அவள். ஆண்டியின் கன்னங்களில் கண்ணீரின் சுவடு படிந்திருந்தது. அம்மாவும் அப்பாவும் இப்படிச் சண்டை போட்டுக் கொள்வதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"ஸாரி கண்ணா" என்று அவன் முகத்தைத் துடைத்து விட்டாள் பேஜ். ஆனால் வழி பூரா அவன் பேசவேயில்லை.

வண்டி வண்டியான பெட்டிகளுடன் வந்து இறங்கினார்கள் அம்மாவும் அக்கா அலெக்ஸிஸும் அவைகளை வெளியே கொண்டு போய்க் காரில் வைக்கப் போர்ட்டர்களே திணறிப் போனார்கள்.

எக்கச்சக்கமாக மேக்கப்பில் இருந்தாள் அலெக்ஸிஸ். எப்போதுமே இளமையாக இருப்பது ஒன்றுதான் அவளுக்கு லட்சியம். அம்மாவோ, நியூயோர்க்கில் பருவநிலை பிரமாதமாக இருப்பதைப் பற்றியும் அலெக்ஸிஸின் அபார்ட்மென்டை அழகுபடுத்திக் கொண்டிருப்பதைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தாள்.

ஆலிஸன் எப்படி இருக்கிறாள்? என்று ஒரே ஒரு தடவை கேட்டாள் அலெக்ஸிஸ், அவள் கோமாவில் கிடப்பதைப் பற்றிப் பேஜ் விவரமாகச் சொல்ல ஆரம்பித்தவுடனே, அம்மா ஆண்டியிடம் கொஞ்சுகிற மாதிரி பேச்சைத் திருப்பி விட்டாள். சந்தோஷமான விஷயங்களைப் பற்றி மட்டுமே கேட்க அவளுக்குப் பிடிக்கும்.

சின்ன வயதில் இவர்களால் அனுபவித்த நரகங்களை மறந்துவிட்டு, இவர்கள் மாறியிருப்பார்கள் என்று ஏன்தான் எதிர்பார்க்கிறோமோ என்று பேஜ் தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

வீட்டில் அவர்களுக்காக பிராட் காத்திருந்தான். பேஜுக்கே அவன் செய்கை ஆச்சரியமாக இருந்தது. அவர்களுடைய பெட்டிகளை உள்ளே கொண்டு போய் வைத்து, மரியாதையாகக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு வெளியே போய்விட்டான்.

அம்மாவும் அக்காவும் தங்கள் பெட்டிகளைப் பிரிப்பதும் மூடுவதும் சமையலறையில் இருப்பதை எடுத்துச் சாப்பிடுவதுமாக இருந்தார்கள். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மணி நாலரை. அன்று பூரா ஆஸ்பத்திரிக்குப் போகவில்லையாகையால் உடனே கிளம்பத் துடித்தாள் பேஜ். ஆனால் இவர்கள் புறப்படுகிற வழியாய்த் தெரியவில்லை.

கைக் கடிகாரத்தைப் பார்த்தபடி, "என்னம்மா, ஆஸ்பத்திரிக்குப் புறப்பட நேரமாகிறதே?" என்றாள் கடைசியில்.

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

அம்மாவும் மூத்த மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஒரே களைப்பாக இருக்கிறது எனக்கு. அலெக்ஸிஸுக்கு வேறே கடுமையான ஜல தோஷம். நாங்கள் நாளைக் காலை வருகிறோமே?" என்றாள் அம்மா.

தனியாகவே ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள் பேஜ், நொந்துபோன மனத்துடன்.

ஆலிஸனைப் பார்ப்பதற்காகத்தான் அம்மாவும் அக்காவும் வந்திருப்பதாக நினைத்தது எத்தனை முட்டாள் தனம்! நியூயார்க்கில் அவர்களுக்குப் பொழுது போகவில்லை. எங்காவது ஊர் சுற்ற வேண்டும். அதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரி, அதன் கோரம், நாற்றம் இதெல்லாம் அவர்களுக்குப் பிடிக்காது.

சே! என்ன மனிதர்கள்! சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. ஆலிஸன் கோமாவில் கிடக்கிறாள். பிராட் கள்ளக் காதலியுடன் சுற்றுகிறான். ஆண்டி கையை முறித்துக் கொண்டிருக்கிறான். அம்மாவும் அக்காவும் வந்து கொட்டமடிக்கிறார்கள்.

ஆலிஸனின் அருகே ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்தாள். வழக்கம்போல பேசினாள்.

"நியூயார்க்கிலிருந்து உன் பாட்டி வந்திருக்கிறாள் ஆலி. கூடவே உன் பெரியம்மா அலெக்ஸிஸும் வந்திருக்கிறாள். நாளைக்கு வந்து உன்னைப் பார்ப்பதாகச் சொன்னார்கள்." என்று தன் பாட்டுக்குப் பேசிக் கொண்டே போனாள். ஆண்டியின் பள்ளிக்கூட அனுபவங்கள், அவன் சொன்ன விஷயங்கள், இன்னும் தனக்குத் தோன்றியதையெல்லாம் ஆலிஸனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லவில்லை - கணவன் செய்யும் துரோகத்தையும், குடும்பம் இரண்டாகப் பிளந்து கொண்டிருப்பதையும் பற்றி.

மகளின் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டுவிட்டு, அவளையே பார்த்தபடி ஒரு நிமிடம் நின்றிருந்து விட்டு வீடு திரும்பிய போது, அம்மாவும் அலெக்ஸிஸும் சளசள வென்று அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆலிஸன் எப்படி இருக்கிறாள் என்று இருவரும் ஒருவார்த்தை கூடக் கேட்கவில்லை. ஆண்டிதான், "ஆலி எப்படிம்மா இருக்கிறாள்?" என்று கேட்டான்.

அதற்குள் பேஜின் அம்மா குறுக்கிட்டு, "எல்லாம் சரியாகி விடும்டா. கவலைப் படாதே. நீ போய்த் தூங்கு" என்று கூறி அவளை அனுப்பி விட்டாள்.

(தாய் தொடர்வாள்.....)




**சென்ற வாரம்**

பிராட் பேஜினை முன் போல் இரவு வேளைகளில் அணுக முடியவில்லை. என்று மிகவும் கோபப்பட்டவனாக ஸ்டிபானியிடம் சென்று விடுகிறான். பின் தாரென்ஸன் பேஜுக்கு போன் செய்து அவளையும் மகன் ஆண்டியையும் அழைத்து வரும்படி கூறுகிறான். பேஜும், தாரென்ஸனும் ஆஸ்பத்திரிக்கு ஆலிஸனைப் பார்க்கப் போகிறார்கள். ஆலிஸன் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறாள்.

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்

**13**



அந்தத் தரையோடும் விமானத்துக்குள் தமிழோடு பயணிக்கும் சுகமே சுகம்!

பாட்டுக்குள் இல்லாத போதையா பாட்டிலுக்குள் இருக்கிறது?

பழைய பாடலில் அப்படி என்ன மயக்கம்? என்றார் வீரா.

மூன்று காரணங்கள் என்றேன்.

முதல் காரணம்: காலத்தால் வடிகட்டப்பட்ட நல்ல பாடல்கள் மட்டுமே உங்கள் காதுகளில் தங்குகின்றன.

இரண்டாவது காரணம்: தமிழை ருசிப்பதற்கு இசையும், இசையை ரசிப்பதற்குத் தமிழும் ஒன்றுக் கொன்று உதவி செய்திருக்கின்றன.

மூன்றாம் காரணம் தான் முக்கியமான காரணம்.

ஒரு மனிதன் தன்னுடைய பதின்பருவத்தில் (டீன் ஏஜ்) காதலுற்றுக் கிடந்த காலங்களில் எந்தெந்தப் பாடல்களை ரசித்தானோ அந்தந்தப் பாடல்களே அவன் வாழ்வோடு கலந்து விடுகின்றன. பழைய கனவுகளின் கற்பனா சுகங்களுக்காவே பழைய பாடல்கள் காதலிக்கப் படுகின்றன.

கொஞ்ச நேரம் காருக்குள் மௌனம் நிலவியது.

எல்லோரும் தங்கள் பழைய காதலிகளோடு வாழப் போய் விட்டதாய்த் தோன்றியது.

ஸ்காட்லாந்துக்குள் புகுந்து எடின்பர்க் சென்று தேநீரும் ரொட்டியும் அருந்திவிட்டு எடின்பர்க்கின் பழைமையான





தெருக்களில் கல்யாண ஊர்வலம் போல் கார் நகர்த்திச் சுற்றிப் பார்த்து ஏரி மாவட்டம் திரும்பி விடுதி அடைந்தோம் இரவில்.

பறவைகளின் பின்னணி ஓசையோடு விடிந்த அதிகாலையில் அந்த ஏரிக் கரையில் சயனித்திருந்த சௌந்தர்யத்தை என்ன சொல்ல!

மெல்லிய பனிமூட்டத்திற்கு மத்தியில் மேகங்களை அரைகுறையாய் இழுத்துப் போர்த்தியபடி இன்னும் உறங்கிக் கிடந்தது ஏரி.

பூமிப் பள்ளத்தில் ஊற்றி வைக்கப்பட்ட ஒயின் மாதிரி இருந்தது அது.

அன்னமும் வாத்தும் கூடிப்பெற்ற ஜீவன்களைப் போல் பெயர் தெரியாத சில பறவைகள் கரையோரமாய்ப் பொடிநடை பொய்க் கொண்டிருநதன.

இந்த ஏரிக்கரையில்தானே வில்லியம் வேர்ட்ஸ் வொர்த் ஓர் ஒற்றை மேகமாய் உலவித் திரிந்திருப்பார்? இந்த மலைகளும் குன்றுகளும் தாமே அவர் ஆடிய தொட்டில்கள்.. ஊஞ்சல்கள்...

அவர் எழுதிய உலகப் புகழ் பெற்ற டே..படில்ஸ் மலர்களை இந்தக் குன்றுகளில் ஒன்றுதானே பூத்துக் கொடுத்திருக்கக் கூடும்.

அலையும் குரல் (Wandering voice) என்று அவர் பாடிய குயிலுக்கு இங்கிருக்கும் ஏதோ ஒரு மரம்தானே கூடுகட்டிக் கொடுத்திருக்க முடியும்!

அவரது ஊன்றுகோல் சத்தங்கள் எந்தெந்த சாலைகளில் ஒலித்தனவோ! எந்தெந்த முகடுகளில் எதிரொலித்தனவோ!

இடமும் காலமும் மொழியும் மாறிக் கிடந்தாலும் இருதயத்தின் குழைவால் ஒன்றுபட்டவர்கள்தானே படைப்பாளிகள்.

232 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து, 200 ஆண்டுகளுக்கு முன்பு எந்தப் பிரதேசத்தில் ஒரு பெருங்கவிஞர் அங்குலம் அங்குலமாய் அளந்து நடந்தாரோ அந்தப் பிரதேசத்தில் நான் நின்று கொண்டிருக்கிறேன் என்றும் மெல்லிய பரவசம் என் உடம்பில் ஊறுவது தெரிந்தது.

வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் வாழ்ந்த வீட்டை அதன் தடமும் தடயங்களும் மாறாமல் பாதுகாக்கின்றார்கள்.

அவரது படுக்கையறையிலும் வரவேற்பறையிலும் உட்கார்ந்து பார்த்தால் ஜன்னலுக்கு வெளியே கூப்பிடு தூரத்தில் நிற்கின்றன குன்றுகளும் பள்ளத்தாக்குகளும்.





அந்த வீடு வில்லியம் வேர்ட்ஸ் வொர்தின் நினைவகமாக மட்டு மல்லாமல் அவரது சமகாலக் கவிஞர்களின் நினைவாகமாகவும் நீண்டு நிற்கிறது.

ஒரு கண்ணாடிப் பேழை.. உள்ளே.. வேர்ட்ஸ்வொர்த் அணிந்திருந்த உடைகள் - ஊன்றுகோல் - காலுறைகள் - பயன்படுத்திய சில பொருட்கள் - கையெழுத்துப் பிரதிகள் - அத்தனையும் கலாபூர்வமாகக் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

வெளியே வந்து வேர்ட்ஸ்வொர்ததின் வீட்டுத் தோட்டம் பார்த்தால் வியப்பு - மகிழ்ச்சி.


கவிஞன் பாடியதால் புகழ்பெற்ற... கவிஞனுக்கும் புகழ் கொடுத்த டே..படில்ஸ் மலர்கள் மஞ்சள் குளித்துச் சிரித்தன - பச்சைப் புல்வெளியில்.

ஓடிப்போய் உட்கார்ந்து ஆசையோடு தொட்டுத் தொட்டுப் பார்த்தேன் - வேர்ட்ஸ் வொர்த்தோடு கை குலுக்கும் களிப்போடு.

(தொடரும்...)

வைரமுத்து

# இலங்கை அழகு



இது வெளிநாடுகளில் இடம் பெற்ற அழகு ராணிப் போட்டியல்ல! இலங்கையில் ஹில்டன் ஹோட்டலில் அண்மையில் நடந்த Miss Sri Lanka World 2005 போட்டியில் முதல் மூன்று இடங்களை முறையே நதீக்கா பெரேரா, ஒலிவியா ஜேம்ஸ், பர்னி சூரியஆராச்சி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இப் போட்டியில் மொத்தம் 11 அழகிகள் கலந்து கொண்டனர்.

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## பரம்:


02



11



1999



**நடராஜா - அற்புதராஜா**
**(அற்புதன்)**
**இகம்:- 16-09-1963**
**தினமுரசு ஸ்தாபகரும் ஆசிரியரும்**

**தர்மராஜா - அஜந்தகுமார்**
**(ராசன்)**
**இகம்:- 05-12-1962**

**அற்புதனே! தூரநோக்கும் தீர்க்க தரிசனமும் உங்களுக்கு ஆண்டவன் கொடுத்த கொடை. தமிழ் பேசும் மக்களுக்காகப் பேனை தூக்கிப் போராடிய பெரும் போராளியான உங்களின் பாதையில் வீறு கொண்டு பயணிக்கும் முரசின் ஊழியர்களும் வாசகர்களும் என்றும் உங்கள் நினைவுகளை ஏந்தி நிற்போம்**

*முரசு ஆசிரிய பீடமும், ஊழியர்களும்*

**தினமுரசு ஸ்தாபக ஆசிரியர் அற்புதன் அவர்கள் 94ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 74ஆவது முரசில் வரைந்த ஆசிரியர் தலையங்கத்தின் ஒருபகுதியை நெருக்கடி மிகுந்த சமகாலத்தை கருத்தில் கொண்டு மீள் மீட்டல் செய்கின்றோம். அதுவும் ஜனாதிபதி தேர்தல் காலம் தீபாவளியும் கூட, தற்போது 2005ஆம் ஆண்டு அதே ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தலும் தீபாவளியும் ஒரேயொரு வித்தியாசம் - வேட்பாளர் சந்திரிக்காவிற்கு பதில் மஹிந்த.**

முதலில் பாராட்டவேண்டிய இரு விசயங்கள் இருக்கின்றன. ஒன்று : பிரதமர் சந்திரிகா அவர்கள் பி.பி.சி.க்கு வழங்கிய மனம் திறந்த சிறந்த பேட்டி. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் அப்படியொரு பேட்டியை வழங்க நிரம்பத் துணிச்சல் வேண்டும். இரண்டுமே நமது பிரதமரிடம் நிறைந்திருப்பதை வரவேற்கவே வேண்டும். இன்றைய கால கட்டத்திற்குரிய காத்திரமான சிந்தனைப் போக்கு பிரதமரின் பேட்டியில் வெளிப்பட்டிருக்கிறது. இனப் பிரச்சினையே இல்லை என்ற இங்குதவாப் பேச்சைக் கேட்டு வெறுப்புற்ற தமிழ் பேசும் மக்களுக்கு பிரதமரின் பேச்சு பேருவகை தரும்.

அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்களே அதிக முக்கியத்துவம் கொடுக்க சற்றுத் தயங்குமளவுக்கு பிரதமரின் பேட்டியில் வெளிப்படையான கருத்துக்கள் அதிகம்.

வாக்குகளைப் பற்றி மட்டுமே சிந்திப்பவராக இருந்திருந்தால் இழப்புக்களை சந்திக்க வேண்டி வருமே என்று பட்டும் படாமல் பதில் சொல்லியிருப்பார்.

படையினர் பற்றிய கேள்விகளுக்கும் மனதில் பட்டதை சொல்லியிருக்கமாட்டார்.

தீர்வு முயற்சிகள் மனம் திறந்த போக்கே முக்கியம். அது பிரதமரிடம் இருப்பது நம்பிக்கை தருகிறது; எதிர்பார்க்க வைக்கிறது.

நமது தலைமுறைக்கு மட்டுமின்றி நாளைய தலைமுறைக்கும் நாம் விட்டுச் செல்லக்கூடிய மிகப் பெறுமதியான சொத்து நிலையான - கௌரவமான சமாதானமே. அதனை நோக்கிய பாதையில் பிரதமர் உறுதியோடு நடந்தால் இன்றைய உறுதி தொடர்ந்தால் தோள் கொடுத்து துணை நிற்பது நம்மனைவரதும் கடமையாகும்.

முன்கூட்டியே முரசின் தீபாவளி வாழ்த்துக்கள்! எப்போதும் பண்டிகை வரும் பின்னே முரசின் வாழ்த்துவரும் முன்னே என்பதே வழக்கமாகிவிட்டதல்லவா?




**நாட்டுக்கோட்டை நகரத்தார்**
**புதிய கதிரேசன் கோவில், பம்பலப்பிட்டி.**

**கந்தசஷ்டி விரதபூஜை**

*முருகப் பெருமான் அடியார்களே!*

மூத்தவனின் சகோதரனும் முக்கண்ணனின் இளையோனுமாகிய முருகப்பெருமானுக்குரிய விரதங்களில் முக்கியமானது கந்தசஷ்டி விரதமாகும். ஐப்பசி மாத அமாவாசையை அடுத்துவரும் பிரதமையில் விரதத்தை ஆரம்பித்து சஷ்டியில் பூர்த்தி செய்து, மறுநாள் காலை பாரனை பண்னுதலே கந்தசஷ்டி விரதமாகும். மேற்படி ஆலயத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் வண்ணம் பூஜைகள் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

***02.11.2005 புதன்கிழமை தொடக்கம் 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை வரை*** தினமும் காலை 6.30 மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேட நவகலச அபிஷேகமும் 7.35 மணிக்கு பூஜையும் 8.30க்கு கந்தபுராண யுத்தகாண்டப் படிப்பும் நடைபெறும். மாலை 5.00 மணிக்கு அபிஷேகமும் 6.00 மணிக்கு பூஜையும் நடைபெறும்.

***06.11.2005 ஞாயிற்றுக்கிழமை*** மாலை 5.30 மணிக்கு சூரன் புறப்பாடு நடைபெறும்.

***07.11.2005 திங்கட்கிழமை*** காலை 6.30 மணிக்கு பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவிலிலிருந்து பாற்குட பவனி புறப்பட்டு 7.00 மணிக்கு ஆலயத்தை வந்தடையும். மாலை 4.45 மணிக்கு சூரசம்காரம் நடைபெற்று 6.15க்கு பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும்.

***08.11.2005 செவ்வாய்கிழமை*** காலை 7.30 மணிக்கு பாரணைப் பூஜையும் 10.30 மணிக்கு முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேகமும் நடைபெறும் மாலை 6.00 மணிக்கு தெய்வானை திருமணத்தைத் தொடர்ந்து திருவிழாவும் நடைபெறும்.

***09.11.2005 புதன்கிழமை*** மாலை 4.30 மணிக்கு அபிஷேகமும், வள்ளி திருமணமும் தொடர்ந்து திருவிழாவும் நடைபெறும்.

***10.11.2005 வியாழக்கிழமை*** மாலை 4.30 மணிக்கு அபிஷேகமும் அதைத் தொடர்ந்து திருஊஞ்சலும் நடைபெறும்.

***11.11.2005 வெள்ளிக்கிழமை*** காலை 6.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் மாலை 6.00 மணிக்கு இடும்பன் பூஜையும் நடைபெறும்.

**கந்தசஷ்டி விரத சங்கல்பம் செய்வோர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**
**அபிஷேகத்திற்கு வேண்டிய பால், தயிர், இளநீர், பழவகை போன்ற திரவியங்களையும் தாமரைப் பூ, மலர்மாலையையும் கொடுத்து முருகப் பெருமானின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.**

*"அமரர் இடர் தீர அமரம் புரிந்த குமரன் அடிநெஞ்சே குறி"*

இங்ஙனம்
நாட்டுக்கோட்டை நகரத்தார்

# ரூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## திம்பு மாநாட்டிலிருந்து தமிழர் பிரதிநிதிகள் வெளிநடப்பு

ரொமேஷ் பண்டரியின் Bloody Hell என்ற வார்த்தை ரெலோ இயக்கப் பிரதிநிதி நடேசன் சத்தியேந்திராவை ஆத்திரப்படுத்தியது. தமிழ் மக்களின் பொதுவான விடயங்களை விடுத்து பிரச்சினைக்குரிய குறிப்பிடத்தக்க விடயங்களை முன்வைக்குமாறு ரொமேஷ் பண்டாரி குறிப்பிட்டபோது, கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் சொன்னார். What the Bloody Hell, Are we to do with these Generalisations? என்று பண்டாரி குறிப்பிட்டார். What the Bloody Hell என்ற வார்த்தையைப் பயன்படுத்தியது பிழையானது, சம்பிரதாயப்பூர்வமற்றது என்று முன்னணி வழக்கறிஞரான நடேசன் சத்தியேந்திரா, ரொமேஷ் பண்டாரியைப் பார்த்துக் கூறினார். இந்த வார்த்தைப் பிரயோகம் இலங்கைத் தமிழர் குறித்து இந்தியா கொண்டிருக்கும் அகௌரவமான மனோபாவத்தை எடுத்துக் காட்டுவதாக சத்தியேந்திரா கூறினார். தான் தமிழ் மக்களை அவமதிக்கும் நோக்கில் அந்த வார்த்தையைக் கூறவில்லையென்று பண்டாரி உடனடியாகவே பதிலளித்தார். ஆனால் சத்தியேந்திரா விட்டுக் கொடுப்பதாக இல்லை. இந்த வார்த்தைகள் இந்தியாவின் மனோபாவத்தை எடுத்துக்காட்டுவதாகவும் வேலையாட்களைப் பார்த்து என்னசெய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாதென்று எஜமானர்கள் வார்த்தைகளைப் பிரயோகிப்பதைப் போன்று ரொமேஷ் பண்டாரியின் வார்த்தைகள் அமைந்திருப்பதாகவும் சத்தியேந்திரா மீண்டும் உரத்தக் குரலில் கூறினார்.

# 35 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

இந்த வாக்குவாதம் அமிர்தலிங்கத்திற்கு எரிச்சலூட்டியது. பெரும் வீரப் பிரதாபப் பேச்சுக்களை நிறுத்துமாறு சந்தியேந்திராவைப் பார்த்து அமிர்தலிங்கம் கூறினார். பண்டாரியிடம் மன்னிப்புக் கேட்குமாறு தமிழீழ இயக்கங்களின் பிரதிநிதிகளை அமிர்தலிங்கம் வற்புறுத்தினார். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண பண்டாரி எடுக்கும் முயற்சிகளுக்கு இலங்கைத்

**இந்த வாக்குவாதம் அமிர்தலிங்கத்திற்கு எரிச்ச லூட்டியது. பெரும் வீரப் பிரதாபப் பேச்சுக்களை நிறுத்து மாறு சந்தியேந்திராவைப் பார்த்து அமிர்தலிங்கம் கூறினார். பண்டாரியிடம் மன்னிப்புக் கேட்குமாறு தமிழீழ இயக்கங்களின் பிரதிநிதிகளை அமிர்தலிங்கம் வற்புறுத்தினார். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண பண்டாரி எடுக்கும் முயற்சிகளுக்கு இலங்கைத் தமிழர்கள் நன்றிக் கடன்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று அமிர்தலிங்கம் கூறினார்.**

தமிழர்கள் நன்றிக் கடன்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று அமிர்தலிங்கம் கூறினார்.

இலங்கை அரசுப் பிரதிநிதிகளும் தமிழர் தரப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பத்திலிருந்து குழப்பமானதாக

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

விருந்தது. அந்த மாநாட்டில் எட்டப்படும் எந்தவொரு இணக்கப்பாடும், தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே அமுல்படுத்தப்படுமென்று எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனா கூறினார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள எவ்வித உரிமையுமில்லையென்றும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பங்குபற்ற ஈழதேசிய விடுதலை முன்னணிக்கே உரிமையுண்டெனவும் அவர் வாதிட்டார். இவ்வாறு குழப்ப சூழ்நிலை தோன்றியிருந்த வேளையில் வவுனியாவுக்கு அண்மையில் சுமார் 200 தமிழ் மக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட செய்தி தமிழர் தரப்புப் பிரதிநிதிகளுக்கு எட்டியது.

*(அரசியல் தொடர்)*

இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகக் கூறி தீவிரவாத இயக்கப் பிரதிநிதிகள் மாநாட்டு மண்டபத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளும் மாநாட்டை விட்டு வெளியேறினர். இதற்கிடையில் திருகோணமலையிலும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட தகவலும் வந்து சேர்ந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிடுவதாக தமிழீழ இயக்கங்கள் அறிவித்தன.

திம்புப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது குறித்து ராஜீவ் காந்தி ஏமாற்றமடைந்தார். இதனையடுத்து இந்தியா அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த புதுடில்லிக்கு வருமாறு பிரதமர் ராஜீவ் காந்தி, எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனாவுக்கு அழைப்பு விடுத்தார். இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இரு தரப்பினரின் இணக்கத்தின் பேரில் செயற்பட்டு ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டது. எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையைத் தயாரிப்பதற்காகவே இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது. 'இணக்கம் மற்றும் புரிந்துணர்வுக்கான நகல் வரைபு முறை ஏற்பாடுகள்' என்று இந்த ஆவணம் அழைக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி இந்த நகல் வரைபில் இருதரப்புகளும் கைச்சாத்திட்டன. ஏற்கனவே பின்னிணைப்பு-சி உடன்பாட்டை இலங்கை தரப்பு மீறியதாக இந்தியா அதிருப்தி கொண்டிருந்தது. எனவே இப்புதிய நகல் வரைபின் ஒவ்வொரு பக்கத்திலும் கைச்சாத்திடுமாறு எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனாவை இந்தியா கேட்டுக்கொண்டது. இந்தியாவின் பலத்த வற்புறுத்தலுக்குப் பின்னரே இவ்வாறு கைச்சாத்திட எச்.டபிள்யூ.இணக்கம் தெரிவித்தார். இந்திய அரசாங்கத்தின் சார்பில் ரொமேஷ் பண்டாரி இப் பத்திரங்களில் கைச்சாத்திட்டார். 'பின்னிணைப்பு - சி' யில் இணக்கம் காணப்பட்ட யோசனைக்கு மேலதிகமான சில அம்சங்கள் புதிய வரைபில் சேர்க்கப்பட்டிருந்தன. அதிகாரப் பகிர்வின் அடிப்படை அலகாக மாகாணங்கள் வரையறுக்கப்பட்டன. மாகாணங்களுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அதிகரிப்புகளும் காணப்பட்டன. தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பாதிக்கும் சட்டங்கள் உருவாக்கப்படுவதைத் தடுப்பதற்காக அரசியல் அமைப்பின்படி தமிழ் பேசும் எம்.பி.க்களைக் கொண்ட கமிட்டியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இந்தப் புதிய வரைபில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த தமிழ் எம்.பி.க்களைக் கொண்ட கமிட்டியின் அங்கீகாரமின்றி எவ்வித சட்ட ஏற்பாடுகளும் செய்யக் கூடாதென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது குறித்து இந்தச் செயற்பாட்டு ஆவணத்தில் எதுவும் கூறப்படவில்லை. பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதென இந்த ஆவணத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. சட்டம், ஒழுங்கு விடயங்கள் மாகாண சபைகளுக்குட்பட்டிருந்த போதிலும் மாகாண பொலிஸ் அதிகாரிகள், தேசிய பொலிஸ் சேவையின் கீழ் கொண்டுவரப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தேசியக் கொள்கைகளை வகுக்கும் அதிகாரமும் அதன் வழிகாட்டல்களும் மத்திய அரசிடமே இருக்குமென்றும் கூறப்பட்டது. காணி, மற்றும் குடியேற்றங்கள் தொடர்பான விடயங்கள் குறித்து தெளிவாக ஏதும் குறிப்பிடப்படவில்லை. மாகாண அலகுகளுக்கும் முதலமைச்சருக்குமிடையிலான தொடர்புகள் குறித்தும் நீதிமன்றங்களுக்கும் அவற்றோடு சம்பந்தப்பட்ட அமைப்புக்களுக்குமிடையிலான தொடர்புகள் குறித்தும் எதுவும் தெளிவாகக் கூறப்படவில்லை.

தமிழ் குழுக்களைப் பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி ராஜீவ் காந்தி அழைத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் இயக்கமும் மட்டுமே இதனை ஏற்றுக்கொண்டன. ராஜீவ் காந்தியைச் சந்தித்த அமிர்தலிங்கத்தின் தலைமையிலான கூட்டணி தூதுகோஷ்டி, செயற்பாட்டு ஆவணத்தில் பல குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டியது. எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் இவை நிவர்த்திச் செய்யப்படலாமென்று ராஜீவ் காந்தி உறுதியளித்தார். இதற்கிடையில் பிரபாகரனும் ரெலோ இயக்கத்தலைவர் ஸ்ரீசபாரத்தினமும் தலைமறைவானார்கள். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் இந்திய சார்பு நிலைப்பாட்டை எடுத்ததாக ரெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீ. சபாரத்தினம் சந்தேகமும் ஆத்திரமும் கொண்டார். இதனால் பருத்தித்துறை எம்.பி., கே.துரைரத்தினம், உடுப்பிட்டி எம்.பி.ராஜலிங்கம், மானிப்பாய் எம்.பி., வி.தர்மலிங்கம், கோப்பாய் எம்.பி. ஆலாலசுந்தரம் ஆகியோரைச் சுட்டுக் கொல்லுமாறு ஸ்ரீ.சபாரத்தினம் உத்தரவிட்டார். அப்போது வடமராட்சியில் ரெலோ இயக்கத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் சபாரத்தினத்தின் உத்தரவை ஏற்க மறுத்தார். இதனால் துரைரத்தினமும் இராஜலிங்கமும் உயிர் தப்பினர். ஆலாலசுந்தரமும், தர்மலிங்கமும் ரெலோ இயக்கத்தினராலேயே 1985ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆலாலசுந்தரத்தின் சடலம் கல்வியன்காட்டிலும் தர்மலிங்கத்தின் சடலம் தாவடி மயானத்திற்கு அருகிலுள்ள வயல்வெளியிலும் 3ஆம் திகதி அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டன.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை



**அங்கம் 24**

**அடுத்த நாள் காலையில் இரவு சம்பவம் நடந்த இடத்தை நோட்டமிட்ட குமார் அங்கு இரத்தம் காய்ந்து கிடப்பதைகக் கண்டார். மதியம் பிரபாகரன் போன் செய்து உடனே ஊருக்கு புறப்பட்டு வரும்படி சொல்கிறான். பிரின்ஸிபாலுக்கு லீவு லெட்டர் கொடுத்து விட்டு குமார் ஊருக்கு புறப்படுகிறார்.**

பஸ்ஸிலிருந்து இறங்கும்போது மணி ஆறரைக்கு மேலாகி விட்டிருந்தது. பகல் குறைவாக இருந்த பருவமாக இருந்ததால் அதற்குள் சூரியன் மறைந்து விட்டிருந்தது.

பிரபாகரன் அவரை எதிர்பார்த்து பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தான். குமாரைப் பார்த்தவுடன் அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

"என்ன பிரபாகரன், நான் போன பிறகு விசேஷமாக ஏதாவது நடந்ததா?" - குமார் கேட்டார்.

"இருக்கு! அதைப்பத்திச் சொல்றதுக்காகத்தான் போன் செஞ்சேன். முதல்ல நாம வீட்டுக்குப் போயிடலாம். அங்க வச்சுப் பேசிக்கிறதுதான் நல்லது" - பிரபாகரன் கூறினான்.

இருவரும் பிரபாகரனின் வீட்டை நோக்கி நடந்தனர். குமார் வரும் செய்தி தெரிந்திருந்ததால் சாப்பாடு தயாராக இருந்தது.

"உடனடியாக சாப்பாட்டை முடிச்சுட்டு உங்க இல்லத்துக்கே

**எழுதுவது சிவன்**

போயிடலாம். மத்த விவரங்களை நிம்மதியா உட்கார்ந்து அங்கேயே பேசிக்கலாம்" - பிரபாகரன் யோசனை கூறினான்.

குமார் ஒப்புக்கொண்டார்.

அவர்கள் இல்லத்தை அடைந்தபோது மணி ஒன்பதுக்கு மேல் ஆகியிருந்தது.

பிரபாகரன் முன்கூட்டியே நில விளக்கில் எண்ணெய் ஊற்றி, பூஜையறை வாசலில் வைத்திருந்தான். ஆனால், கதவைத் திறந்ததும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. யாரோ விளக்கேற்றியிருக்கிறார்கள். பிரபாகரனுக்கு இது வியப்பையே அளித்தது.

"யார் விளக்கை ஏற்றியிருப்பார்கள்?" குமார் கேட்டார்.

"வீட்டுக்குள்ள வேறு யாரும் வந்து விளக்கேத்த வழியில்லை. யோசிக்கலாம்" - பிரபாகரன் வீட்டுக்குள் நுழைந்தபடியே பேசினான்.

அவர்கள் வரந்தாவுக்கு வந்தபோது அருகிலிருந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு இளம்பெண் ஒருத்தி வெளிப்பட்டாள்.

"யாரும்மா நீ? எனக்கு அடையாளம் தெரியலையே?



ஆமா, இங்க என்ன செய்யுறே?" குமார் கேட்டார்.

"நிஜமாவா உங்களுக்கு என்னைத் தெரியலை. நானும் உங்க காலேஜிலதான் சார் படிக்கிறேன். பேரு ரேணுகா. பி.எஸ்ஸி. செகண்ட்இயர் படிக்கிறேன். பக்கத்துலதான் எங்க வீடு. எங்க அப்பாவுக்கும் உங்களை நல்லாவே தெரியும். அப்பா பேரு சங்கரன் நம்பூதிரி!" - மிகவும் பழக்கப்பட்டவர்களைப் போல் பேசினாள்.

"சங்கரன் நம்பூதிரியா? அவரை எனக்கு ரொம்பவும் நல்லாவே தெரியும். ஆனா, அவருக்கு இந்த வயசில ஒரு பொண்ணு இருக்கிறது தெரியாதே" குமார் சந்தேகத்துடன் அவளைப் பார்த்தார்.

"நான் சொல்றதெல்லாம் உண்மைதான் சார்!" - அவளது குரல் உறுதியாக ஒலித்தது.

"சரி, நானும் ஒப்புக்கிறேன். அப்படியே இருந்தாலும் இந்த நேரம்கெட்ட நேரத்துல, அதுவும் முன்பின் தெரியாத இந்த வீட்டுக்கு எதுக்காக வந்திருக்கிறே ரேணுகா?" - குமார் கேட்டார்.

"என்னை வரச் சொல்லியனுப்பினாங்க!" அவள் மெதுவான குரலில் பேசினாள்.

"யார் சொல்லியனுப்பினது?" - குமார் சந்தேகம் மாறாதவராகக் கேட்டார்.

"சௌபர்ணிகா!"

"என்ன சௌபர்ணிகாவா?" - குமாரின் கண்ணிமைகள் சட்டென்று சுருங்கின.

ஆனால், எதுவும் புரியாத பிரபாகரன் ஒன்றும் பேச முடியாமல் வியப்புடன் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீங்க பயப்படத் தேவையில்லை, உங்களுக்குத் தொல்லை கொடுக்கிறதுக்காக நான் இங்க வரலை. நல்லதுக்காகத்தான் வந்திருக்கிறேன். தயவு செஞ்சு நம்புங்க" - ரேணுகா பதிலளித்தாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட குமார், உடனே பிரபாகரனின் பக்கம் திரும்பி பார்த்தார்.

ஏதோ விபரீதத்தை உணர்ந்து கொண்டவனைப் போலிருந்தது பிரபாகரனின் முகம். இருப்பினும் அவன் எதுவும் பேசவில்லை.

"சரி....நீ சொன்னது உண்மையா இருந்தா ரொம்ப நல்லது!" - குமார், அவளது வார்த்தையை முழுமையாக நம்பவில்லை என்பது புரிந்தது.

"உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டா என்னைக் கூப்பிடுங்க. நான் இங்கேயேதான் இருப்பேன்!" - பேசி விட்டு உடனே அறைக்குள் மறைந்தாள்.

"என்னமோ....எனக்கு ஒண்ணும் புரியலைப்பா!" - பிரபாகரன் மௌனத்தைக் கலைத்து முதல் தடவையாகப் பேசினான்.

"பரவாயில்லை...அதைவிட்டுத் தள்ளு பிரபாகரா. நம்ம அறிவுக்கு எட்டாத எவ்வளவோ விஷயங்கள் இந்த உலகத்துல நடக்குது. நானே இதை சமீபத்துலதான் உணர்ந்தேன். உனக்கும் அதெல்லாம் ஓரளவு தெரியும்." - குமார் பேசினார்.

"உண்மைதான். ஏதோ கொஞ்சம் தெரியும். அன்னிக்கு நாம நேரிலேயே பார்த்தோமே!" - பிரபாகரன் ஒப்புக் கொண்டான்.

சரியாக அதே நேரம் சந்து நாயரின் வீட்டில், மகா மாந்திரீகரான ஜயந்தன் அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்யலாம் என்பதைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"உடனடியா நான் ஏதாவது செய்யணுமா?" சந்துநாயர் கேட்டார்.

*(வாசனை வீசும்....)*

# காணாமல் போன அந்த பத்தாவது நபர்!


பரமார்த்த குரு மற்றும் அவரது சீடர்களின் கதை உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். அதே கதை, வேதங்களிலும் கொஞ்சம் வேறு வடிவத்தில் இருக்கிறது.

தங்களில் ஒருவன் ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டதாக எண்ணி, கரையில் நின்று அழுதுகொண்டிருந்த சீடர்களைத் துறவி ஒருவர் பார்க்கிறார். விஷயம் என்ன என்பதையும் அவர்களிடமே விசாரித்து அறிந்து கொள்கிறார். அழுதுகொண்டிருந்த சீடர்களில் ஒருவனை அவர் அழைத்து "நீங்கள் பத்துப் பேரும் உயிருடன்தான் இருக்கிறீர்கள்...பிறகு ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்க, "இல்லை சுவாமி...ஒன்பது பேர்தான் இருக்கிறோம். பத்தாவது ஆளைக் காணோம்...இதோ உங்களின் கண் முன்பே எண்ணிக் காட்டுகிறேன்...பாருங்கள்!" என்று அவன் சீடர்களை மீண்டும் வரிசையாக நிற்கவைத்து எண்ண ஆரம்பிக்கிறான். அப்போது ஒன்பது பேர்தான் இருந்தார்கள்.

"சுவாமி, நாங்கள் ஒன்பது பேர்தான் இருக்கிறோம். ஆனால், நீங்களோ பத்து இருப்பதாகக் கூறினீர்கள்...நீங்கள் சொல்வது நிஜம் என்றால், அந்தப் பத்தாவது ஆள் எங்கே?" எண்ணிமுடித்த அந்தச் சீடன் கேட்க, துறவி அவனையே சுட்டிக்காட்டிச் சொன்னார். - 'தத்துவமஸி' ! அப்படி என்றால் நீ தான் அந்தப் பத்தாவது ஆள்! என்று துறவி சீடனை நோக்கிச் சொன்னார்.

இந்தக் கதை எல்லோருக்கும் தெரிந்திருக்கும் அளவுக்கு, இந்தக் கதை சொல்லும் தத்துவம் அனைவருக்கும் தெரிவதில்லை!

ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள ஆசைகளைப் பற்றிப் பேசினோம். சத் - சித் - ஆனந்தம் என்று ஆசைகளை - இன்பத்தை அடையத்தான் வாழ்நாள் முழுவதையும் நாம் செலவிடுகிறோம். இந்த இன்பங்களைத் தேடித்தான் காலையிலிருந்து இரவு வரை ஓடுகிறோம்! சிகரெட், மது, பெண்கள் என்று இவற்றின் பின்னால் ஓடுகிறோம். 'இன்பம் எங்கே...எங்கே..?' என்று மூச்சிரைக்கத் தேடுகிறோம்.




அவர் ஒரு கம்பெனிக்கு மானேஜர். அவருக்கு அழகான ஒரு பெண் காரியதரிசியாக வேலைக்குச் சேருகிறாள். அந்தப் பெண்ணுக்குத் தன்னிடம் ஒரு மயக்கம் இருப்பதாக மனேஜர் நினைக்கிறார். அது உண்மையாக இருக்கக் கூடாது என்று அவர் உளமாற விரும்புகிறார். தன் வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி ஒரு நாள் மானேஜருக்கு அந்தப் பெண் அழைப்பு விடுக்க...இப்போது மானேஜருக்குச் சந்தேகமே இல்லை. 'இந்தப் பெண் என்னைப் பார்த்து மயங்கிவிட்டாள்...'என்று இவர் உறுதியான நம்பிக்கையோடு, அந்தப் பெண்ணின் வீட்டுக்கு அன்றிரவே விருந்து சாப்பிடப் போகிறார்!

அந்தப் பெண்ணின் வீட்டில் யாருமே இல்லை. டைனிங் டேபிளில் மெழுவர்த்தி மட்டும் எரிந்து கொண்டிருக்கிறது. அந்தப் பெண் தன்மீது மோகம் கொண்டிருக்கிறாள் என்பது நூறு சதவிகிதம் உறுதி என்று தனக்குத்தானே மீண்டும் ஊர்ஜிதம் செய்துகொள்கிறார்.

இருவரும் விருந்து சாப்பிட உட்காருகிறார்கள். இரவு 11.30 மணி ஆகிறது...மானேஜரின் சந்தேகத்துக்குத் துளியும் இடமில்லை! 'இவள் இன்று எனக்குத் தன்னையே கொடுக்கப் போகிறாள்' என்று மனதுக்குள் சொல்லிக்கொள்கிறார்.

நள்ளிரவு 12.00 மணி நெருங்கிக் கொண்டிருக்கிறது. அடுத்த அறைக்குப் போகலாம் என்று அந்தப் பெண், மானேஜரை அழைக்க...தான் அணிந்திருந்த கோட்டையும் சட்டையும் கழற்றிவிட்டு மானேஜர், அந்தப் பெண்ணின் பின்னே போகிறார். அந்த அறை இருட்டாக இருக்கிறது. 'சரி, அவள் விளக்கைப் போடுவதற்கு முன்பே தயாராக இருக்கலாமே...'என்று மிச்சமிருந்த அனைத்து உடைகளையும் மானேஜர் கழற்றிவிடுகிறார். அப்போது சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு அடிக்க... இருட்டைக் கிழித்துக்கொண்டு அந்த அறையில் விளக்குகள் பளிச்சென்று உயிர்பெறுகின்றன. அந்த அறை முழுவதும் இவரின் ஆபீஸில் பணிபுரியும் எல்லா ஊழியர்களும் 'ஹேப்பி பர்த்டே' என்று கைதட்டிப் பாட்டுப் பாட ஆரம்பிக்கிறார்கள். மானேஜரோ, பர்த்டே அன்று நிஜமாகவே பிறந்த மேனியுடன் அசடு வழிய நின்றிருக்கிறார்!

தனது பிறந்த நாளையே மறந்து அந்தப் பெண்ணின் பின்னால் சென்ற அந்த மானேஜரைப் போலத்தான் நாமும் பல சமயம் இன்பத்தை நமக்கு வெளியிலேயே தேடிக்கொண்டிருக்கிறோம். 'தானேதான் அந்தப் பத்தாவது நபர்' என்று தெரியாமல் அறியாமையோடு தேடிய அந்த 'சீடனைப் போலத் தான் நாமும் நடந்துகொள்கிறோம்.

இன்பத்தைத் தேடுபவனும் நீதான். இன்பமும் நீயேதான்...' என்பதுதானே பகவத் கீதையின் பிரபலமான ஓர் அறிவுரை!

நன்றி : சுவாமி சுகபோதானந்தா.

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 142க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

பாத்திமா சிஹானி, 22/1, கலவத்த, கட்டுகஸ்தோட்டை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. ரி.சங்கர், 50, ஆமர் வீதி, கொழும்பு 12.
2. பி. சாகரன், ஆலையடி வீதி, தம்பிலுவில் 02.
3. கே. சின்னத்தம்பி, 84/10, பார்தி வீதி, திருகோணமலை.
4. ஏ.எஸ்.எம். சபீர், செய்யதுகனி வீதி, பிரைந்துறைச்சேனை, வாழைச்சேனை.
5. ரி. கபிலன், குளத்தடி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
6. எம். சிவச்சந்திரன், 6, போகாவத்தை, பத்தனை.
7. ச. பாலசூரியன், 18/5, குடியிருப்பு, வவுனியா.
8. திருமதி. கலாவதி குமாரசாமி, 27/125, பரக்கும்பாபிளேஸ், வெள்ளவத்தை.
9. திருமதி. ஆர். சிவஞானம், 333/3F, சென். அந்தனிஸ் மாவத்தை, ஹெந்தலை.
10. இந்துமதி வடிவேல், 5, ஏறாவூர், செங்கலடி.

### குறுக்கெழுத்துப் போட்டி 144

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | ■ | 24 |
| 25 | ■ | 27 | 28 | 29 | ■ |
| ■ | 32 | ■ | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. ஐப்பசி மாதம் இந்துக்கள் கொண்டாடும் பண்டிகையொன்று.
7. வீதிகளைச் செப்பனிடப் பயன்படுவது (திரும்பியுள்ளது).
10. சேமிக்கும் ஸ்தாபனம் என்று கூறலாம். (குழம்பியுள்ளது).
13. தன்மதிப்பு அல்லது கௌரவம் என்று பொருள்படும். (குழம்பியுள்ளது).
17. பயிர்களிடையே காணப்படும் புல், செடிகள். (திரும்பியுள்ளது).
19. இகழ்ச்சி அல்லது அவமதிப்பு என்று கொள்ளலாம் (குழம்பியுள்ளது).
27. வரட்சிக்காலங்களில் இது அதிகம் ஏற்படும்.
32. நெருப்பு.
34. இளைய சகோதரன் (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. முடிவு அல்லது முடிவெடுத்தல் என்று பொருள்படும்.
2. நிலத்திற்குக் கீழுள்ள வாழிடம் அல்லது கீழுலகம் (குழம்பியுள்ளது).
4. காற்று (தலைகீழ்)
6. பொன்.
11. உபபிரிவு அல்லது பகுதி எனலாம்.
15. கொடை என்று பொருள்படும் (குழம்பியுள்ளது).
22. ஒன்று என்பதன் ஒத்த கருத்து.
29. சிம்பு நடித்து வெளியான திரைப்படமொன்று (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 142 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ங் | 3 க | 4 ள் | ■ | 6 க |
| 7 ரு | 8 ரு | ■ | 10 எ | 11 தி | 12 ரி |
| 13 கோ | 14 ச | 15 லை | ■ | 17 க | ■ |
| 19 ண | ■ | 21 சி | 22 ப | ■ | 24 ரு |
| 25 ம | 26 லை | ■ | 28 வி | 29 ரு | 30 க |
| 31 லை | 32 வ | 33 ன் | 34 த | ■ | 36 ணை |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 01.11.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-144
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# செல்லம்மா

-திருமலை, தாமரைமகன்.



**இத்தனை** நாளும் வீட்டிலிருந்த பரபரப்பு இடம்பெயர்ந்து இப்போது மருத்துவமனைக்குச் சென்றுவிட்டது. வீடு கொஞ்சமாக வெறிச்சோடிவிட்டிருந்தது. செல்லம்மா பாட்டி சாமியறையில் வாய்க்கு வந்த சாமியையெல்லாம் கும்பிட்டபடி உட்கார்ந்து இருக்கிறார். பேத்தி சித்திராவும் அவளது தங்கச்சி கவிதாவும் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

செல்லம்மா பாட்டிக்கு பிரார்த்தனையையும் மீறிய எதிர்பார்ப்பு தொலைபேசியின் சிணுங்கலுக்காக. பிரசவத்திற்காக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டிருக்கும் பேத்தியின் பிரசவச் செய்தி எந்நேரமும் வருமென்பதில்.

காலை பத்துமணிக்குப் பிரசவ வலி ஏற்பட்டு, செல்லம்மா பாட்டியின் மகளின் மகளான மலரைக் கொண்டு சென்றார்கள். இப்போது நேரம் இரவு ஒன்பதரையையும் தாண்டிவிட்டது. ஒருபக்கம் ஏமாற்றம் இன்னொருபக்கம் பயம். இவ்வளவு நேரமாகிறதே ஒருவேளை பேத்திக்குக் குழந்தை கிடைப்பதில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டு விட்டதோ என்று முன்பு இருந்ததை விடவும் பதற்றம் அதிகரிக்கவும், தொலைபேசி சிணுங்கவும் நேரம் சரியாக இருந்தது. இப்போது நேரம் ஒன்பது ஐம்பது.

பாட்டி சென்று தொலைபேசியைத் தொட முதலே சமையலறைக்குள்ளிருந்து ஓடி வந்த சித்திரா தூக்கினாள். அவர்கள் எதிர்பார்த்த செய்திதான். மலருக்கு ஆண்குழந்தை பிறந்து விட்டதாக மலரின் அப்பா தகவல் சொன்னார்.

இதே செய்தி கொழும்பிலிருந்து வந்து கொண்டிருக்கும் மலரின் கணவருக்கும் தெரிவிக்கப்பட்டதாக மலரின் அப்பா கூறிய போது, சித்திராவுக்கு மலரின் நிலையை நினைத்து கண்கள் கலங்கிப் போயிற்று. சாதாரண பிரசவம் இல்லாமல் சத்திர சிகிச்சை மூலமே குழந்தை கிடைத்துள்ளது. விபரங்களைப் பாட்டியிடம் சித்திரா சொல்லவும் பாட்டிக்கு இருப்புக் கொள்ளவில்லை.

உடனடியாகவே தான் பூட்டப் பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்று பாட்டி சித்திராவையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு ஆட்டோ ஒன்றைப் பிடித்தார். ஆட்டோ மருத்துவமனையை நோக்கி விரைந்து கொண்டிருக்கையில், செல்லம்மா பாட்டியின் நினைவுகள் இருபத்தி எட்டு ஆண்டுகள் பின் நோக்கிப் போனது.

பதிமூன்று வயதில் திருமணமாகி வீரய்யா என்பவருக்கு மனைவியான செல்லம்மா பாட்டி சுவையாக சமைக்கத் தெரிந்தது மட்டுமல்லாமல், வீட்டுக்கு வருபவர்களை ஆதரிக்கவும் தெரிந்த நல்ல குடும்பப் பெண்ணாக இருந்தாள். சந்தோசமாகப் போன குடும்ப வாழ்க்கைக்கு அர்த்தமாக செல்லம்மா ஏழு பெண்பிள்ளைகளையும், நான்கு ஆண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தாள். கடைசி மகள் செல்வி பிறந்து ஆறு மாதத்தில் செல்லம்மாவின் வாழ்க்கையில் இடி விழுந்தது. கடைக்குப் போய் திரும்பிய கணவன்தனக்கு நெஞ்சு வலிப்பதாகவும் கொஞ்சம் சாய்ந்து கொள்ளப்போவதாகவும் சொல்லிவிட்டு சாய்ந்தவர் பின்னர் எழும்பவேயில்லை. செல்லம்மாவும் பிள்ளைகளும் தங்களால் முடியுமானவரை அழுதனர். கேள்விப்பட்ட சிலர் செல்லம்மாவின் கணவர் இறந்த செய்தியை நம்பவே மறுத்தனர். அவ்வளவு திடகாத்திரமான மனிசன் இறந்து விட்டாரா என்ற கேள்வியையே வியப்போடு கேட்டனர். இதே கேள்வியை கணவனின் சகோதரிகளும் கேட்டபோது செல்லம்மா அவர்களுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியாமல் ஒடிந்து போய்விட்டாள்.

ஒரு மாதிரியாக காரியங்கள் முடிவடைந்து ஊரார் அவரவர் திசையை நோக்கி சென்று விடவும் செல்லம்மாவும் குழந்தைகளும் அநாதரவாகவும் தனித்தும் இருப்பதை உணர்ந்தார்கள்.

கணவனோடு வாழ்ந்த பத்தொன்பது ஆண்டுகளில் செல்லம்மா கடைத் தெருவுக்கோ வேறு காரணமாகவோ வீட்டை விட்டு புறப்பட்டதில்லை. அவ்வளவு கௌரவமாக கணவனின் அன்புக்குப் பாத்திரமாக வாழ்ந்த செல்லம்மா, இப்போது ஒவ்வொன்றுக்காகவும் வீட்டை விட்டு வெளியில் செல்ல வேண்டிய நிலை கண்டு அதிர்ந்து போனாள். இத்தனை குழந்தைகளையும் வைத்துக் கொண்டு செல்லம்மா எப்படி வாழப்போகிறாள். பேசாமல் இன்னொரு திருமணம் செய்துகொள்வது தான் நல்லது என்று தெரிந்தவர்கள் கூறிய ஆலோசனையை செல்லம்மா நிராகரித்தாள்.

கணவனோடு இத்தனை ஆண்டுகள் வாழ்ந்த வாழ்க்கை என்ன அதுபோக இந்தப் பிள்ளைகள் நாளைக்கு பெரிதான பிறகு தன்னைப் பார்த்து காரித்துப்பாதுகளா, இண்டைக்கு இப்படிச் சொல்லும் சமூகம் நாளைக்கு எப்படியெல்லாம் பேசும் என்று யோசித்த செல்லம்மா அந்த யோசனையை நிராகரித்தாள்.

இனியும் வீட்டோடு இருந்தால் ஆகப் போவது எதுவுமில்லை. ஒருவேளைக் கஞ்சாவது ஊற்றி இத்தனை பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும். அதிலும் மூத்ததும் இளையதும் ஆம்பிள்ளைப் பிள்ளைகள். அவர்கள் இரண்டு பேரும் தலையெடுத்தால் பிறகு கஷ்டம் நீங்கிப் போகும் என்ற நம்பிக்கையோடும் செல்லம்மா வீட்டுக்கு பக்கத்திலேயே பலர் வேலை செய்து கொண்டிருந்த கல் உடைக்கும் வேலைக்குச் சென்றாள்.

செல்லம்மாவின் நிலைமையைத் தெரிந்தபடியால் அவளுக்கு வேலை கிடைத்தது. ஒரு லோட் கல் உடைத்தால் நாற்பது ரூபாய் கிடைக்கும் செல்லம்மா மனதிலிருந்த எல்லா பாரத்தையும் சுத்தியல் வாயிலாக இறக்கினாள்.

கணவனின் இறப்போடு நின்றுவிடுமென்றிருந்த செல்லம்மாவின் வாழ்க்கை செல்லம்மாவின் கடினமான உழைப்போடும், நம்பிக்கையோடும் நகரத்தொடங்கியது. மூன்றாவது பிள்ளையும் பெண் பிள்ளைகளில் மூத்தப் பிள்ளையுமான ஆனந்தி படிப்பில் ஆர்வம் கொண்டிருந்ததால் ஆனந்தியை வேலைகளில் ஈடுபடுத்த விரும்பியதில்லை. அதுபோல் இவ் வளவு கஷ்டங்களுக்குள்ளும் செல்லம்மாவும் ஆனந்தியை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்த வில்லை. நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகின. பிள்ளைகள் வளரத் தொடங்கிவிட்டார்கள். அதே காலப்பகுதியில் ஆனந்திக்குக் கல்யாணமும் முடிந்தது.

அதுபோலவே எல்லாப் பிள்ளைகளும் நல்லபடியாக குடும்ப வாழ்க்கையில் ஒன்றிப் போனார்கள். என்னதான் பிள்ளைகள் குடும்பமாகிப் போனாலும் செல்லம்மா மீது ஒரு பிள்ளைக்கும் அன்பு குறைந்து போக வில்லை. ஆனாலும் யாருடைய தயவையும் நம்பியிருக்காத செல்லம்மா, கணவனின் இறப்புக்குப் பிறகு தொடர்ந்து இருபத்து எட்டு ஆண்டுகள் தனக்கு மறுவாழ்க்கை தந்த தொழிலான கல் உடைக்கும் தொழிலைச் செய்து கொண்டிருந்தாள்.

செல்லம்மாவின் பிறவிக்குணம் யாரையும் மனம் நோகும்படியாக ஒரு சொல் கூடப் பேசுவதில்லை. அது போல செல்லம்மா மீதும் யாருக்கும் எதுக்காகவும் கோபம் வருவதுமில்லை. செல்லம்மா பெற்றெடுத்த பதினொரு பிள்ளைகளும் செல்லம்மா மீது அவ்வளவு பாசமாக இருந்துவருகிறார்கள்.

பாவம் செல்லம்மாவுக்குத்தான் யாருடைய அழைப்புக்குப் போய்த்தங்குவது என்று தெரிவதில்லை.

செல்லம்மாவுக்கு முதல் பேரன் இளைய மகளின் பிள்ளை சசி பிறந்த போது செல்லம்மா ஆனந்தக் கண்ணீரில் நனைந்து விட்டாள். கணவன் தன்னையும், பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்த பிறகு இத்தனை காலமும் தன்னால் வாழ முடியும் என்று செல்லம்மா நம்பவில்லை. அடுத்தபடியாகவும் இளைய மகளுக்கு இரண்டாவது மகனும் பிறந்தான். இந்த இரண்டு பேரப்பிள்ளைகளுக்கும் அடுத்தபடியாகத் தான் மூத்தமகள் ஆனந்திக்கு மூத்தமகளாக மலர் பிறந்தாள். அடுத்தடுத்து மகன்களினதும் மகள்களினதுமாக செல்லம்மாவுக்கு பத்தொன்பது பேரப்பிள்ளைகள். அத்தனை பேருக்கும் செல்லம்மா பாட்டியென்றால் உயிர்தான். செல்லம்மாவும் எல்லாப் பேரப்பிள்ளைகளோடும் ஒரே மாதிரியாக இருப்பதுவே செல்லம்மா மீது விருப்பம் அதிகரிக்கக் காரணமாக அமைந்தது.

செல்லம்மாவின் வாரிசுகள், பேரக் குழந்தைகள் என்று வாழ்க்கையின் ஓட்டத்தில் காலமும் வெகுதூரம் ஓடிவிட்டது. செல்லம்மாவின் மூத்த பேத்தி மலருக்கு 2004ஆம் ஆண்டு திருமணமும் நடந்தது.

இப்போது செல்லம்மாவுக்கு எழுபது வயதாகிறது. கல் உடைத்ததில் இறுகிப் போன உடம்பும், வாழ்க்கையை ஜெயிப்பதற்காக சேமித்துக் கொண்ட நம்பிக்கையும், போராட்ட குணமும் இந்த வயதிலும் செல்லம்மாவை தெம்போடு வைத்திருந்தது. இப்போது செல்லம்மா கல் உடைப்பதில்லை. 2002ஆம் ஆண்டு கல் உடைக்கும்போது ஒரு துண்டு கல் தெறித்து கண்ணைத் தாக்கிய பிறகு செல்லம்மா கல் உடைப்பதை நிறுத்தினாள். இப்படி எல்லாமே கனவு மாதிரி இருக்கும் செல்லம்மாவின் வாழ்க்கையில், பேத்தியின் மகனை அதாவது தனது வம்சத்தின் நாலாவது வாரிசையும் பார்த்து விடுகின்ற ஆவலும் அதற்காக குழந்தை கிடைப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்னமே மகளின் வீட்டுக்கு வந்து தங்கி விட்டதும்தான் நிஜமாகிப் போய்விட்டது.

ஒருவேளை திகதி முந்தலாம் பிந்தலாம் எதுக்கும் நேரத்துக்கே மகளின் வீட்டுக்குப் போய் விடுவது நல்லது என்று வந்த செல்லம்மாவை, வீட்டுக்கு வரும்படி அழைக்காத மகனுமில்லை மகளுமில்லை மருமகனுமில்லை, மருமகளுமில்லை. பேரன் பேத்தியுமில்லை. ஆனாலும் செல்லம்மா பிடிவாதமாக மறுத்து விட்டாள். பேத்தியின் பிள்ளையைப் பார்த்த பிறகு அடுத்த விநாடியே இறந்து போனாலும் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ள நான் தயார் என்று கூப்பிட்டு வருபவர்களிடம் தீர்மானமாகக் கூறிக் கொண்டிருந்த செல்லம்மாவின் கனவு நனவாகிவிட்ட நாள் இன்று.

சுருங்கிப் போன கன்னங்கள் வழியே இரு அருவிகளான கண்ணீர் வழிந்து கொண்டிருக்க ஆட்டோவின் வலப்பக்க இருக்கையில் செல்லம்மா பாட்டி சுயநினைவு இழந்து இருப்பதைக் கண்ட சித்திரா, “பாட்டி....பாட்டி...இறங்குங்க ஆஸ்பத்திரி வந்திட்டுது” என்று தட்டி எழுப்பிய போதுதான் செல்லம்மா நினைவுக்குத் திரும்பினாள்.

கால்களுக்கு எங்கிருந்துதான் அந்த அவசரம் வந்ததோ தெரியாது. செல்லம்மா, பேத்தியின் அறைக்குள் சென்று பேத்தியையும், பூட்டப்பிள்ளையும் பார்த்து விட்டு தான் கையெடுத்துக் கும்பிட்ட எல்லா தெய்வத்துக்கும் நன்றி தெரிவிப்பது போல் பேத்தி படுத்திருக்கும் கட்டிலின் ஒரு காலருகில் அமர்ந்து விட்டாள். வாழ்க்கை யோடு போராடி ஜெயித்த செல்லம்மாவின் இந்த மகிழ்ச்சியை வெல்ல முடியவில்லையோ....?

---

# தொடரும் கதைகள்

-இ. ரேக்கா, மந்துவில்.



*‘**தேவி** பிள்ளை தேவி’ என்று அழைத்த வண்ணம் பொன்னம்மா ஆச்சி தேவி வீட்டுப் படலையை திறந்தபடி நின்று கொண்டிருந்தாள்.*

*ஓம்! ஆச்சி வாருங்கோ என்ன விடிந்ததும் விடியாததுமாய் இங்கு வந்து நிற்கிறியள்; ஏதும் முக்கியமான விசயமே!*

*ஓமடி பிள்ளை உனக்கு விசயம் தெரியாதே! உவன் லட்சுமியின் பிள்ளையை புலிகள் சுட்டுப் போட்டாங்களாம். நாசமாய்ப் போவாங்கள்; ஏன் தான் இந்த அநியாயமோ! என்று ஆச்சி திட்டியபடி சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.*

*என்னனை ஆச்சி என்ன சொல்லுறியள் உண்மையாத்தானே? என்று பதறியபடி கேட்டாள் தேவி.*

*பின்னை என்னடி பிள்ளை நான் உப்பிடி ஒரு விசயத்தை விளையாட்டாகச் சொல்லுவனே! பாவம் அதுகள் எவ்வளவு கஷ்டப்பட்டதுகள். அவன் தானே அவர்களை உழைச்சுப் பார்த்துக் கொண்டிருந்தவன். இனி அவள் லட்சுமி அந்தச் சின்னஞ் சிறுசுகளை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாளோ? ம்....ம்... என்று ஒரு நெடிய பெருமூச்சினை விட்டாள். அவளது சோகத்தின் கோடுகள் முகத்தில் தெரிந்தது. தனி மரமாக நிற்கும் அவளுக்கு அவன எவ்வளவு உதவியாக இருந்தான். இனி.....*

*ஆம், லட்சுமியின் குடும்பம் வறுமை என்ற அரக்கனின் கோரக்கரங்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் குடும்பம். அடிப்படை தேவைகளை நிறைவு செய்யவே திணறிக் கொண்டிருந்தது. லட்சுமியின் கணவரும் சில வருடங்களுக்கு முன்னர் விபத்து ஒன்றில் இறந்துவிட்டான்.*

*குடும்பச் சுமை மூத்தவனாக சுந்தரத்தின் தலையில் சுமத்தப்பட்டது. அவனுக்குப் பின் வரிசையாக நிற்கும் ஆறு உடன் பிறப்புக்களையும் தாயையும் காப்பாற்ற வேண்டிய கடமையை காலம் உருவாக்கிவிட்டிருந்தது.*

*ஆசையோடு கற்ற கல்விக்கு நிரந்தரமாகவே விடைகொடுக்க வேண்டிய நிலைமையை எண்ணி குலுங்கி குலுங்கி அழுதான். அழுது என்ன பிரயோசனம். எதிர்காலத்தில் தான் ஒரு வைத்தியனாக மிளிர வேண்டும் என்று கனவு கொண்டிருந்தானே அந்தக் கனவெல்லாம் ஒரே நொடியில் விபத்து என்ற வடிவில் வந்து சிதைந்துவிட்டது. வயிறு என்ற ஒன்று இருக்கிறதே, அதற்கு அவன் உழைக்கத்தானே வேண்டும். தந்தையை போலவே அவனும் சந்தை வியாபாரியாக மாறிவிட்டான். தான் படிக்காவிட்டாலும் தன் உடன்பிறப்புகளையாவது படிக்க வைக்க வேண்டும் என்ற வெறி அவன் மனதில் உருவாகியிருந்தது. அதுவும் நிறைவேறாமல் போகப் போகிறது என்பது அவனுக்கு எங்கே தெரிந்தது.*

*அன்று வியாழக்கிழமை. சுந்தரம் வழக்கம் போல அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தாயிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான். நேரம் 5.45 இருக்கும், வீதியில் சன நடமாட்டம் குறைவாகவே இருந்தது. சுந்தரம் சந்தோசமாக வாய்க்குள் ஒரு சினிமாப் பாடலை முணுமுணுத்தவாறு சென்று கொண்டிருந்தான். ஏனோ அன்று அதிக சந்தோஷத்தில் இருந்தான். சுந்தரம் ஆறுகால் மடத்தை தாண்டிச் சென்ற சில நிமிடத் தில் மோட்டார் சைக்கிளில் வந்த புலிகளின் பிஸ்டல் குழுவினரால் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அந்த வேட்டுக்கள் அவனது உயிரைப் பலிவாங்கிவிட்டது. இராணுவத்தினருடன் சகஜமாகச் சிரித்து கதைத்த ஒரே காரணத்திற்காக அப்பாவியான பொது மகன் ஒருவனைச் சுட்டு கொன்றது மட்டுமன்றி ‘தேசத்துரோகி’ என முத்திரையும் குத்திப் பலிவாங்கி விட்டார்கள்.*

*தமிழ்த் தேசம் அராஜகத்தின் பிடியில் சிக்கிக்கொண்டிருக்கும் வரை இக் கொலைகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கும். வறுமையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் சுந்தரம் போன்ற குடும்பங்கள் எத்தனை ஆயிரம் இம் மண்ணில் சீரழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இவர்கள் வாழ்வுக்கு விடிவு கிடைக்குமா? அல்லது தொடர்கதையாகத் தொடருமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# மனதால் அழுவது வடுக்களை ஏற்படத்தும்

யாராவது உங்களை இகழ்ச்சியோ அல்லது அவமரியாதையோ செய்தால் அவர்களுக்கு புன்னகை, நல்லாசிகள் என்னும் மலர்களைத் தூவிவிடுங்கள்.

யாராவது உங்கள் மீது கோபப்பட்டுக் கூடாதவற்றைச் சொன்னால், அந்தக் கணத்தில் நீங்கள் அவரை ஏன் என்று கேட்பது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் இருக்கும்.

நான் மற்றவர்களது பலவீனங்களை எனது மனதில் வைத்திருந்தால் அவை என்னில் ஒரு பகுதியாகிவிடும்.

மனம் சோர்வடையின் ஒவ்வொரு செயலுக்கும் பெரும் முயற்சி தேவை.

உங்கள் முகத்தில் கவலை நிறைந்திருந்தால், நீங்கள் மற்றவர்களையும் கவலையடையச் செய்வீர்கள். இது நல்ல செயலா?

பிறர் பிழை செய்யும்பொழுது அந்தப் பிழைகளை எண்ணிக் கொண்டிருக்காதீர்கள். மாறாக அவர்களின் பலவீனங்களை அழிக்க நீங்கள் கொடுக்கும் ஒத்துழைப்பை அவர்கள் கணக்கிட விடுங்கள்.

புரிந்துணர்வற்ற தன்மையை அன்பினாலும், தூய்மையான எண்ணங்களினாலும், தக்க தருணத்தில் புரிந்துணர்வினை அளிப்பதனாலும் நீக்கிவிட முடியும்.

கால் சறுக்கின் குணமடையலாம்; நாத் தவறின் அது ஆழமான வடுவை ஏற்படுத்தும்.

அழகும் பண்பு நலமும் எவரையும் கவரும். அழகற்றவருக்கும், தகுதியற்றவருக்கும் உதவுவதே ஓர் அரிய பண்பு.

வெளியில் அழுவதை விட உங்கள் உள் மனதிற்குள் அழுவது மிகவும் ஆபத்தானது. வெளிக் கண்ணீர் எளிதாகத் துடைத்து விடக் கூடியது. ஆனால் இரகசியமான கண்ணீர் வடுக்களை ஏற்படுத்தும்.

## இலக்கிய நயம்

# ஒரு கோப்பை மது

தந்தது ரசிகன்

மன்னவன் உதய மார்த்தாண்டனின் விழிகள் இரத்தமாய்ச் சிவந்திருந்தன.

வெறிக்க வைத்த மது விழிகளைச் சிவக்க வைத்திருந்தது.

எதிரே முதுகை வில்லாக வளைத்த படி இன்னும் கொஞ்சம் வளைத்தால் மன்னவன் பாதத்தை முகத்தால் தொடுமளவு பணிவோடு அருமை நண்பர் குணபதி நின்றிருந்தாள்.

"குணபதி"

"மன்னா, மதி வண்ணா சொல்லுங்கள். என்னவோ?"

"அருமை நண்பன் நீ. இத்தனை புகழாரம் எதற்கு?"



"நான் ஒரு சிறிய புழு. தாங்கள் சிங்க நிகர் தங்க மகன்."

மன்னவன் சிரித்தான். புகழ்வதை உள்ளே ரசித்தான். முகம் மலர்ந்தான்.

"குணபதி! மக்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?"

"தாங்கள் செய்த தவப்பயன் தங்களைப் போல் ஒரு மன்னவர் கிடைத்தார் என்று"

"உண்மையாகவா?"

"சத்தியமாக!"

"மலர்க் குலம் என்ன நினைக்கிறது?"

கேட்டுவிட்டு கண்களில் விஷமக் குறும்போடு நோக்கினான்.

குணபதி சுற்று முற்றும் நோக்கிவிட்டு:

"தங்கள் மலை மார்பில் மாலையாய் வந்து ஆட ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று ஆவலாய் ஏங்கிக் கொண்டிருக்கிறது"

மன்னவன் உதய மார்த்தாண்டன் மீசையைத் தடவிக் கொண்டான்.

"அழகு மயில்களுக்கு என்மீது அத்தனை பிடிப்போ?"

"பிடிப்பல்ல மன்னவா பித்து!"

"தேசத்தை ஆளும் பொறுப்பை உன்னிடம் தந்துவிட்டு, தேன் மொழி மங்கையரின் தேகங்களை ஆள்வதில் குதிக்கத் துடிக்கிறது உள்ளம்."

மன்னவன் சொல்ல குணபதி நெளிந்தான். ஆட்சிக் கட்டிலில் தன்னை இருத்திப் பார்த்து ஒரு கணம் இன்பக் கனவில் நுழைந்து மீண்டான்.

மன்னவன் மறு கேள்வியை வீசினான்.

"கூட வந்திருக்கிறதா மயில்?"

"அழைத்து வந்திருக்கிறேன்!"

"அழகிதானே?"

"நடமாடும் நந்தவனம்! மன்மதக் கலையில் கைதேர்ந்த காம பாணம்! மஞ்சத்தில் சதிராடும் கொஞ்சும் தேகம்! மொத்தமாய்ச் சொன்னால், மீட்ட மீட்ட சுகம்" தரும் தேவ கானம்."

"பலே, குணபதி!"

"மன்னா!"

"நீதான் நண்பன்!"

"தங்கள் முகம் மலர்ந்தால் என் அகம் குளிரும்!"

"போதும், போய் அழைத்து வா!

பூஜைக்கு வந்த மலர் பொறுத்தால் வாடி விடும்!"

மன்னவன் உடல் சூடேறிக் கொண்டிருக்க, உரத்து நகைத்தான்.

உதய மார்த்தாண்டன் மீசை கோபத்தில் துடித்தது.

"நீயும் என் நண்பன். குணபதியும் என் நண்பன்!"

"குணபதி நண்பன் அல்ல: நச்சுப் பாம்பு!"

"பூப்போன்ற உள்ளம் குணபதிக்கு! அவன் மீது பொல்லாப்புச் சொல்லாதே!"

தாழம்பூவுக்குள்ளும் நாக விஷம் கொண்ட பாம்பிருக்கும்!"

வாதிட்டவர் அமைச்சர் ஆவுடையார். அவரது வாதம் தேளாய் கொட்டியது மன்னனுக்கு!

"இறுதியாக என்ன சொல்லுகிறீர்?"

"தங்களை விட்டு விலகிச் செல்வதைத் தவிர, வேறு வழி எனக்கில்லை என்று!"

"குறை என்ன?"

"நிறை என்ன என்று கேட்டால் சொல்லலாம். ஏனெனில், நிறை மட்டும் மிகக் குறைவாக இருக்கிறது.

குறைகளோ நிறைந்துவிட்டன. எடுத்துச் சொன்னால் விரிந்து கொண்டே போகும். தவிர விளங்கிக் கொள்ளும் நிலையிலும் தாங்கள் இல்லை."

"குற்றம் சாட்டுகிறாயா?"

"தவறு. சுட்டிக் காட்டுகிறேன்! குற்றம் சாட்டுவது எதிரிகள் மீது தான். நண்பர்கள் மீதல்ல! நட்புக்கு உரம் நல்வழி சொல்வது. உள்ளத்து அன்புக்குப் பலம் உரிய நேரத்தில் தகுந்தது சொல்லி தடம் மாறாமல் காப்பது."

"புளித்துப் போன போதனை. முகம் சுளிக்க வைப்பதே உன் அகத்துக்குப் பிடித்த பொழுது போக்காகி விட்டது"

மன்னனவன் சலித்துக் கொண்டான். முகத்தில் வெறுப்பு உதித்தது.

"நல்லது உனக்குப் பிடித்த முடிவை எடுத்திருக்கிறாய்! பிரிவதே விருப்பம் என்றால் தடுப்பது என் நோக்கமல்ல"

அமைச்சர் ஆவுடையார் மன்னனும் தன் ஆருயிர் நண்பனுமான உதய மார்த்தாண்டன் முகத்தை கடைசியாக நோக்கினார்.

"வருகிறேன் மன்னா. விடைபெறும் இந்த இறுதி நேரத்தில் திருவள்ளுவர் குறள் ஒன்று சொல்கிறேன் செவி கொடுங்கள்.

*முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து*

*அகநக நட்பது நட்பு.*

முகம் மட்டும் மலரும்படியாக நட்பு செய்வதல்ல நட்பு. நெஞ்சமும் மலரும்படியாக நட்புக் கொள்வதே நட்பு.

உன் நெஞ்சத்தில் சிலர் களை வளர்க்கிறார்கள். உன் முதுகை குறிபார்த்துக் கொண்டு முகத்துக்கு வாழ்த்துப் பாடுகிறார்கள். இறுதியாக அவர்கள் உன் நெஞ்சில் பால் வார்க்கப்போவதில்லை. விஷப் பற்களை பதிக்கப் போகிறார்கள்."

ஆவுடையார் குரல் தழுதழுத்தது மன்னன் முகத்தில் அலட்சியப் புன்னகை.

"நான் என்ன புத்தியில்லாதவனா?"

"புத்தியிருக்கிறது அதனைச் சுற்றியிருக்கும் துதிபாடும் கூட்டம் சிதைக்கிறது! விழிகளிலிருந்தும் பகட்டு மோகம் உன் பார்வையை மறைக்கிறது! மன்னருக்குரிய வேகம் இருந்தும் மங்கையர் மோகம் அந்த வேகத்தை வீச்சரிவாளாய் மாறி அறுக்கிறது"

"விரோதி போலப் பேசுகிறாய் நீ!"

"உள்ளதைச் சொன்னால் விரோதி என்கிறாய்! உண்மையைச் சொன்னால் துரோகி என்கிறாய்! நல்லதைச் சொன்னால் நாசக்காரன் என்கிறாய்!

இனியும் இங்கிருந்தால் எடுத்தெறிவாய் என்று துடிக்கும் மனதோடு பிரித்துக் கொண்டேன் உறவை! வருகிறேன்!"

ஆவுடையார் விடைபெற்றார். விழிகளில் திரண்ட நீரை முதுகு திரும்பிச் செல்லும் போது விரல்களால் துடைத்துக் கொண்டார்.

சிறைக்குள் இருந்தது போதும் என்று விடுபடத் துடிக்கும் நெஞ்சத்து முயல்கள் இரண்டு சிறை மீட்க துடித்தான் உதய மார்த்தாண்டன்.

"இந்தத் திராட்சை மதுவை முதலில் சுவையுங்கள்."

என்று குயிலும் இரவல் கேட்கும் குரலால் சொன்னாள் அவள்.

கோப்பை நிறைய மது. அவள் வயிற்றுள் முகம் தவழ்ந்து தொப்புட் குழியில் உதடு புரட்டி, நிமிர்ந்து கரம் நீட்டி, திராட்சை மதுக் கோப்பையை வாங்கிக்கொண்டான்.

"பொறுங்கள்!"

"என்ன?"

அவள் முகத்தை தன்னை நோக்கி இழுத்து உதடுகளை இதழ்களால் மூடிவிட்டு விலகி "ம்..... இப்போது அருந்துங்கள்"

அருந்தினான். அவள் கேட்டாள்.

"சுவை எப்படி?"

"இதைவிடச் சுவை சொக்க வைக்கும் உன் சோடி இதழ்கள்"

அவள் கலகலவென்று நகைத்தாள். மன்னனுக்கு அது கிணற்றுக்குள் இருந்து நகைப்பது போலக் கேட்டது.

"என் இதழ்கள் சொக்க மட்டும்தான் வைக்கும்! புத்தி கெட்ட மன்னா! நீ சுவைத்த மது உன்னை சொர்க்கத்திற்கே கொண்டுபோய்ச் சேர்க்கும்!"

"நீ.. என்ன... சொ... சொல்லுகிறாய்?"

"நீ சுவைத்த திராட்சை மதுவுக்குள் உன் உயிரைச் சுவைக்க காத்திருந்தது திராட்சியான நஞ்சு!"

அவள் சிரித்தாள். அவளது சிரிப்போடு வந்து கலந்தது குணபதியின் சிரிப்பொலி.

உயிர் பறவை மடியும் நொடியில் உதய மார்த்தாண்டனுக்கு ஆவுடையார் சொன்ன குறள் மட்டும் நினைவில் மின்னலாய் உதித்துச் சென்றது.

*"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
*அகநக நட்பது நட்பு"*

(குறள் 786, அதிகாரம் 79.)

## சிந்தியா பதில்கள்

**அரசியல் மேடைக்கும் இலக்கிய மேடைக்கும் என்ன வித்தியாசம்?**


-சல்மா சாஜகான், வாழைச்சேனை - 05.

முன்னதில் போரடிக்கும்படி பொய்ப் புராணத்தைப் போட்டு உண்டு இல்லை என்றாக்கி விடுவார்கள். இரண்டாவதில் பொய்யைக் கொஞ்சம் கற்பனையோடு பிசைந்து இரசிக்கும்படி சில வேளைகளில் நேரத்தை நீடித்துக்கொண்டு போரடிப்பார்கள்.

**'பிள்ளையார் பிடிக்க குரங்காகிய கதை' என்ற பழமொழியின் உண்மையான பொருள் என்ன?**

-கமால்தீன் - அல் ஆஸாத், ஏறாவூர் - 03.

வெளிநாட்டமைச்சரைப் போட்டுத் தள்ளப்போய் ஐரோப்பிய ஒன்றியத்திடம் டோஸ் வாங்கியதைப் போல்தான்! என்ன



ஆஸாத் பொருள் விளங்குகின்றதா?

**இந்தியாவுக்குச் சென்றிருக்கும் இலங்கை அணி, இந்திய மண்ணிலேயே இந்தியாவை வெற்றி கொள்ளுமா? வாங்கிக் கட்டுமா?**

-எம்.ஏ.அபுசாலி, அக்கரைப்பற்று.

ஆடத் தெரியாதவன் தான் மேடை சரியில்லையென்று சொல்வான். இலங்கை வீரர்கள் ஆடத் தெரிந்தவர்கள் என்பதால், மைதானம் எங்கே உள்ளது என்பது தேவையில்லாத அச்சம். மீள் பிரவேசம் செய்யும் சச்சின் இரசிகர்களை ஏமாற்றாமல் இருந்தால் இந்தியாவுக்கு அதுவே போதும்.

**அழகி நந்திதாதாஸை சங்கர் இயக்கினால் எப்படி இருக்கும்?**

-எம்.ஏ.எம்.இன்ஷாப், கம்பளை.

சங்கர் அந்நியனுக்குப் பிறகு பெரும் பரபரப்போடும் பிரமாண்டமாகவும் இயக்கப் போகும் படம் 'சிவாஜி'. இதில் சூப்பர் ஸ்டார் ரஜினிக்கு ஜோடியாக ஸ்ரேயா நடிக்கிறார். சங்கருக்கு நந்திதாதாஸை வைத்து இயக்கும் எண்ணம் இப்போதைக்கு இல்லை. உதாரணத்துக்கு 'அந்நியன்' படத்தில் வரும் 'கண்ணும் கண்ணும் நோக்கியா' என்ற பாடலுக்கு நந்திதா பொருத்தமாகவா இருப்பார்.

**எம் மத்தியில் இன்னும் சிலர் மற்றவர்களை ஏமாற்றி பிழைப்பு நடத்துவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-ஆர்.உமா, எல்ல.

சிறந்த அரசியல்வாதிகள் என்றுதான்.

**தீபாவளி விசேஷமாக என்ன செய்யப் போகிறீர்கள்?**

-ம.தவச்செல்வி, கண்டி.

சுனாமி தாக்கிய பத்து மாதமாகப் போகிறது. ஒரு வருடமாகிப் போனாலும் அந்த மக்களுக்கு உரிய உதவிகள் சரியாகச் சென்றடையவில்லை. போன தீபாவளிக்குச் சொந்த வீடுகளில் இருந்தவர்கள், இந்தத் தீபாவளிக்கு அகதி முகாமில். இந்த வேதனைக்கிடையில் எனக்கு மட்டும் என்ன விசேஷம் இருக்க முடியும்.

**மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் அடுத்த பிரதமர் யார்? இதை ஏன் கேட்கிறேன் என்றால் அநுரா அந்த எண்ணத்தில் இருப்பவர்போல் தெரியவில்லையே?**

-ஜி.நிக்ஷன், மன்னார்.

மஹிந்த ஜனாதிபதி வேட்பாளர், அநுரா பிரதமர் என்று ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மைதான். பரம்பரை அரசியல் குழப்பத்தில் அநுரா தேவைக்கு அதிகமாகவே குழம்பிப்போயுள்ளார். முதலில் மஹிந்தவை ஜனாதிபதியாக்கி, பின்னர் பிரதமராகிற வழியைப் பார்ப்பது புத்திசாதுரியமானது என்று உங்களுக்குத் தெரிந்த உண்மை கூட அவருக்குப் புரியவில்லையே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. எதுக்கும் முதலில் மஹிந்த ஜனாதிபதியாகட்டும். பின்னர் அடுத்த பிரதமர் யார் என்பதைப் பற்றி யோசிப்போம்.

**வேவு விமானம் விழுந்ததில் மர்மம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே! நான் கேட்கிறேன் சமாதான காலத்தில் வேவு விமானம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பறந்தது பிழைதானே?**

-கு.தவசீலன், வவுனியா.

கண்காணிப்புக் குழுவினர் சென்று பார்ப்பதற்கே புலிகள் அனுமதி மறுக்கிறார்கள். நிலக் கண்ணிவெடிகள் அப்பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கின்றனவாம். வவுனியா விமானத் தளத்திலிருந்து சிறுவர்கள் ரிமோட் கொன்ரோலில் இயக்குவதுபோல் இயக்கிக் கொண்டிருந்த வேவு விமானத்தில் தொழில் நுட்பக் கோளாறு ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை. புலிகள் தாக்குதல் நடத்தி விழுத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்திற்கு ஆதாரம் அதிகரிக்கிறது. அது சரி, ஒப்பந்தத்தில் கடல் வலயமும், ஆகாயமும் கூட புலிகளின் எல்லைகள் வகுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லையே. இதென்ன உங்களுக்கு புதுக்குழப்பம்.

**நீங்கள் இயக்குநராக இருந்தால் எப்படியான கதையமைப்புக் கொண்ட படத்தை இயக்குவீர்கள்?**

-வை.கமலினி, திருமலை.

கமலினி! இயக்குநராவதை விடவும் சிரமமானது புதுக் கதையைச் சிந்திப்பது. உங்கள் கேள்வியைப் படித்துவிட்டு நானும் பல வழிகளிலும் சிந்தித்துவிட்டேன். எல்லாக் கதைகளுமே சினிமாக்களில் வந்துவிட்டதாகவே தெரிகிறது. என் அவசரத்துக்கு புதிய கதை வரமாட்டேன் என்கிறது. பழைய கதைகளோடு கொஞ்சப்பேர் இலங்கை தமிழ் திரைப்படத்துறையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கையில் புதிய கதையைக் கண்டுபிடித்துத்தான் என்ன செய்வது.


**சிரிக்கும் படியாக உங்களிடம் கதை கேட்டு நீண்ட நாளாகிவிட்டது. இருந்தால் எடுத்து விடுங்களேன்.**

-ஆ.சங்கரன், மாத்தளை.

நீண்ட நாட்களுக்கு முன்பு வாசித்த முல்லாவின் கதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. சிரிப்பு வருகிறதா பாருங்கள்.

ஒரு நாள் முல்லா நஷ்ருதீன் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார்.

அரசவையில் வார்த்தை ஜாலமும், நகைச்சுவையோடும் கதைபேசி பொற்காசு



நந்திதா தாஸ்

கள் வாங்கும் முல்லா தனியாக வருவதைக் கண்டுவிட்ட வழிப்பறிக் கொள்ளையன் முல்லாவை மடக்கி, அவரது கழுத்தில் கத்தியை வைத்து அழுத்திக்கொண்டு கேட்டான்.

அரசனிடம் பொற்காசுகள் வாங்கவும், ஊருக்குள் நல்ல பெயர் எடுக்கவும் எவ்வாறு பேசக் கற்றுக் கொண்டீர்? "அந்த இரகசியத்தை எனக்குச் சொல்லாவிட்டால் தலையைத் துண்டித்து விடுவேன்" என்றான்.

கழுத்தில் கத்தியிருப்பதால் அண்ணாந்தபடி இருந்த முல்லா, கொள்ளையனிடமிருந்து தப்பிப்பதற்கு யோசித்துவிட்டு, "இதில் இரகசியம் ஒன்றுமில்லை. இதோ வானத்தில் முப்பதாயிரம் அடி உயரத்தில் தங்கப் பறவை ஒன்று பறந்து கொண்டிருக்கிறது. அது உனது கண்களுக்குத் தெரியுமானால் நீயும் என்னைப் போல் பேசலாம்" என்றார்.

கொள்ளையனும் வானத்தைப் பார்த்தான். தங்கப் பறவை இல்லை. ஆத்திரத்தோடு "முல்லா என்னை ஏமாற்ற நினைத்தால் கொலை செய்து விடுவேன். எங்கே தங்கப் பறவையைக் காணவில்லையே" என்றான்.

அப்போது முல்லா, "அந்தத் தங்கப் பறவை உனக்குத் தெரியவேணுமென்றால் உனது கழுத்தில் இந்தக் கத்தியை வைத்து அழுத்திப் பிடிக்க வேண்டும். வேண்டுமானால் அந்த உதவியைச் செய்கிறேன்" என்றார்.


முல்லாவை நம்பி கழுத்தையும் கத்தியையும் கொடுக்க விரும்பாத கொள்ளையன், அவரது சாதுரியத்தை ஏற்றுக்கொண்டு விடுவித்தான்.



# கிரிக்கெட்டின் வரலாறு

60

**1984ஆம்** வருடம் லோட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கெதிராக தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்ட இலங்கை அணி வீரர் அரவிந்த டி சில்வா, 1994 - 95களில் சிம்பாப்வே அணியுடன் புலவாயோவில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின்போது ஹீத் ஸ்ட்ரீக்கின் பந்து வீச்சில் தனது ஆரம்ப ஆட்டத்தின் போது ஓட்டம் எதனையும்



ஹீத் ஸ்ட்ரீக்

பெறாத நிலையில் ஆட்டமிழந்துள்ளார்.

இதுகால வரையில் இவர் தொடர்ந்து 75 இன்னிங்ஸ்களில் விளையாடி இருப்பதுடன் ஒரு போதும் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


இக்கால கட்டத்தினுள் அரவிந்த டி சில்வா 44 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 2,779 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டிருந்தார். இதே நேரம் ஒரு டெஸ்ட் போட்டியின்போது இரு இன்னிங்ஸ்களிலும் இரு சதங்களைப் பெற்றுக் கொண்ட பெருமையும் இவருக்குண்டு.

1996ஆம் வருடம் ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் அணியுடன் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் போது இவர் முதலாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1965ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி கொழும்பில் பிறந்த பின்னதுவகே அரவிந்த டி சில்வா 93 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 6,361 ஓட்டங்களை (சராசரி 42.97) பெற்றுள்ளார். இதில் 18 சதங்களும் 21 அரைச் சதங்களும் அடங்குகின்றன. 1990 - 91களில் நியூசிலாந்து அணிக்கு எதிராக இவர் பெற்ற 267 ஓட்டங்களே இவர் பெற்ற அதிக ஓட்ட எண்ணிக்கையாக உள்ளது.

இதேநேரம் டெஸ்ட் போட்டிகளின் போது இவர் 29 விக்கெட்டுகளைப் (சராசரி 41.65) பெற்றுக்கொண்டுள்ளார்.

இதே வேளை, ஒரு டெஸ்ட் போட்டியின் போது இரு இன்னிங்ஸ்களிலும் சமமான எண்ணிக்கையிலான ஓட்டங்களை பெற்ற உலகின் முதலாவது கிரிக்கெட் வீரர் துலிப் மெண்டிஸ் ஆவார்.



அரவிந்த

1982ஆம் வருடம் சென்னை செப்பொக் மைதானத்தில் இந்திய அணியுடன் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் போது இவர் முதலாவது இன்னிங்ஸில் 105 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 105 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்.

1952ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி கொழும்பில் பிறந்த இவர், 24 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 1,329 (சராசரி 31.64) ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். இதில் 4 சதங்களும் 8 அரைச் சதங்களும் அடங்குகின்றன.

இவர் டெஸ்ட் போட்டிகளின் போது ஒரு பந்து வீச்சிலாவது கலந்து கொள்ளவில்லை என்பதுடன் இவர் பெற்ற ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை 124 ஆகும்.

கொழும்பு, புனித தோமஸ் கல்லூரியின்



துலிப் மெண்டிஸ்

பழைய மாணவரான மெண்டிஸ் 1972ஆம் வருடம் அக் கல்லூரியின் முதல்தர அணிக்கு தலைமை தாங்கியுள்ளார்.

19 டெஸ்ட் போட்டிகளின் போது இவர் இலங்கை அணிக்குத் தலைமை தாங்கியுள்ளதுடன் இதில் இரு போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளார். 8 போட்டிகள் தோல்வி கண்டுள்ளன. 9 போட்டிகள் வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

பாகிஸ்தான் அணி சபைப் பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்டாக் மொஹமட், 1958-59களில் லாகூரில் வைத்து மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராகத் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்து கொண்டபோது இவரது வயது 15 வருடங்களும் 124 நாட்களுமாகும்.

1978ஆம் வருடம் இவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும்போது இவரது வயது 35 வருடங்களும் 127 நாட்களுமாகும். இதன்படி இவர் இருபது வருடங்கள் மூன்று நாட்கள் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுள்ளார்.

முஸ்டாக் மொஹமட், பாகிஸ்தான் அணி சார்பில் 57 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 10 சதங்கள், 19 அரைச் சதங்கள் அடங்கலாக 3,643 (சராசரி 39.17) ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். இவர் பெற்ற ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை 201 ஆகும்.

பந்து வீச்சில் 79 (சராசரி 29.22) விக்கெட்டுகளை இவர் கைப்பற்றிக் கொண்டுள்ளார்.

**- மைந்தன்**

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 2, கூட்டெண் - 5

2,11,20,29 போன்ற திகதிகளில் பிறந்தவர்களின் திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வந்தால் சந்திரன், புதன் ஆதிக்கத்திற்குட்பட்டவராவர். இவர்கள் ஓரளவு உயரமும், நல்ல அறிவும், அழகும் பெற்றுக் காட்சியளிப்பர். 2 எண்களில் சுறுசுறுப்பானவர்கள் இவர்களே. தொழில் செய்வதிலும் தான் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பதிலும் ஆர்வமாக இருப்பர்.

உத்தியோகத்திலிருக்கும் சிலர் படிப்படியாக உயர்ந்த நிலையை அடைவர். ஆடம்பரமான பொருள்களில் நாட்டம் உடையவராக இருப்பர். அதிகப் பணம் சேர்க்கும் அமைப்புக் கொண்ட இவர்கள் கமிஷன், ஏஜென்சீஸ், காண்ட்ராக்ட், அழகு சாதனங்கள், எலக்டிரிக் சாமான்கள் போன்றவற்றால் பொருள் சேர்ப்பர். எதிலும் முன் ஜாக்கிரதை கொண்ட இவர்கள், யோசனை செய்தே ஒரு காரியத்தில் இறங்குவர்.

மதக்கோட்பாட்டின்படி வாழும் இவர்கள் மற்றவர்களை மதிக்கும் மனப்பான்மையுடன் விளங்குவர். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பதையே விரும்புவர். தனக்கு அசதியாக இருந்தால், தன்னைத் தயார் செய்து கொள்ள ஏதாவது ஒரு வேலையைச் செய்து சுறுசுறுப்பை வரவழைத்துக் கொள்வர். தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும், உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற இலட்சியத்துடன் வாழ்வர். இளகிய மனம் கொண்ட இவர்களுக்கு, சொல் கடுமை போல் தெரியும். ஆனால் மனம் இளகியவையே. தன்னோடு பிறரையும் ஒப்பிட்டுப் பார்த்து உதவ முன்வருவர். மனபலம் உள்ளவர்கள் போல் பேசுவர். ஆனால் மனபலம் கொண்டவர்கள் அல்ல. உடல் பலம் கொண்டவர் போல் நடிப்பர். ஆனால் நரம்புசக்தி குறைந்தவர். எல்லா விஷயங்களையும் சிறிதளவாவது தெரிந்து வைத்திருப்பர். இவர்களுக்குப் பெரும்பாலும் நல்ல மனைவியர் அமைந்து விடுகின்றார்கள். 30 வயதிற்கு மேல் தொந்தி விழும். சில நேரங்களில் சொன்னதைத் திரும்பத் திரும்பச் சொல்லுவர். நடை, உடை, பாவனைகள் கவர்ச்சியாக இருக்கும். உடலுறவு விஷயங்களில் அதிக நாட்டம் உடையவர்களாக இருப்பர்.

சில நேரங்களில் கடிந்து விழுவர். இவர்கள் முன்னேற்றம் அடைய பல வாய்ப்புக்கள் வந்து சேரும். அப்படி வாய்ப்புகள் வந்தும், முன்னேற்றம் அடையவில்லை என்றால் இவர்களது பெயர் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையவில்லை என்பதுதான் காரணம். பெயரை நன்றாக அமைத்துக்கொண்டால் நிச்சயம் வாழ்க்கை சிறப்படையும்.

### தொழில்

கமிஷன், காண்ட்ராக்ட், அழகு சாதனங்கள், எலக்டிரிக்கல் சம்பந்தப்பட்ட தொழில், பச்சை நிறம் கொண்ட பொருட்கள் போன்றவைகள் வியாபாரம் செய்யலாம்.

### நோய்

நரம்பு சம்பந்தமான வியாதிகளுக்கும், பல் வலியும், வாயுக் கோளாறும் முதுகு வலியும், மூட்டுவலியும் வந்து நீங்கும். மன வியாதிகளும் வர வாய்ப்புள்ளது.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குச் சந்திரனும், புதனும் ஒன்று சேர்ந்து வருவதால் 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களிலும் 6, 15, 24, 33, 42 போன்ற சுக்கிர ஆதிக்க எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை***

***யோகமான எண் - 7, 5.***
***யோகமான திகதிகள் - 7, 16, 25; 5, 14, 23; 6, 15, 24.***
***யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து, சந்திர காந்தக்கல்.***
***யோகமான நிறம் - பச்சை, சாம்பல் நிறம்.***
***ஆகாத நிறம் - சிவப்பு***
***ஆகாத திகதிகள் - 9, 18, 27.***

அடுத்த வாரம் பிறப்பெண் 2, கூட்டெண் 6 பற்றிப் பார்ப்போம்

***உரிமை மடல்....***
***9ஆம் பக்கத் தொடர்ச்சி.....***

**பி**ரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இது குறித்து சில விடயங்களை மனம் திறந்து வெளிப்படையாகக் கூறி வருகிறார். தான் அதிகாரத்திற்கு வந்ததும் புலிகளின் தலைவர் பிரபாகரனோடு நேரடியாகப் பேசி, அவரது கருத்தையும் கருத்திலெடுத்தே இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

அது மட்டுமன்றி, இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட அனைத்து தமிழர் தரப்போடும் பேசியே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண உத்தேசித்துள்ளதாக அறிவித்துள்ளார். இது ஆரோக்கியமான ஒரு விடயமாகும் என நான் கருதுகின்றேன்!

'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்ற சமஷ்டி அடிப்படையிலான எமது இறுதி இலக்கு குறித்த பேச்சுக்களையே நாம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களோடு நடத்தி வருகின்றோம்!

மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்பது என்பது நிச்சயமாகிவிட்ட ஒன்று. அவர் ஆட்சியதிகாரத்தை ஏற்று குறுகிய கால எல்லைக்குள் எமது சமஷ்டி தீர்வு நோக்கிய பயணத்தின் முதலாவது கட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்பதை நான் உறுதியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்!

இன்று எதிரும் புதிருமாகப் போட்டியிடுகின்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருமே சமாதானம் குறித்த கோசங்களோடுதான் களமிறங்கியுள்ளார்கள்.

ஆனாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கொண்டிருப்பது நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையை மட்டுமே!

கடந்த காலங்களில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்களோ அல்லது புலிகளோ எந்த வெற்றியையும் எட்டியிருக்கவில்லை!

காரணம், அவர்கள் தங்களது பேச்சுவார்த்தை மேசையில் பேசியதெல்லாம் நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகள் குறித்த விடயங்களே!

நான் கடந்த வாரம் கூறியது போன்று எமது மூன்று கட்ட நகர்வை நாம் நடைமுறைப்படுத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமான ஒரு அணுகுமுறை என்பதை நீங்கள் அறிவீர்கள்!

முதலாவது - வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடத்துவது!

இரண்டாவது - 13 ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தி மாகாண சபைக்குரிய அதிகாரங்களைப் பலப்படுத்துவது...

மூன்றாவது கட்டம் - சமஷ்டித் தீர்வை நோக்கிய இறுதிப் பேச்சுவார்த்தையும் இறுதி நகர்வும்!

இந்த இறுதிக் கட்ட நகர்வின்போது எமது இலங்கைத் தீவில் வாழும் அனைத்து இன மக்களும் சமஷ்டியை நோக்கிய எண்ணங்களோடு சந்தேகங்கள் மறந்து ஓரணியில் நிற்க வாய்ப்புண்டு!

இந்த இறுதிப் பேச்சுவார்த்தையின்போது புலிகளும் இணைந்து செயற்படுவதற்கான வரலாற்று நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு!

ஏனெனில், கடந்த காலங்களில் - குறிப்பாக 90களின் ஆரம்பத்தில் - தேர்தலை வெறுத்து தேர்தலில் வாக்களிப்பதும் அதில் போட்டியிடுவதும் துரோகம் என்று கூறிய புலிகளை, 2001இல் தேர்தலில் பங்கெடுக்க வைத்தவர்கள் ஈ.பி.டி.பி. யினராகிய நாமும், மக்களாகிய நீங்களும் தான் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது!

ஆகவேதான் எம் இனிய மக்களே, ஈ.பி.டி.பி. யினராகிய நாமும், மக்களாகிய நீங்களும் கடந்த காலங்களைவிடவும் இன்னமும் இணைந்து செயற்படுவோமேயானால் எமது தாயக தேசத்தில் சமாதான நதி பெருக்கெடுத்து ஓடும்!

'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்ற எமது தாயக தேசத்தின் கனவு நிச்சயம் வெல்லப்படும்!

அதற்காகவே நீங்கள் ஜனநாயகத்தின் பக்கம் அணி திரண்டு நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையில் எமது தாயக தேசத்தில் ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவிட எதிர்கால ஜனாதிபதி கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை ஆதரிக்குமாறு உங்களுக்கு பகிரங்கவேண்டுகோள் விடுக்கின்றேன்!

நம்பிக்கைகளோடு நாளைய பொழுதுகளை நோக்கி நாங்கள் நகருவோம்!

இது குறித்த இன்னும் பல தரவுகளோடு அடுத்த வாரம் சந்திப்போம்

*மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!*
*சொல்வதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!*
*உறவுக்குக் கைகொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்!*
*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*
*என்றும் நாம் மக்களுக்காக!....*
*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

**நன்றி :- இதயவீணை**

# கலிலியோ கலிலீ (1564 - 1642)


## உலகை வியக்க வைத்தவர்கள்

கலிலியோ கலிலீ தலைசிறந்த இத்தாலிய விஞ்ஞானி வேறெந்த விஞ்ஞானியையும் விட மிகச் சிறந்த அறிவியல் முறைகளைக் கண்டுபிடித்தமைக்காக இவர் உலகப் புகழ் பெற்றார். இவர் பீசா நகரில் 1564இல் பிறந்தார். இளமையில் பீசாப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். ஆனால், பணவசதிக் குறைவினால் பாதியிலேயே படிப்பை விட்டார். எனினும் அதே பல்கலைக்கழகத்தில் 1589இல் இவருக்கு ஆசிரியப் பணி கிடைத்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு இவர் படுவா பல்கலைக்கழத்தில் பணியில் சேர்ந்து 1610 வரையில் அங்கு பணிபுரிந்தார். இந்தக் காலத்தின் போதுதான் இவர் தமது அறிவியல் கண்டுபிடிப்புகளில் பெரும்பாலானவற்றைக் கண்டுபிடித்தார்.

இவருடைய முக்கிய கண்டுபிடிப்புகளில் முதலாவது எந்திரவியல் தொடர்புடையதாகும். இலேசான பொருள்களை விடக் கனமான பொருள்கள் வேகமாகக் கீழே விழும் என அரிஸ்டாட்டில் கூறியிருந்தார். இந்தக் கிரேக்கத் தத்துவஞானியின் இக்கூற்றினை தலைமுறை தலைமுறையாக அறிஞர்கள் நம்பி வந்தார்கள். ஆனால், கலிலியோ இந்தக் கூற்றைச் சோதனை செய்து பார்க்க விரும்பினார். பல தொடர்ச்சியான பரிசோதனைகள் மூலம் அரிஸ்டாட்டிலின் இந்தக் கூற்று தவறானது என்பதை கலிலியோ விரைவிலேயே கண்டுபிடித்தார். காற்றின் உராய்வினால் வேகம் சற்றுக் குறையலாம் என்பதைத் தவிர, கனமான பொருள்கள் இலேசான பொருள்கள் இரண்டுமே ஒரே வேக வீதத்தில்தான் (Velocity) கீழே விழுகின்றன என்று அவர் கூறினார். (இதற்கான பரிசோதனைகளை பீசா சாய்கோபுரத்தின் உச்சியிலிருந்து பொருள்களைப் போட்டு கலிலியோ செய்து பார்த்தார் என்று கூறுவர். ஆனால், அந்தக் கூற்றுக்கு ஆதாரமில்லை.

இதைக் கண்டுபிடித்த பின்னர் கலிலியோ அடுத்த நடவடிக்கையில் இறங்கினார். ஒரு குறிப்பிட்ட கால அளவின்போது பொருள்கள் எவ்வளவு தூரம் விழுகின்றன என்பதை மிகக் கவனமாக அளவீடு செய்த இவர், கீழே விழுகின்ற ஒரு பொருள் செல்லும் தொலைவானது, அது கீழே விழுகின்ற வினாடிகளின் எண்ணிக்கையில் இருமடி வர்க்கத்திற்குச் சரிசம வீத அளவில் இருக்கும் என்பதைக் கண்டுபிடித்தார். இது வேக வளர்ச்சி வீதம் ஒரே சீராக இருக்கும் என்பதை உணர்த்துகிறது. இந்தக் கண்டுபிடிப்பு மிக முக்கியமானதாக அமைந்தது. இவர் தமது பரிசோதனைகளின் முடிவுகளைக் கணிதச் சூத்திரங்களாக வகுத்தமைத்துக் கொடுத்தார். இந்தச் சூத்திரங்கள் இன்னும் இறப்புடையனவாக விளங்கின. கணிதச் சூத்திரங்களையும், கணித முறைகளையும் விரிவாகப் பயன்படுத்துவது நவீன அறிவியலின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

சடத்துவ விதியை (Law of Inertia) இவர் கண்டு பிடித்தது மற்றொரு அரிய சாதனையாகும். இதற்கு முன்பு, இயங்கும் பொருள்களின் வேகம் சிறிது



கலிலியோ கலிலீ

சிறிதாகக் குறைந்து கொண்டே வந்து, அதனை மற்றொரு விசையினால் மீண்டும் முடுக்கி இயங்காவிடில், இயக்கமின்றி நின்று விடும் என்று மக்கள் நம்பி வந்தார்கள். இந்தப் பொதுவான நம்பிக்கையும் தவறானது என்று கலிலியோவின் பரிசோதனைகள் காட்டின. "உராய்தல் போன்ற வேகத்தைக் குறைக்கும் விசைகளை அடியோடு நீக்கிவிட முடியுமாயின், இயங்கும் ஒரு பொருள் இடைவிடாமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும்" என்று அவர் கூறினார். இந்த முக்கியமான விதியை நியூட்டன் மீண்டும் தெளிவாக வலியுறுத்தினார். அத்துடன் தமது இயக்க விதிகளில் முதலாவது விதியாகவும் அமைத்துக் கொண்டார். இந்த விதி இயற்பியலில் இன்றியமையாத விதிகளில் ஒன்றாக- விளங்குகிறது.

வானியல் துறையில் கலிலியோ செய்த கண்டுபிடிப்புகள்தாம் அவருடைய சாதனைகளில் தலையானவை ஆகும். 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வானியல் கோட்பாடுகள் பெருங்குழப்பத்தில் இருந்தன. கோப்பர்னிக்கசின் சூரிய மையக் கோட்பாட்டு ஆதரவாளர்களும், புவி மையக் கோட்பாட்டாளர்களுக்குமிடையே பெருஞ்சர்ச்சை நிகழ்ந்து வந்தது. கோப்பர்னிக்கசின் கோட்பாடு தான் சரியானது என்று 1604இலேயே கலிலியோ அறிவித்திருந்தார். ஆனால், அப்போது தமது அந்த நம்பிக்கையை மெய்ப்பிப்பதற்கான முறை எதையும் அவர் கண்டுபிடிக்கவில்லை. எனினும், 1609ஆம் ஆண்டில் ஹாலந்தில் தொலை நோக்காடி கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக கலிலியோ கேள்விப்பட்டார். அந்தத் தொலை நோக்காடி பற்றி முழுவிவரங்கள் கிடைக்காத போதிலும், கலிலியோ தமது சொந்த திறமையினால் அதைவிட மிக உயர்ந்த திறன் வாய்ந்த தொலை நோக்காடியை அவர் தயாரித்தார். இந்தப் புதிய கருவியின் துணையுடன் அவர் வானியல் ஆராய்ச்சித் திறனை வானுயர உயர்த்தி விட்டார் எனலாம். ஒரே ஆண்டில் தொடர்ச்சியாகப் பல பெரிய கண்டுபிடிப்புகளை அவர் செய்தார்.

அவர் சந்திரனின் மேற்பரப்பை ஆராய்ந்தார். அந்த மேற்பரப்பு சமதளமானதன்று என்பதைக் கண்டார்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி



### நோட்டீஸ் பலகை

> நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

"இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவோம் இந்த நாட்டில, சொந்த நாட்டில, நம் நாட்டிலே" இப்படி ஒருத்தர் குதிரைக் கணக்கா, சொரி சொரி குதிரையிலே ஏறி கெம்பசும் பார்ளிமெண்டும் போன ஒருத்தர் பாடிக்கொண்டு திரியிறார். அதென்னங்கோ பாட்டை மாத்திப் பாடிப்போட்டார் எண்டு யோசிக்காதேங்கோ. உண்மையில ஆள் ஆடித்தான் போயிருக்கிறார். யாழ்ப்பாண மாணவர்கள் அடிச்சுவிட்டாங்கள்..... 'சீச்சீய்' வாய் தடுக்கிப்போட்டுது. காட்டி விட்டாங்கள் ஒரு காட்டு. போன கிழமை யாழ்ப்பாண மாணவர்கள் ஒட்டு மொத்தமாய் திரண்டெழுந்து தங்கட அதிபர்மாரைக் கொலை செய்ததைக் கண்டிச்சு குடாநாட்டு பாடசாலைகள் எல்லாம் மூடினது மட்டுமில்லீங்கோ, அலுவலகங்கள், கடைகள் எல்லாத்தையும் மூடப்பண்ணி ஸ்தம்பிக்கப் பண்ணிப் போட்டாங்கள். மாணவர் சக்தி மாபெரும் சக்திதான்.

இயக்கக்காரரும் இதென்னடா தங்களுக்கு எதிரா ஒரு புது தலையிடி எண்டு யோசிச்சத விட, அவையளுக்கு என்னெண்டு தான் முகம் கொடுக்கிறதெண்டதில என்ர நேரம் ஆயிட்டுதே எண்டு அழாக் குறையாகச் சொல்லுறார். யாழ்ப்பாணத்தில ஆகக் கூடிய விருப்பு வாக்கு எனக்குத்தான். பொங்கு தமிழுக்கு 3 லட்சம் பேரைத் திரட்டுவன். கம்பஸ் தொடங்கி முழு ஸ்கூல்களும் என்ர கட்டுப்பாட்டில தான் இருக்கு எண்டு விலாசம் காட்டினவர் முழுசிக்கொண்டிருக்கிறார்.

இப்ப என்னடாவெண்டால் விழுந்தாலும் மீசையில மண் படேல்ல எண்டு காட்ட வேணுமில்லையோ? அவங்கள் மாணவப் பிள்ளைகள் குடுத்த நோட்டீசும், ஒட்டின போஸ்டரும் அதில இருக்கிற மை காயுறத்துக்கு முந்தியே தன்ர பினாமியின்ட பெயரில, அதுதானுங்கோ உந்த ஒன்றியக் காரரிண்ட பெயரில அறிக்கை விட்டுப் போட்டார். எப்படி எண்டு தெரியுமோ. தங்கட பாட்டில பாடம் படிக்கப் போன பிள்ளைகளை ஏதோ தேசவிரோத சக்திகள் கெடுத்துப்போட்டாங்களாம். கல்வியை குழப்பிப்போட்டாங்களாம்.

இதில பெரிய ஜோக் என்னெண்டால், எங்கட மாணவப் பிள்ளைகள் இயக்கத்தாருக்கு எதிராய் கிளம்பி வெளிக்கிட்டத பற்றி வாய் திறக்காமல், அவற்ற ரிப்போட்ட மட்டும் வடிவாய்ப் போட்டு தமிழ் ஊடகங்கள் எண்டு சொல்லுறவை தங்கட விசுவாசத்தைக் காட்டிப்போட்டினம்.

ஒரு பக்கம் இப்புடி எண்டால், ஒருக்கா வழமையா என்ன நடந்து கொண்டிருக்கு, யோசிச்சுப்பாருங்கோ. காலாதி காலமும் ஹர்த்தால் எண்டும், போராட்டம் எண்டும் பிள்ளைகளிண்ட படிப்ப முடக்கி, அதுகள வீதிக்குக் கொண்டு வந்தது யாருங்கோ? அதைவிடப் பெரிய விசயம் கட்டாய ஆட்சேர்ப்பு எண்டு இயக்கக்காரர் ஆயுதப் பயிற்சிக்குக் கூடிய பேரை எங்க இருந்து பிடிச்சுக் கொண்டு போச்சீனம்? உந்த ஸ்கூல்களில இருந்து படிக்கிற பிள்ளைகளைத்தானே.

அப்ப எல்லாம் கல்வி பாழாய்ப் போகேல்லையோ? இப்ப என்னெண்டால் உதுக்கு எல்லாம் சிகரம் வைச்ச மாதிரி கல்வித் தூண்களையே பொட்டு பொட்டெண்டு போட்டு விட்டினம். இனியும் பொறுக்கேலாது எண்டு மாணவப் பிள்ளைகள் கொதிச்சு எழுந்திட்டாங்கள்.

ஹிஸ்டரியில பாருங்கோ ஒவ்வொரு கட்டத்திலேயும் கிளைமாக்ஸ் மாணவர் பக்கத்தில இருந்துதான் தொடங்கும். அதுண்ட தொடர்ச்சிதான் இப்ப ஸ்ராட் பண்ணி விட்டுது. மாணவர்களில கைவச்சு மிஸ் யூஸ் பண்ணிவிடக் கூடாது பாருங்கோ. மகா ஜனங்களுக்கு ஒண்டச் சொல்லுறன். இப்ப மாணவச் செல்வங்கள் எழும்பினது சுய எழுச்சியுங்கோ. அது வேராகி விழுதாகி மகா ஜனங்களாகிய நீங்களும் உண்மையை கண்டறிஞ்சு எழப்போறிங்கள் எண்டதை இயக்கக்காரர் நல்லாத் தெரிஞ்சு போட்டினம். தங்கட இருப்புக்கும் கள்ளத்தனத்துக்கும் ஆபத்து வந்திட்டுது. மாணவப் பிள்ளைகள் தங்கட அடி மடியில கை வைச்சிட்டாங்கள் எண்டதை தெரிஞ்சு கொண்டினம்.

இயக்கங்களிண்ட இருப்புக்கு ஆபத்து எண்டால் குதிரையார் அரசியல் பண்ண ஏலுமோ? உங்களுக்கு இப்ப ஆள் யாரெண்டு விளங்கியிருக்கும் தானே? யுத்தம் ஒண்டு வந்தால் வடக்கில இருந்து 40 ஆயிரம் சவப் பெட்டிகள அனுப்புவன் எண்டு பார்ளிமெண்டிலேயே குதிச்சவர். இப்ப, தானே சவப் பெட்டிக்குள்ள போகப் போறன் எண்டு பயந்திட்டாரோ தெரியாது?

கடைசியாய்ச் சொல்லுறன் சட்டிக்குள்ள இருந்த நண்டு தண்ணி சுடச்சுட கூதலுக்கு நல்லாய் இருக்குது எண்டு போட்டுக் கடைசில ஏலாம நெருப்பில விழுந்தீச்சாம். குதிரையாரும் இவ்வளவு காலமும் ஹர்த்தால், போராட்டம் எண்டும், ஆட்சேர்ப்பு எண்டும் கூதலுக்கு காய்ஞ்சு போட்டு கடைசில அதில முடியப் போறாருங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(27.10.2005 தொடங்கி 02.11.2005 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

துலாம் - சூரியன், வியாழன். விருச்சிகம் - புதன், வெள்ளி. மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது.
சந்திரன் சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் பலிதம், எதிர்பாரா நன்மை, உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, கடன் பயம் நீங்கும், புதிய முயற்சி, மனக்குறை நீங்கும், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் நன்மை, பணவரவு தடை, வீண்குறை கேட்டல், பெரியோர் உதவி, கௌரவம், குடும்பப் பேறு, உத்தியோக மாற்றம், பிரயாண மிகுதி, மாணவர் கல்விக் கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, புதிய முயற்சி, பணவரவு, மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் கூடிய இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் கஷ்டம், பணவரவு தடை, மனப் பயம், வீண் செலவு, வெளியிடப் பயணம், குடும்பச் செலவு, உத்தியோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் நன்மை, பணவரவு, உயர்ந்த எண்ணம், பிரயாணக் கஷ்டம், பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, உயர்ந்தோர் நட்பு, வெளியிட வாசம், அன்னியர் சகவாசம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் பகை, மனக்கலக்கம், பணவரவு குன்றல், கடன் பயம், இனசன நன்மை, குடும்பச் செலவு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் பகை, கவனக் குறைவு, பணக் கஷ்டம், பெரியோர் சகாயம், உறவினர் தொல்லை, குடும்ப செலவு, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 02.**

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.) தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும், பணவரவு, பிரயாண சுகம், இனசன மேன்மை, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மாற்றம், புதிய பதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் கஷ்டம், பெரியோர் உதவி, பலவித எண்ணம், குடும்பக் கவலை, முரண்படும் தன்மை, உத்தியோகக் கஷ்டம், வீண் மனஸ்தாபம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மேன்மை, எதிர்பார்ப்பு நிறைவு, பணவரவு, காரியானு கூலம், இனசன நன்மை, உத்தியோக உயர்ச்சி, புதிய பதவி, மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் பகை, வீண்குறை கேட்டல், மறைமுக எதிர்ப்பு, முயற்சித் தடை, குடும்ப நன்மை, பண விரயம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

இதய வீணை


தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை
கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6
நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல – 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |



# குற்றவாளி

**ஈராக்** ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்காவால் கைதுசெய்யப்பட்டது உலகறிந்த உண்மை. ஆயினும் அவருக்கெதிரான வழக்குகளை அமெரிக்கா இன்னும் விசாரணைக்குட்படுத்தவில்லை. மற்றைய நாடுகளின் வற்புறுத்தலினால் சதாம் ஹுசைனை சென்ற வாரம் விசாரணைக்காக விசாரணைக்காக பக்தாத் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. கைது செய்யப்பட்டாலும் தனது கம்பீரம் சற்றும் குறையாமல் சதாம் ஹுசைன் காட்சியளித்ததுதான் அனைவரையும் வியக்கவைத்தது. ஆரம்ப விசாரணையில் நீங்கள் யார் என்று நீதிமன்றத்தார் வினவ, நான் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் என்று தனது வழமையான கம்பீரத் தொனியில் பதிலளித்தமை அனைவரையும் வியக்கவைத்தது. கைது செய்யப்பட்டாலும் தான் இன்னும் ஜனாதிபதி என்ற வெறி அவருக்கு அடங்கவில்லை.

# அழகான புள்ளி மானே!

**க**ண்ணுக்கு இனிய காட்சிகளைக் கண்டுகளிப்பது மனித இனத்தின் அன்றாட பழக்கவழக்கங்களில் ஒன்றாகும். அந்த வகையில் இந்த மான் இனங்களையும் காணும்போது மனதில் ஒரு புத்துணர்வு தோன்றுகிறதல்லவா. இவற்றைக் காண வேண்டுமாயின் அதிக தூரம் செல்ல வேண்டிய அவசியமில்லை. இவை இருப்பது அண்டை நாடான இந்தியாவின் தஞ்சை மாநிலத்தில் உள்ள சிவகங்கை பூங்காவில் ஆகும். தங்களைத் தவிர அழிக்கப்படும் இனங்களை மனிதர்கள் பாதுகாப்பதில் வல்லவர்கள்.

# உடல் முறியும் சாகசம்

ஜிம்னாஸ்டிக் சாதனைகளுக்கு கொடி கட்டிப் பறக்கும் சீன தேசம் தமது சாதனைகளை இன்னொரு நாட்டுக்கு விட்டுக் கொடுப்பதே இல்லை. அந்த வகையில் இங்குள்ள சாதனை நங்கைகளும் சீனாவைத் தான் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் அதிகம் பங்கேற்கும் இவ் ஜிம்னாஸ்டிக் குழுக்கள் தற்போது அநேக பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றன. சீனாவின் ட்ருமேன் பல்கலைக்கழகத்தில் நடந்த கலை விழா ஒன்றிலே இவர்கள் நிகழ்த்திய சாகசங்களின் ஒரு கிளிக்கே. இதைப் பார்த்து வாசகர்கள் யாரும் செய்ய முற்பட்டால் பின்விளைவுகளுக்கு நாம் பொறுப்பல்ல...

**ஏதோ** சண்டை என்று யோசிக்கத் தோன்றுகின்றது அல்லவா. நினைத்தால் தவறில்லை. உண்மையில் இதுவொரு மோதல்தான். ஆனால் விரோத மோதலல்ல. விளையாட்டு மோதல். காற்பந்து போட்டிகளில் அதிகமாக இத்தகைய மோதல்கள் நிகழ்வது வழமை. அந்த வகையில் ஜேர்மனியில் மியூனிச் நகரத்தில் உபா செம்பியன் லீக் கால்பந்து போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் மியூனிச் அணியும் ஜூவெண்டர் அணியும் மோதியபோது மியூனிச் அணியின் வீரர் பந்தை எட்டி உதைக்க முற்படுகையில் இக் காட்சி எடுக்கப்பட்டது. ஆயினும் இப்போட்டியில் மியூனிச் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. வீரர்கள் விளையாட்டாக மோதினால் சரிதான்.



# விளையாட்டு மோதல்



